



ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
5, வேங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

| மாலை 6 | Nov. 1941, விஷு வருஷ கார்த்திகை மீ | முத்து 5 |
|---|---|---|


# பொருள் அடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| ஸர். டி. விஜயராகவாச்சாரியார் | ... | வே. ரா. சுந்தாராமன்; எம். ஏ. | 221 |
| என் பயிற்சி | ... | நியாயவாதி | 225 |
| விஞ்ஞானமும் சரித்திரமும் | ... | டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ. | 228 |
| விடுமுறை | ... | ரஸிகன் | 231 |
| உபோத்காதம் | | ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ.,பி.எல். | 243 |
| குப்பியின் புதுச் சொக்காய் | ... | சகுந்தலா ஸ்ரீநிவாஸன் | 248 |
| சித்த சாஸ்திரங்கள் | ... | கே. ஆர். ஆர். சாஸ்திரி | 253 |
| பிக்ஷாடனம் | ... | பேரன் | 255 |
| போகிற போக்கில் | ... | மணி | 256 |
| ஒரு குரங்கின் சாகஸம் | ... | வ. வேணுகோபாலன் | 259 |
| ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் | ... | கா. சி. வேங்கடாமணி | 261 |
| புஸ்தக விமர்சனம் | ... | | 262 |
| சினிமா விமர்சனம் | ... | | 263 |
| உதிர்ந்த மணிகள் | ... | | 266 |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர். நெ. 1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

M. K. கிருஷ்ண செட்டி
கோயமுத்தூர்

மதராஸ் விற்பனையாளர் :—

V. கனகய்ய செட்டி & Co.,
நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்,
மதராஸ்.

நவம்பர் 28உ முதல்

மதுரை - நியூ ஸினிமா
சேலம் - நியூ ஸினிமா
கோயமுத்தூர் - ராஜா
காரைக்குடி - நடராஜா
திருச்சி - வெலிங்டன்
திருநெல்வேலி - பாலஸ்

சென்னை - வெலிங்டனில் டிசம்பர் 20உ முதல்



# மதனகாம ராஜன்

கே. எல். வி. வஸந்தா
எம். வி. ராஜம்மா
கே. ஆர். செல்லம்
வி. வி. சடகோபன்
எம். ஆர். சுவாமிநாதன்
டி. எஸ். துரைராஜ்



ஜெமினி ரிலீஸ்

தயாரித்தார். அதில் ஓர் சட்டத்தைக் குறிப்பித்து அதிற் கண்டபடி கொலை யுண்ட பி. வி. குருஸ்வாமியின் அருவத் திற்குக் கலெக்டர் துரையவர்களால் உடனே அவ்விடத்தைவிட்டு அகல வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருந் தது. இவ்வுத்தரவைப் பலவிடங்களில் சுவர்களில் ஒட்டியும் தண்டோரா போட் டும் பரவச் செய்தார். அதற்கடுத்த இரவில் இவர் சில போலீஸ் ஜவான்க ளுடன் அத்தெருக்களில் தீவட்டிகள் சகிதமாய்ச் சுற்றிப் பார்த்து அவ்வுத் தாவிற்கு அப் பிசாசு அடங்கி நடக் கிறதா என்று சோதனை செய்தார். கொஞ்ச தூரத்திற்குப் பின்னல் கிராம ஜனங்களும் பயத்துடன் பின் தொடர்ந்து சென்று நடந்ததைக் கவனித்தனர். அப் பேய் எங்கும் காணப்படவில்லை. மறு நாளே ஜனங்கள் ஒவ்வொருவராகத் தங் கள் தங்கள் வீடுகட்குத் திரும்பிவந்து வசிக்கலாயினர். அத்துடன் பேய்களேயும் அடக்கக்கூடிய அந்தச் சர்க்காரிடம் அவ் வூராருக்கு இருந்த மதிப்பும் உயர்ந்தது!

இவர் கோயம்புத்தூர் ஜில்லா வாசி. 1875-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிறந் தார்: சென்னை இராஜதானிக் கலாசாலை யில் உயர்தரக் கல்வி கற்ருர். அந்த நாட் களில் சென்னை மாகாணத்தில் ஐ. வி. எஸ். என்னும் பதவிக்கு அடுத்தபடியா யுள்ள டெபுடி கலெக்டர் என்னும் வேலைக் குப் பரீக்ஷையின் மூலம் ஆட்களைத் தேர்ந் தெடுத்துக்கொண்டிருந்தனர். இப்பரீக்ஷை யைப் பின்பு நிறுத்திவிட்டனர். இப் பரீ க்ஷையின்மூலம் டெபுடி கலெக்டர் வேலைக்கு வந்தவர்களுள் ஒருவர் இவ் விஜயராகவாச்சாரியார் என்பவர். இப் பரீ க்ஷையில் இவர் தேறி வேலையிலமர்ந்தது (1898-ல்) இவருக்கு 23-ம் வயது நடக் கையில்.

இவர் பல பெரும் பதவிகளை வகித் திருக்கிருர். அவைகளுள் முக்கியமானவை களாக அடியிற் கண்டவைகளைக் குறிப் பிடலாம். 1912 முதல் 1917 வரையில் சென்னை நகர பரிபாலன சபையில் வரு மான உத்தியோகஸ்தர். 1917—1918-ல் சென்னை வருமான இலாகாவை நிர்வகிக் கும் போர்டிற்குக் காரியதரிசி. 1918-ல் சென்னை சர்க்காரில் நில சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பாதுகாக்கும் இலாகா வின் தலைவர். 1918—19-ல் சென்னையில் கைத்தொழில் இலாகாவின் உப தலைவர். 1919—20-ல் கொச்சி சமஸ்தானத்தின் திவான் அல்லது மந்திரி. 1920 முதல் சில வருஷங்களுக்குச் சென்னை மாகாணத்தில் ஜில்லா கலெக்டர். 1922 முதல் 1925 வரையில் சீமையில் வெம்பிளியென்னு மிடத்தில் நடந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காட்சிச்சாலையின் இந்தியப் பகுதிக்குத் தலைவர். 1925—26-ல் சென்னைச் சர்க்கா ரில் முதலில் கைத்தொழில் இலாகாத் தலைவர், பின்பு மீன் இலாகாவின் தலைவர். அதேவருஷத்தில் மத்தியசர்க்காரின்சட்ட சபையில் அங்கத்தினர் ஆதல். 1926-ல் ஆகஸ்டு மாதத்தில் கானடா தேசத்தில் நடந்த ஒரு தேசியப் பொருட்காட்சியைத் திறந்துவைத்தல். 1926—29-ல் மத்திய சர்க்காரில் 'பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்' என்னும் சர்க்கார்ப் பதவிகட்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் சங்கத்தில் ஓர் அங்கத் தினர். 1929—35-ல் மத்திய சர்க்காரின் விவசாய மந்திராலோசனை சபையின் தலை வர்.

இவ்வளவு பெரும் பதவிகளைத் திறம் பட வகித்துவிட்டுச் சர்க்கார் சேவையி லிருந்து உபகாரச் சம்பளம் பெற்று வில கியபின்னரும் இவருடைய திறமையை வட இந்தியாவிலுள்ள ஒரு சமஸ்தானத் தார் பயன்படுத்திக்கொண்டு வருகின் றனர்.

சர்க்காருக்கு இவர் ஆற்றியிருக்கும் அரிய தொண்டிற்காக மெச்சி இவருக்குப் பல பட்டங்களைக் கொடுத்து கௌரவித் தனர். அவைகளுள் முக்கியமானவை 'திவான் பகதூர்,' 'கே. பி. யி,' 'ஸர்' என்பன.

இவர் வகித்த பதவிகளைப்பற்றி இவரை ஏதாவது கேட்டால் நகைச்சுவையுள்ள தாய் ஏதாவது சொல்லுவார்.

"கைத்தொழிலிலாகா அதிகாரியாகவா உங்களை நியமித்தனர்?" என்று கேட்டால்,

"ஆமாம், சைன்யங்கட்குப் போர்வைகள் நயமாகச் செய்யவேண்டுமென்று விரும்பினர். உடனே என்னை இவ்வுத்தியோகத்திற்கு அனுப்பி அக் காரியத்தைச் சாதிக்கச் செய்தனர்," என்பார் புன்னகையுடன்.

"அதைச் செய்து முடித்தீர்களா?" என்று கேட்டால்,

"அதெப்படி முடியும்? அதற்குள் என்னைக் கொச்சிக்குத் திவானாக மாற்றிவிட்டார்களே" என்பார். இதைக் கேட்டுவிட்டு இடியிடியென்று சிரிக்கவேண்டியதுதான்!

"மீன் இலாகாவா?" என்று வியப்புடன் கேட்டால், "ஆமாம், நான் மீன் உண்ணு வகுப்பைச் சேர்ந்தவனல்லவா? ஆகையால் நான்தானே அப் பதவிக்குத் தகுதியானவன்" என்பார்.

அந்த இலாகாத் தலைவர் பதவியிலிருக்கையில் மத்திய சட்டசபையில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டதை இவர் ஹாஸ்யமாய், "மீன்கள் நிறைந்த இத் தொகுதியிலிருந்து சட்டசபைக்கு எனக்குத் தேர்தல் கிடைத்தது" என்று குறிப்பார்.

"'வெம்பிளி'யில் என்ன செய்தீர் என்றால், "மூன்று வருஷங்களாக முனைந்து ஒரு கே. பி. யி. பட்டத்தையும் ஆயிரக்கணக்கான சிநேகிதர்களையும் சம்பாதித்துக்கொண்டேன்" என்பார்.

மத்திய சர்க்காரின் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் நான்கு வருஷ காலம் ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தை நாடிவந்த நூற்றுக்கணக்கான வாலிபர்களை,

"ஸூயஸ் கால்வாய் எவ்வளவு ஆழம்?

"கானேரித்தீவின்"—பெயர் கேட்கப்படாத ஓர் இடத்தைக் குறித்து—

"வரி வசூலிப்புக் கொள்கையைப் பற்றி உனக்கென்ன தெரியும்?"

"சூரியன் நம்மிடத்திலிருந்து எவ்வளவு தூரம்?",

இவை போன்ற கேள்விகளைப் போட்டு வாட்டு வாட்டென்று வாட்டினர். எனெனில் பின்னல் கலெக்டர் வேலையைச் சரிவரச் செய்ய வேண்டுமென்றால் இவைகள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமல்லவா?

நான் முதன் முதலில் இவரைச் சந்தித்தவுடனேயே இவருடைய நகைச்சுவையிலுள்ள பற்றுதல் விளங்கி விட்டது. அன்று ராஜதானிக் கலாசாலையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக இவரை வரவழைத்திருந்தோம். அன்றைய தினம் அவ்விடத்திற்கு வர இவரை சம்மதிக்கச் செய்தவர் எங்கள் ஆசிரியர்களில் ஒருவர். இதற்குக் கைம்மாறாக இவர் தன்னுடைய பிரசங்கத்தில் அவ்வாசிரியரை வெளுத்து வாங்கி விட்டார். அடிக்கொரு முறை தான் சொல்லுவதில் ஏதாவது குற்றமாவது, எங்களுக்குப் பிடிக்காததாகவாவது இருந்தால் அதற்கு ஜவாப்தாரி அவ்வாசிரியர் தான் என்று சொல்லிக் காட்டிவிட்டார். "ஊரை விட்டு வெளியேறிய சென்னை மாகாணத்தவர்" என்னும் விஷயத்தைப் பற்றிய அன்றைய பிரசங்கத்தைப் போல் நாங்கள் அக்காலாசாலையில் வேறொன்றையும் ரஸிக்கவில்லை. அவ்வளவு நகைச்சுவை ததும்பி யிருந்தது.

வாழ்க்கையிலே உஹளாஸ்யம் என்பது இன்றியமையாதது என்பது இவர் கொள்கை. இதை இவர் தான் நிர்வகித்த ஒவ்வொரு பதவியிலும் நடைமுறையில் கடைப்பிடித்துக் காட்டினர். என்றும் இவர் ஓர் இளைஞனின் உள்ளத்துடனேயே இருப்பதற்குக் காரணம் இதுதான். தான் வகித்த பதவிகளுள் எதை இவர் அதிகமாய் விரும்பினர் என்று இவரை ஒருவர் கேட்டதற்கு இவரளித்த விடையும் இதையே காட்டுகிறது. அவர் கூறிய பதில் பின் வருமாறு:—

"எனக்கு எல்லாம் பிடித்தவையே. வாழ்க்கையில் நகைச்சுவையுள்ள பகுதிகளும் அதில்லாத வரண்டு போனவைகளும் கலந்தே தோன்றுகின்றன. முன்னதாகக் கூறியதைத் தேடிப் பிடித்து அனுபவித்தால்

வாழ்க்கையில் கசப்பென்பதே தோன்றுது."

இம் மனப்பான்மையை உடைய தனுல்தான் இவர் தன் உத்தியோகங்களுள் எதைப்பற்றியும் கேட்போர் பரவசமடையும் ரீதியில் பேசுவது இயலுகிறது. ஒரு முறை இவர் ஒரு சிறுவனிடம் தன்னுடைய மத்திய சர்க்காரின் விவசாய இலாகாத்தலைவர் பதவியில் தான் செய்து வந்த வேலையைப்பற்றிச் சொல்லி வருகையில் அச்சிறுவன்,

"இவ்விளையாட்டுக்களுக் கெல்லாமா உங்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கிறுர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டானும்.

தென்னிந்தியாவைப் பற்றி வட இந்தியர்கள் கொண்டுள்ள தப்பபிப் பிராயங்களைத் திருத்துவதிலும் இவர் இந்நகைச்சுவையையே பயன்படுத்தி இருக்கிறுர். ஒரு முறை ஐக்கியமாகாணத்தில் ஓரிடத்தில் இவரை அவ்வூரான் ஒருவன், "எங்கே, 'மதராஸி' பாஷையில் கொஞ்சம் பேசுங்கள்" என்று கேட்டுக்கொண்டான். அதற்குப் பளிச்சென்று இவர், "எங்கே, தாங்கள் கொஞ்சம் 'ஐக்கிய மாகாணம்' பேசுங்கள்" என்று பதிலளித்தார். தன்னுடைய பிழையை அவன் உடனே அறிந்து கொண்டு வெட்கினுன்.

இந்த நகைச்சுவையினுல் இவர் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கும் சுவாரஸ்யமான சம்பவங்களை நாள் முழுவதும் ஓயாமல் சொல்லிக்கொண்டே போகலாம். அவைகளுள் ஓரிரண்டுமட்டும் இங்கே குறிப்பிடப்படுகின்றன. ஒரு முறை ஜெர்மனி தேசத்தில் கலியாணமாகாத ஓர் இளம் பெண்மணியும் அவளை மணக்கவிருந்த வாலிபனும் இவருடன் ரயிலில் ஒரே வண்டியில் பிரயாணம் செய்ய நேரிட்டது. இவருடன் அவர்கள் சம்பாஷிக்கலாயினர். வழி முழுவதும் அச் சம்பாஷணையையும் அதிலுள்ள இவருடைய ஹாஸ்யக் கூற்றுகளையும் ரஸித்து வந்த அம்மாது தாங்கள் இறங்கவேண்டிய விடம் வந்தவுடன் தன் காதலனைப் பார்த்து,

"உன்னை மணப்பதாக முன்பே வாக்குறுதி செய்திரா விடில் இம் மனிதருடனேயே நான் சென்று விடுவேன். அவர் பேச்சே அவ்வளவு இனிப்பாக விருக்கிறது," என்றுளாம்.

வேருெரு சமயம் கானடா சென்றிக்கையில் ஸ்திரீகளே அடங்கிய வொரு கூட்டத்தில் இவர் பேச நேர்ந்தது. இவருடைய பெயரில் உள்ள "திவான்" என்பதற்குச் சரியான உச்சரிப்பென்ன என்று அங்குள்ளவர்களில் ஒரு பெண்மணி இவரைக் கேட்டபொழுது இவர் நகைத்துக் கொண்டே,

"அழகிய பெண்மணிகளே நிறைந்துள்ள இத்தகைய கூட்டத்தில் அப்பதத்தை 'டியர் ஒன்' (Dear One அதாவது 'அன்பிற்கினியவனே') என்றுதான் சொல்ல வேண்டும்" என்றுர். நெடுநாட்கள் வரையில் அவ்வூரிலிருந்து இவருக்கு வந்து கொண்டிருந்த லிகிதங்களில் அவர்கள் இவரை அப்படியே அழைத்து வந்தனராம்.!

இத்தகைய நகைச்சுவை யுள்ளவருக்குச் சென்ற விடமெல்லாம் சிநேகிதர்கள் ஏற்பட்டதில் ஆச்சரியமொன்று மில்லை. எனவே இவர் கானடாவுக்குச் சென்று திரும்புகையில் அவ்வூரின் அரசாங்கத்தார் ஓர் ஒலி பரப்பின் மூலம், "உங்கள் 'திவான்' எங்கள் ஊருக்குமட்டும் வந்து போகவில்லை. எங்கள் வீடுகளுக்குள்ளும், ஏன்! எங்கள் ஹிருதயங்களுக் குள்ளுங் கூட, புகுந்து விட்டார்" என்று இவரைப் பாராட்டினர்.

ஹாஸ்யமே நிறைந்துள்ள இவர் வாழ்வில் மனக்கசப்பென்பதே இல்லையோ வென்று சிலர் சந்தேகிக்கலாம். துரதிருஷ்ட வசமாக அத்தகைய பகுதிகளையும் இவர் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது. கல்வி கற்கையில் வெகு துடியாயிருந்து பின்பு ஐ. ஸி. எஸ். பதவியை ஏற்ற இவருடைய மூத்த பிள்ளை இளம் வயதிலேயே இவ்வுலகை விட்டகன்றுன். இத்தகைய துயரத்தினுல் மனம் உடையாமலிருப்பதற்குப் போதிய மனவுறுதியையும் இவர் இந் நகைச்சுவையிலிருந்தே அடைந்து வருகிறுர் போலும்.!

# என் பயிற்சி*

[நியாய வாதி]

சுமார் 20 வருஷங்களுக்கு முன் நான் தொழில் ஆரம்பிக்கும் பொழுது, தமிழ் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமே கிடையாது. பி. ஏ. பட்டம் பெற்றவர்களுக்கு இரண்டு தொழில் நிச்சயமுண்டு. சர்க்கார் வேலையும் அதாவது முதல் தேதியில் கையில் சம்பளமும், அல்லது வக்கீல் வேலையும், ஒரு காலத்தில் ஜட்ஜ் ஆகலாம் என்கிற கனவும். இந்தக் கனவு சிறு பிராயம் முதல் என்னைத் தொடர்ந்து நின்றது. ஆகையால் நான் கலாசாலையை விட்டதும், எந்தத் தொழிலுக்குப் போகவேண்டும் என்ற சந்தேகமும், குழப்பமும் கிடையாது.

இருபது வருஷத்திற்கு முன் வக்கீல் தொழிலில் இருந்த மோகத்திற்கு அளவேயில்லை. இப்பொழுது சினிமாவுக்கு இருக்கிற மோகம்போல் தான். எங்கள் நாளில் கிறிஸ்தவர் கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு, எப்பொழுது இந்த பி. ஏ. பரிட்சையைத் தீர்த்துவிட்டு, ட்ராம் லயனைத் தாண்டி, லா காலேஜில் சேர்ந்து, உல்லாசமாய்க் காலத்தைப் போக்கி, ஹைகோர்ட்டில் வக்கீல்களாகத் தாக்கல் செய்யப்பட்டு, நாலுகைச் சட்டைகளுடன், கட்டும் கையுமாகச் சலவைக் கல் காரிடார்களில் உலவி வருவோமென்ற அவா, தாய் முன் கட்டப்பட்ட கன்றுபோல் இருப்பது உண்டு.

ஹைகோர்ட்டில் ஒரிஜினல்ஸைடில், இளமையிலேயே கியாதிபெற்ற, தலைவராயிருந்த ஒரு பெரிய வக்கீலிடம், நான் தொழில் பயிற்சி பெற்றேன். அந்தச் சமயத்தில் ஹைகோர்ட்டில் நியாயவாதத் தொழில் இருந்த உன்னத நிலைமை கவனிக்கத் தக்கது. பாஷ்யம் அய்யங்கார், மணி அய்யர், வி. கிருஷ்ணசாமி அய்யர், பி. ஆர். சுந்தரய்யர். இவர்களின் மேதையினாலும் விடாமுயற்சியினாலும், சீலத்தினாலும், வக்கீல் என்னும் பெயருக்கே, புகழும், மேன்மையும் குடிகொண்டிருந்தது. நான் பயிற்சி பெறும் சமயத்தில் உள்ள தலைவர்களும் இந்தப் பிகிரார்ஜிதத்தைக் குறைக்காமல் நடத்தி வந்தார்கள். அவர்களது குணகுணங்களை இப்பொழுது கொஞ்சம் விவரிக்கலாம்—அதுவே இந்தத் தொழிற் பயிற்சி மேன்மையின் முக்கிய அம்சங்களாகும்.

கே. சீனிவாசய்யங்காரும், எஸ். சீனிவாசய்யங்காரும் முக்கிய தலைமையை வகித்து வந்தார்கள். எஸ். சீனிவாசய்யங்காரின் நுட்பமான புத்தியையும், அவரது அறிவின் விசாலத்தையும், மதியின் ஆழத்தையும், சட்ட விஷயங்களில் கோர்வையான விற்பத்தியையும், அறிந்து புகழாதவர் ஒருவருமில்லை.

கே. ஸ்ரீனிவாசய்யங்காரோ விஷயங்களை அழகாகப் பொறுக்கியெடுத்து, கோர்வையாக 'மூக்கு-நாக்கு-வைத்து' போதனை சக்தியுடன் சொல்லும் திறமை வாய்ந்தவர். இதில் அவருக்கு நிகர் ஒருவரும் கிடையாது. இனிமையான குரல், தெளிவான புத்தி, சாந்தமான பார்வை; விஷயங்களைக் கடைந்தெடுத்து வெண்ணெயைப் போலத் திரட்டி, ஜட்ஜ் கையில் கொடுக்கும் திறமை.

டி. ஆர். ராமச்சந்திரய்யருக்கும் பெரும்பான்மையாக இந்த சாதுர்யம் உண்டு. ஆனால் இவர் வாக்கில் ஒரு தனிமையான அழகும், தெய்வானுகூலமும், முகத்தில் ஒரு களையும், சுறுசுறுப்பும் உண்டு. அச்சிட்ட விஷயங்களை ஸ்வரூபமாக்கி கட்டுக்கதைபோல் ஸ்வாரஸ்யமாய் வாழ்க்கையில் அனுபவங்களைப் பொருத்திச் சொல்லும் திறமை மிகவும் உண்டு. ஆற்று மணலில் பெருகும் ஊற்றுப்போல் அவர் பேச்சில் ஹாஸ்ய ரஸம் பெருகும். கேஸின் விஷயம் தெரியாமல் கோர்ட்டுக்கு வேடிக்கைப்

* 12-10-41-ல், திருச்சி ரேடியோவில் பேசப்பட்டது.

பார்க்க வந்தவர்கள்கூட, அவர் பேச்சைக் கேட்டு களிப்படைவார்கள்.

இவர்களைப்போல் டி. ரங்காச்சாரியாரும் மற்ருெரு தலைவர். நியாய வாதத் தொழிலுக்கே அவர் பிறந்தவர். சளைக்காமல் தைரியமாய் வாதிக்கும் சக்தி உடையவர். கேஸ்களில் பாயிண்டுகள் தோற்கத் தோற்க, தைர்யம் குன்ருமல் உத்ஸாகத்துடன் மீண்டும் மீண்டும் வாதிக்கும் திறமை யுடையவர். ஜட்ஜ்கள் பாதகமாயிருக்க இருக்க, அகண்டமான சிரிப்புடன் வலது கையை வயிற்றில் தடவிக்கொண்டே, அவ் விரோதத்தைச் சீர்ணம் செய்து விடுவார். கடைசிவரையில் ஒரு கை பார்த்துவிடுவார். ஸ்வாஸம் உள்ளவரையில் உயிர் போகும் கேஸை உயிர்ப்பிக்க முயலும் வைத்தியர் அவர். நொண்டிக்கு திரையை ஓட்டிச் செல்ல இவரைவிட மிஞ்சிய சாரதி ஒருவரும் கிடையாது.

இப்பேர்ப்பட்ட தலைவர்கள் ஹைகோர்ட்டில் நடமாடிவரும் காலத்தில், நான் பயிற்சிக்குப் போய்ச் சேர்ந்தேன். பயிற்சிக் காலத்தில் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்று நான் இப்பொழுது தெரிந்து கொண்டதைச் சொல்லுகிறேன். எப்படி ஓர் பயிரின் விளைச்சலானது நாத்தங்காலில் அது அடைந்த ஊட்டத்தைப் பொறுத்து நிற்கிறதோ, அப்படியேதான் ஒவ்வொரு தொழிலிலும் தேர்ச்சியானது அவரவர்கள் பயிற்சிக் காலத்தில் பெற்ற பயிற்சியையும் ஊக்கத்தையும் பொறுத்து நிற்கிறது.

நவீன நாகரிகத்தில் ஏற்பட்டிருக்கும் பல தொழில்களில் நியாய வாதத் தொழிலுக்குப் பயிற்சிக் காலம் முக்கியமானது. அதில் குறையேற்பட்டால் அந்தக் குறை நல்ல மரத்தில் விழுந்த பொறையைப் போல் எக்காலத்தும் நிலை நிற்கும். அந்தக் குறையை ஒருவிதத்திலும் மாற்றிக் கொள்ள முடியாது. பல ஹீனம் பல ஹீனம்தான். வாழ்வின் முடிவுவரையில் அக்குறை பின் தொடரும், ஆகையால் 'விளையும் பயிர் முளையிலே' என்கிற பழமொழி நியாய வாதத் தொழிலுக்கு நன்ருய் அமையும்.

உண்மையை ஆராய்ந்தால் நியாயவாதத் தொழிலுக்குப் பயிற்சிக் காலம் என்று ஆரம்பத்தில் ஒரு வருஷம் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் ஒவ்வொரு வருஷமும் மற்ற வருஷங்களுக்குப் பயிற்சிக் காலமென்றேநாம் கொள்ளலாம். ஏனென்ருல் அனுபவம் மிகுதியாக ஆக, பக்குவப்படுத்தி வைக்கப்பட்ட திராக்ஷை ரஸம் போல் நியாயவாதத் தொழிலுக்குச் சிறப்பும் தேட்டையும் உருசியும் அதிகரிக்கிறது. ஆகையால்தான் வக்கீல் தொழிலில் கக்ஷிக்காரர்கள் கிழப்புலிகளைத் தேடுகிருர்கள். பற்களிழந்தும் சொற்களுக்குக் குறைவுண்டோ ?

தற்காலத்தில் நியாய வாதத் தொழிலின் நிலைமையைப்பற்றி நாம் விஸ்தரிக்க வேண்டியதில்லை. கன்று போடாத பசுவைப்போல் நிற்கிறது. பாலில்லை, புல்லுக்குத்தான் நஷ்டம். ஒரு படி அரிசியில் ஆயிரம் பேருக்கு விருந்தளிக்கும் முறையிலிருக்கிறது. தொழில் இந்நிலைமையிலிருப்பதால் பயிற்சிக் காலத்தில் அவரவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சி இன்னும் பலப்பட வேண்டியது அவசியமாகிறது. இத் தொழில், போட்டிப் பந்தயம் போன்ற ஓர் போராட்டமாக ஆகிவிட்டது. வெற்றி பெற்ற சிலருக்கே பெரிய பரிசு உண்டு. பலருக்கு ஒன்றுமேயில்லை. இந்தப்போட்டியில் ஏற்படும் வேகத்தால் நியாயவாதத் தொழிலுக்கு வரவர ஓர் உயர்தரத் தொழிலுக்குள்ள அம்சங்கள் மாறி, வரவரக் கேவலம் வியாபாரத்தின் போக்கைப் போன்றிருக்கிறது. ஆனல் இந்த வியாபாரத்திலும் ஓர் உயர்தரத் தொழிலின் குணங்களைச் செலுத்தி வெற்றியடைய வழி இருக்கிறது. இவைகள் என்னவென்று பார்த்துத் தெரிந்துகொண்டு தொழிற்பயிற்சிக் காலத்தில் இவைகளை அனுபவத்திற் கொண்டு வருவோம்.

வக்கீல் தொழிலுக்கு ஓர் தெளிவான அறிவு அத்தியாவசியமாகிறது. மற்றும் விஷயங்களைச் சோதனை செய்து பிரித்துப் பார்த்து பாகுபாடு செய்யும் சக்தியும் வேண்டும். குழம்பி நிற்கும் புத்தி, நியாய வாதத் தொழிலுக்குப் பரஸ்பர விரோத

மானது ஒருநாளும் வெற்றி ஏற்படாது ஆட்டு மந்தையில் நிற்கும் ஆயிரம் ஆடுகளும் ஒரே மாதிரியாகத் தென்படும். இடையனுக்கு இடையன் வேலை தருமோ? தராது. ஒவ்வொருவிஷயத்தையும் பிரித்துத் தனிமையில் சோதித்துப் பார்க்கும் சக்தி வேண்டும். பிறகு இவைகளை ஒன்று கூட்டிச் சேர்த்து அழகாக விதரணையுடன் தொடுத்து ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு கதையாகச் சொல்லும் திறமை வேண்டும். இதனுடன் நியாய வாதத் தொழிலுக்கு விடா முயற்சியும் சேர்ந்தால் தங்கத்திற் பதித்த இரத்தினம் போல் சோபிக்கும். சட்டப் புத்தகங்களைச் சலிப்பில்லாமலும், கண் கூசாமலும் பார்க்கும் திறமையும் பொறுமையும் வேண்டும். தபால்காரர்கள் தெருவாரியாகவும் நம்பர் வாரியாகவும் கடிதங்களைப் பொறுக்கி அடுக்குவது போல் நியாயவாதிகளுக்கும் விஷயங்களைப் பொறுக்கி அடுக்கி உருவப்படுத்தும் சாமர்த்தியமும் வேண்டும். இன்னும் தாம் நடத்தும் கேஸ்களில் முக்கியமான குறிப்புகளென்ன, சில்லறைக் குறிப்புகளென்ன என்று பிரித்து முக்கிய மானவற்றைக் கொண்டு ஓர் பிளான் முன்னதாகவே தயாரித்துக் கேஸை நடத்த வேண்டும்.

வெற்றிக்குப் பாடுபட்டுக் கேஸைத் தயார் செய்வது ஒரு பங்கு; ஜட்ஜைக் கைக்குள் போட்டுக்கொள்வது மற்றொரு பங்கு. ஜட்ஜுமுகம் கோணாமல் பிரியப்படுத்தி நயமாக நம் வழிக்குக் கொண்டு வரவேண்டியது அவசியம். வியாதிஸ்தர்களிடம் வைத்தியர்கள் பிரியமாகப் பேசுவது எவ்வளவு குணமோ அப்படியே நியாய வாதிகள் ஜட்ஜுகளிடமும் கக்ஷிக்காரர்களிடமும் பிரியமாய்ப் பேசுவது உத்தமம். பொதுவாக விரிவானபடிப்பும், வாக்குவன்மையும் இத்தொழிலுக்கு பேருதவியளிக்கும். கடைசியாக எந்தப் பெரிய நியாயவாதியிடம் பயிற்சிக்கு நாம் சேர்ந்திருக்கிறோமோ அந்த நியாயவாதியின் குணகுணங்களை நாம் நன்கறிந்து நமக்குப்பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இது கொஞ்சம் கடினமாயிருந்தாலும் இளமைப் பருவத்திலேற்படும் 'தான்' என்னும் அகங்காரத்தை விட்டுவிட்டு, பெரிய நியாய வாதியின் பின் நிழல்போல் அவரைத் தொடர்ந்து நிற்கவேண்டும். அவர் சட்டப் புத்தகங்களைப் பார்க்கும் வழிகளையும் கேஸைப் பொறுக்கி எடுக்கும் வழிகளையும் விஷயங்களைக் கோர்வையாகச் சேர்த்து ஓர் பிளான் பண்ணும் வழிகளையும், நியாய வாதி முகங் கோணாமல் கோர்ட்டில் மழை போல் பிறர் மெச்சப் பொழியும் பேச்சுத் திறமையையும், வீட்டில் கக்ஷிக்காரர்களைத் திருப்திப்படுத்தும் திறமையையும், ஊக்கத்துடன் கவனித்துச் சுவானுபவத்திற்கொண்டு வந்தால் தொழிற் பயிற்சியில் நிச்சயம் தேர்ச்சியடையலாம். தொழிற் பயிற்சிக்காலத்தில் சிற்றுண்டிக் காலமே பிரதானமென்று கையாளும் அப்பிரண்டிஸ்களுக்கு கதிமோக்ஷமே கிடையாது. 'கேவலம் வாக்கு வன்மை இருந்தால் போதும்; நியாய வாதத் தொழிலில் எப்படியாவது வெற்றி அடையலாம்' என்று பொதுவாக இளைஞர்களிடத்துப் பரவி நிற்கும் நம்பிக்கை சுத்தப் பிசகு; இது மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குக் கூடப் போதாது.

எந்தத் தொழிலுக்கும் மேன்மையும் பிரகாசமும் கொடுப்பது யாதெனில், பொது விஷயங்களில் நல்ல படிப்பும், தேர்ச்சியும்தான். இஃது நியாய வாதத் தொழிலுக்குப் பசுவுக்குப் புல் போல், ஊட்டத்தைக் கொடுக்கும். இதை நமது நாட்டில் வக்கீல்கள் பொதுவாய் அனுஷ்டானத்தில் கொண்டு வரவில்லை. நமது சோர்வுக்கு இதுவே ஒரு காரணம்.

மணியய்யர், பாஷ்யமய்யங்கார், கிருஷ்ணசாமி அய்யர் போன்ற மேதாவிகள் உழைத்துச் சிறப்பூட்டிய இத்தொழிலை அந்நிலையிலேயே மறுபடியும் நிறுத்த வேண்டியது நமது முக்கிய கடமை. அதற்காக நாம் குன்றாத ஊக்கத்துடன் ஆரம்பப் பயிற்சிக்காலம் முதற்கொண்டு பாடுபடவேண்டும். எப்படி ஓர் தென்னை மரம் நன்றாய் வளர்ந்தோங்கிக் காய்க்க வேண்டுமென்றால் நல்ல செத்தாகப் பொறுக்கிப் பிள்ளை சாத்திப் பத்து வருஷம் பாடுபடுகிறோமோ அப்படியே தான்.

# விஞ்ஞானமும் சரித்திரமும்

[டி. பி. நவநீதகிருஷ்ணன். எம். ஏ., அண்ணாமலை நகர்]

சரித்திரமென்பது அடுத்தது காட்டும் பளிங்கை விடச் சிறப்பானது. கண்ணாடியில் வெளித்தோற்றத்தின் உருவை மட்டுமே காண்கிறோம். சரித்திரமென்ற கண்ணாடியிலோ மக்களின் உள்ளத்தோற்றத்தையும் காண்கிறோம். இவ்வுலக அரங்கில் நடிக்கும் பலரின் வாழ்க்கை உண்மையைப்பற்றி, அதன் துணைகொண்டு அறிகிறோம். இக்காலத்தில் புதுமையெனக் கருதப்படும் பலவும் பழமையானவையே யென்று சரித்திரம் காட்டுகின்றது. இன்றைய மகத்தான இன்னல்கள் எனக் கருதப்படுபவை பலவும், காலாந்தரத்தில் எழுந்தவையே யெனச் சரித்திர வாயிலாய் அறிகிறோம். நாம் பிழைப்பதும் பிழை செய்வதும் யாவும் முற்காலத்துச் சம்பவங்களின் விளைவுகளேயென்று உணர்கிறோம். நம் அனுபவத்தின்பாற்படாத பல உண்மைகளைப் பற்றி விரிவாய் அறிகிறோம். உலகின் பரிணாம வரலாற்றைக் கருதுங்கால், பெருமிதமான மன வெழுச்சியைப் பெறுகிறோம். சம்பவங்களின் வரலாற்றுத் தொகுதி மட்டுமே சரித்திரமாகாது. அவற்றின் உட் பொருள்களையும் அகக்கண் கொண்டு ஆராய்ந்தறிதலால், சரித்திரத்தின் மாட்சியை முற்று முணர்கிறோம். நுண்கலையையே பெரிதென்று கருதும் 'க்ரோஷே' (Croce) என்ற சுவையுணர்ச்சிக் கலைஞரும் (aesthete), விஞ்ஞானத்தையேத்தும், வெல்ஸ் (Wells) என்ற அறிஞரும், ஒருங்கே சரித்திரத்தின் மேன்மையைக் காட்டியுள்ளனர். அதுவே மக்கள் அறிவின் உச்ச நிலையை யுணர்த்தும் நூல் எனப் பாராட்டுகின்றனர்.

விஞ்ஞானத்தின் சரித்திரமும், அரசியல் முறை—சமய முறை இன்னோரன்னவற்றின் சரித்திரத்தைப் போன்றே, அறிவியல் நூலில் முக்கியமானதொன்றாகும். விஞ்ஞானக் களஞ்சியத்தில் பல பொருள்கள் உள்ளன. அவற்றின் பயனைப் பெறுதல் எங்ஙனம்? பொருளாக்கும் இயந்திரமொன்றினின்று, அதை ஓட்டத்தெரிந்தவன் உதவி கொண்டே பலன் பெறலாம். சிறந்த சித்திர மொன்றினின்று, நுண்கலைச்சுவையை யுணரும் மனப்பாங்கைக் கொண்டே, பெருமை யுணர்ந்து மகிழ்ச்சி பெறலாம். விஞ்ஞானமளிக்கும் பலவற்றின் பலனை அடைய வேண்டுமாயின், அவற்றின் தொடர்புகளைக் காணும் அறிவு இன்றியமையாதது. உயிரற்றுக் கிடக்கும் உடல் போன்ற, அப்பொருள்களுக்கு உயிரையூட்டுவது, அறிவேயாம். இவ்வகையான விரிந்த அறிவு சரித்தரீயமானது. உயிறற்றதும், அசைவற்றதுமாய்க் காணப்படும் பல விஞ்ஞானப் பொருள்களைச் சரித்திரத்தின் கண் கொண்டு ஆழ்ந்து நோக்கும் போது, அவற்றின் உண்மை இயக்கங்கள் புலனாகின்றன. அவற்றின் சிறப்பை உணர்கிறோம். ஒரு சிறு எடுத்துக் காட்டு கூறலாம்.

ஒப்பியல் உடற்கூற்று நூலிலும் (Comparative anatomy), அடியுயிர் நூலிலும் (Embryology) பொதிந்து கிடந்த பல பொருள்களின் ஆராய்ச்சியால், பரிணாமக் கொள்கை நிலைநாட்டப்பட்டது. பாலி (Paley), ஓவன் (Owen) என்ற விஞ்ஞானிகள் குறுகிய நோக்கத்துடன், தம் விஞ்ஞானப் பகுதியின் பாற்பட்ட வழியை மட்டும் ஆராய்ந்தனர். அவர் விஞ்ஞானச் சிறப்பெய்தவில்லை. டார்வினோ (Darwin) அப் பொருள்களையே, உலக சரித்திரத்தைக் காணும் பரந்த நோக்கத்துடன் பரிசீலனை செய்தார்! பரிணாமக் கொள்கையின் சிறப்பை விஞ்ஞானத்திற்கு அளித்தார்; அழியாப் புகழெய்தினார்.

விஞ்ஞானத்தின் சரித்திரத்தைக் கற்பதால் தற்காலிகமாகத் தோன்றும் தப்பெண்ணங்களை நீக்க இயலும்; பல்வேறு நாடுகளில் பல வேறு காலங்களில் மக்கள் கையாண்ட விஞ்ஞானத் தொழின் முறை

களினின்றும் விளைந்தவற்றை ஒப்பிட்டுப் பார்க்கலாம். மக்கள் புதுக் கருத்துக்களை எளிதில் ஏற்றுக்கொள்ளார்கள் என்பதும், சான்றுகள் பலவற்றுடன் விளக்கப்பட்ட உண்மைகளையும் பிடிவாதமாய் மறுப்பார்கள் என்பதும் சரித்திர வாயிலாய்த் தெளிவாகின்றது. எனவே, இக் காலத்து மாணவர் சாதாரணமாய்ச் செய்யும் விஞ்ஞானியப் பிழைகள், பண்டைக் காலத்துப் பேரறிஞரும் செய்தவையே என்று அறியலாகும். இன்னும், விஞ்ஞானீய அறிவு வளர்ச்சியைப்பற்றி மட்டுமன்றி, விஞ்ஞானத்திற்கும் மக்கள் உள்ளப் பான்மைக்குமிடையேயுள்ள தொடர்புகள் பல காலங்களில் எவ்வாறானவையென்பதையும் சரித்திரவாயிலாய் அறிய இயலும். அறிவு வளர்ச்சிக்கேதுவான, இச் சரித்திரீய முறை, இன்று நம் விஞ்ஞானக் கல்விப் பயிற்சியில் கையாளப்படாதது மிகவும் வருந்தத்தக்கது. செயல் முறை, சோதனை முறை, விதி முறை இன்னோரன்னவற்றுடன் சரித்திரீய முறையும் சேர்ந்து, விஞ்ஞானம் பயிற்றுவிக்கப்படும்போதே, அறிவின் முழுச் சிறப்பை நாம் அடையலாம்.

இக்காலத்து விஞ்ஞானம், பலரால் பல காலங்களில் வெளியிடப்பட்டவற்றை ஆதாரமாய்க்கொண்டுள்ளது. அவ் வெளியீடுகள் ஆராய்ச்சிகள் வழியே கிடைத்த விளைவுகளைப்பற்றியுரைப்பவை. அவற்றில் பல, பேரறிஞரின் கருதுகோள்களை நிலை நாட்டும் தன்மையானவை. பல ஆராய்ச்சியாளர்கள் தாம் ஆராயும் பொருள்களின் குறித்த பகுதிகள் சிலவற்றைப்பற்றியே அறிந்தவர். சில பேரறிஞர்கள்மட்டுமே அவற்றைப்பற்றி முழுதும் அறிந்தவர். அவர் காட்டிய வழியைப் பின்பற்றிப் பல ஆராய்ச்சியாளரும் பணியாற்றுகின்றனர். இவ்வாறு பலவாறாற் சிறிது சிறிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டவற்றின் விளைவியல்கள் நாளடைவில் மக்கள் வாழ்க்கையிலும் புகுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலை நாட்டப்பட்ட பரிணமக் கொள்கை மக்கள் வாழ்க்கையைச் சார்ந்த சமயக் கொள்கைகளைப் பாதித்தது. இக் காலத்தில் ஐன்ஸ்டீன் (Einstein) நிலை நாட்டிய 'பற்றியல் கொள்கை' (Relativity Theory) தத்துவ நூலுடன் கலக்கின்றது. மிகவும் முற்பட்ட காலத்தில், கலிலேயோ (Galileo) எனும் விஞ்ஞான அறிஞர், உலகம் சூரியனைச் சுற்றிவருகின்றது என்ற கொள்கையை நிலை நாட்ட முயலுங்கால், சமயத்தை எதிர்க்கவேண்டியதாயிற்று.

இங்ஙனம் விஞ்ஞானத்தின் சரித்திரத்தைப் பயில்வதால் விஞ்ஞானத்திற்கும் மக்கள் வாழ்க்கைக்குமிடையேகாலாந்தரத்தில் எழுந்த தொடர்பைப்பற்றி நன்கு அறிகிறோம். பண்டைக் கிரேக்கர் காலத்தில், விஞ்ஞானமும் தத்துவமும் ஒரே நூலாயிருந்தன. பின்னர், விஞ்ஞானம் சோதனை முறையால் நிலை நாட்டப்பட்ட அனுபவப் பிரமாண நூலின் நிலைமையைப் பெற்றது. இப்பொழுது, மீண்டும் தத்துவத்துடன் உறவாடும் நிலைமையை நெருங்குகின்றது. இதைப்போன்றே விஞ்ஞான முன்னேற்றத்தால் சமூகத்தில் தோன்றும் பல மாறுதல்களைப்பற்றியும் சரித்திர முறையால் அறியலாம். மேலும், விஞ்ஞான வளர்ச்சிக்கு இன்றியமையாத கற்பனா சக்தியை ஊட்டுவதற்கும், சரித்திரம் உதவுகின்றது. வெறும் சோதனைகளைச் செய்வதால்மட்டும் விஞ்ஞானம் முன்னேறாது. ஆராய்ச்சிப் பொருள்களைத் திரட்டுவதால்மட்டும் பயனில்லை. அவற்றினிடையேயுள்ள இணைப்புக்களையும் தொடர்புகளையும் கண்டுபிடித்தலே விஞ்ஞானியின் சீரிய பணியாம். அதற்கான ஆற்றலை உழைப்பாலும் பயிற்சியாலும் பெற இயலாது. முற்காலத்து விஞ்ஞான அறிஞரின் சிந்தனை முறைகளைச் சரித்திர வாயிலாய் அறிந்து அவ் வழியே சிந்தனை செய்தலே கற்பனாசக்தியைப் பெறும் வழியாம்.

காலத்திற்கேற்றவாறு அறிவியல் நூல்களை வகையீடு செய்யவும், அவற்றினின்று பலன்களைப் பெறவும், இவ்வழியே அறிவைப் பெருக்கவும், சரித்திர முறை கற்றல் இன்றியமையாததாகின்றது. பண்டைக் காலத்தே நாகரிகம் மிக்கவை யென

விளங்கிய, பல நாடுகள் அழிந்து பட்டன எனச் சரித்திரம் கூறுகின்றது. அவை அவ்வாறு அழிந்ததற்கான காரணத்தை விஞ்ஞானமும் சரித்திரமும் கலந்த கண்களுடன் ஆராய்வதால் கண்டு பிடிக்கலாம். அக்காரணங்களை அறிந்து நமது தற்கால நாகரிகமும் அழிந்து சிதைவுறு திருத்தற்கான முறைகளை அறியலாம். உலக சரித்திரத்தில் நாம் சிறிதே முன் சென்றுள்ளோம். பண்டைக் காலத்தினர், அறியாக் குழந்தைகளைப்போல், பின் விளைவது யாதென அறியாது, அழிந்தனர். நாம் சிறிது அனுபவம் பெற்ற இளைஞர் நிலைமையிலுள்ளோம். இவ்வனுபவம் பெறுவதற்குச் சரித்திரமே உதவியுள்ளது. நாம் பெற்ற விஞ்ஞான முறைகளைக் கண்மூடித்தனமாய்க் கையாள்வதால் நமது நாகரிகமும் அழியும் என்பதே அவ்வனுபவ வாயிலாய் அறிந்த உண்மை. சரித்திரத்தின் படிப்பினையை மறவாது பணி செய்வோமாயின் மேலும்மேலும் முன்னேற்ற மடையலாம். விஞ்ஞானம், சரித்திரம் என்னும் இரு கண்களினுதவியால் பெற்றவற்றை, அகக்கண் கொண்டு சீர்தூக்கிக் காண்பதால், அரிய உண்மைகள் துலங்கும். அவ்வுண்மைகளை அடிப்படையாய்க்கொண்டு, சமூக வாழ்க்கையை அமைக்கவேண்டும். திட்டமான நன் முறையை யொட்டி அமைந்த நாகரிகவாழ்க்கை என்றும் அழியாது. விஞ்ஞானீயச் சரித்திரமும், சரித்திரீய விஞ்ஞானமும் கைபிணைத்துச் செல்வதால், மக்களினம் ஒன்று சேர்ந்து, நாமெல்லோரும், நம்வழியில் தோன்றும் எல்லோரும், இன்புற்று வாழலாம்.


மார்பு, சுவாஸகோசக் கோளாறுகளுக்கு



அவனுக்கு

ஸிரோலின் ரோச்

கொடுங்கள்

அசட்டை செய்தால் அபாயகரமான வியாதிகளுக்கு வழியாகும். ஸிரோலின் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒன்றுபோல் மிகக்குணமுள்ள சுவாஸகோச டானிக்.

# விடுமுறை

[ ரஸிகன் ]

தெருக் கோடியில் சதங்கைச் சத்தம் கேட்டது. தன் வீட்டுக் கூடத்தில் மூட்டை கட்டுவதற்கு ஆயத்தமாயிருந்த சீனுவுக்கு அந்தச் சத்தம் காதில் விழவே வயிற்றில் சொரேலென்றது. அவசரமாய் வெளியே ஓடி வந்து பார்த்தான். அப்பொழுதுதான் பிள்ளையார் கோயில் மதில் சுவரின் பின்னிருந்து வண்டிக்கார வீராச்சாமியின் இரட்டை மாட்டு வண்டி ஆடி ஆடி வந்துகொண்டிருந்தது. ஆமாம், அந்த மயிலைக்காளையும் 'பச்சடி'க்காளையும், சூரிய சந்திரர்கள் உள்ளேயே வாஸம் பண்ணுவதுபோல் ஆயிரம் பொத்தல்களோடும் கிழவன் தலையாடுவது போல் ஆடும் கூண்டோடும் கூடின வண்டியும் அரை மயிலுக்கப்பால் வரும்போதே யாரும் கண்டுபிடித்துவிடலாம். 'சரி, பயணம் நிச்சயம் தான்,' என்று சீனு தனக்குள்ளே கொஞ்சம் வருத்தத்தோடு சொல்லிக் கொண்டான். மறுநாள் இருபது மைலுக்கப்பாலுள்ள கோட்டையூரில் சீனுவின் பள்ளிக்கூடம் கோடை விடுமுறைக்கப்புறம் திறப்பு. அவன் தகப்பனார் கிளம்புவதற்கு நாள் தேவலையா என்று ஜோஸியரைக் கேட்டுக்கொண்டு, தேவலை யென்றால் வீராச்சாமி வண்டியை யோட்டி வருவதாக அடுத்த ஊர் காலையில் சென்றிருந்தார். வண்டி வந்ததிலிருந்து நாள் நல்ல நாளென்று ஜோஸியர் சொல்லியிருக்க வேணும். சீனுவுக்கு மட்டும் அது ஸுதினமாகப் படவில்லை.

அன்று காலையில் அவன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே மனதை 'என்னவோ பண்ணித்து' அந்த வேதனைக்குக் காரணம் ஞாபகம் வரவே சலிப்புடன் சட்டென்று படுக்கையை உதறித் தள்ளினான். சாதாரணமாய் அவனுக்குப் படுக்கையை விட்டெழுந்திருக்க மனது வராது. அவன் சோம்பேறி யல்ல. தான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பட்டணத்தில் காலையில் 5-மணிக்கே யெழுந்து விடுவான். ஆனால் ஊருக்கு வந்து தன் வீட்டுத் தாழ்வாரத்து மூலையில் படுத்தால் காலையில் எவ்வளவு சீக்கிரம் விழித்துக் கொண்டாலும் படுக்கையில் படுத்த படியே முற்றத்தின் திறப்பு வழியாய்த் தெரியும் வீட்டுக் கொல்லையிலுள்ள தென்னை மரங்களையும் அவைகளின் கீழே அடர்ந்து கரும் பச்சை கொண்டு இளங் காற்றில் மெல்ல அசையும் இலைகளோடு கூடிய வேப்ப மரத்தையும், இவைகளின் தோகைகளுக் கிடையே மாசற்ற நீலக்கல் போலும் பகற் கனாக் காணும் குழந்தை கண் போலும் ஆழ்ந்து அசைவற்றுத் தன்மயமாயிருக்கும் காலை வானத்தையும் கண் கொட்டாமல் பார்க்கப் பார்க்க அவன் உள்ளத்தில் சொல்ல முடியாத ஆநந்தம் பொங்கும். நெய்குத்தி அவனுக் கென்று தயாரித்த ஊத்தப்பத்தின் மணமும், காலைக் காப்பியின் ஆக்ரக சக்தியும், 'சீனு, காப்பி ஆறி போரதே, சுருக்க பல் தேச்சுட்டு வா' என்று அவன் தாயார் சொல்லும் மதுரச் சொல்லுங் கூட அவனுக்கு அந்த ஆகாசத்தை நோக்கும் மயக்கத்தை லேசில் தெளிவிப்பதில்லை. இன்றோடு இந்த வாழ்வு ஆயிற்று, என்ற எண்ணம் அன்றைக் காலையில் அவன் கண் விழித்ததும் எழவே இந்த ஒரு நாளாவது இதையனுபவிப்போமே யென்றிராமல் வைராக்கியம் ஏற்பட்ட நொடியில் வீடு துறப்பவன் போல், பாயைச் சுருட்டி எறிந்துவிட்டு வெளியே சென்றான்.

ஊருக்கு வந்தாலே இந்த உபத்திரவம் தான். எங்கே போனாலும் இந்த வானத்தை மறக்கமுடிகிறதில்லை. ஏன், வீராச்சாமி வண்டியை நோக்கும்போதே சீனுவின் கண்கள் தன்னையறியாமல் தெருக்கோடியிலுள்ள சாசுவதக் காக்ஷியில் மறுபடியும் ஈடுபட்டன. அது சாமாந்நியக் காக்ஷிதான். எந்தக் கிராமத்திலும் கண்ணுள்ளவர்கள் காணலாம். ஒற்றையடிப் பாதையின் ஒருபுறம் மாடு மறியும்

மந்தை, இன்னொருபுறம் கோரை மண்டி, பாய் விரித்தாப்போல் செங்கழுனீர்ப்பூப் பூத்த ஓடை. நடுவே, வளைந்து, வயது முதிர்ந்து காடு தட்டியும் மஞ்சள் பூவும் கறுப்புக் காயும் குலுங்கி நிற்கும் சரக் கொன்னை மரம். அதன் லாவண்யத்தில் ஒளிந்து விளையாடும் ஆட்டுக் குட்டிகள் போன்ற குட்டி வெண் மேகங்கள் இந்திர நீலத்தையொத்த ஆகாசத்தில் சறுக்கு மரம் போடுவதுபோல் நழுவிவந்தன. அது திறந்த வான வெளியல்ல. நாலாபுறத்தி லும் இருக்கும் மூங்கிற் கொத்துகளின் உடைவாள்போன்ற இலைகளும், மாமரங் களின் பச்சை மலைபோன்ற நிழலும் தென்னைகளின் பிரபைபோன்ற ஓலை களும் சேர்ந்து சித்திரித்த கோயிலில் குடி கொண்ட கடவுள்போல் காணப்பட்டது அந்த வானம்.

இந்த ஆனந்தத்தில் சீனு ஈடுபட்டு நிற் கையில் வண்டி வாசலுக்கு வந்துவிட்டது. "என்ன, கொழந்தே, மானம் பாக்கறே," என்று விஷமமாய்க் கேட்டுக்கொண்டே வீராச்சாமி கீழே குதித்தான். அவன் விகடமாய்ப் பேசுவான். அதுவும் சீனு வைக் கண்டால் உத்ஸாஹம் ஜாஸ்தி. "ஐயரே ரெண்டரே" என்று பல்லவி பாட ஆரம்பித்துவிடுவான். சீனுவும் பின் வாங்குவதில்லை. "அடே, படையாச்சி, என்னடா தடியாச்சி!" என்று ஏளனம் பண்ணிக்கொண்டே அவன் தார்க் கொம் பைப் பிடுங்கி அவன் மாட்டைக் குத்தித் திருவி இழுப்பதுபோலவே அவனைக் குத்தும்பாவனையாய்க் குதிப்பான். வீராச் சாமியும் சாஸ்திரம் படித்தவன்போல், "அப்படியில்லெ, கொழந்தே, உனக்குத் தெரியாது. படையாச்சின்னா, 'பெரியாச் சிக்குப் படையாச்சி'—இந்தப் பெரியாச் சிக்கி" என்று சொல்லிக்கொண்டே கட வாத்தியம்போல் உருண்டு வழவழப்பா யும் பளபளத்த கறுப்பாயும் உள்ள தன் தொந்தியைத் தடவிக் காட்டுவான். உடனே இருவரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். இந்த நாடகம் இன்றைக்கும் நடந்தது. ஆனாலும் சீனு 'சொரத்தா' யில்லை. இது கண்ட வீராச்சாமி, "ஓஹோ, மாமியா வீட்டுக்குப் போக ணம்னு கவலெ வந்துட்டாப்பிலேருக்கு!" என்று சொல்லி மறுபடியும் சிரிக்க ஆரம் பித்தான். அவன் பரிபாஷையில் 'மாமியா வீடு' என்றால், பள்ளிக்கூடம், ஜெயில் இதுகள்போல், தானாய் இஷ்டப்பட்டுப் போகாதவிடங்களையே குறிக்கும். அதன் காரணத்தை நேயர் ஊகிக்கலாம். ஆனால் வழக்கம்போல் சீனு வீராச்சாமிக்கு மாமியார் வீட்டில் நடந்த ஸம்பிரமங்களைப் பற்றி ஹரிகதை பண்ணாமல், மூஞ்சியைச் சுளுக்கிக்கொண்டு வாசலிலுள்ள மாட்டுத் தொழுவத்தினண்டையில் போனான்.

வீராச்சாமியும், மசைக் குடுக்கையைக் கழட்டி, ஒரு கை வைக்கோலைப் போட் டுப் பொசுக்கிக் கறுக்கி, எண்ணெயை விட்டு அதற்கென்று வைத்திருந்த கொட் டாங்கச்சியில் கலந்துகொண்டே 'கொழந்தெ, கொஞ்சம் கிழிசத் துணி கொண்டா'வென்று கீழே குனிந்தபடியே சொல்ல வாயெடுக்க, திடீரென்று பின் புறம் ஏதோ வந்து முட்டித் தள்ளிற்று. திரும்பிப் பார்த்தான். சீனு அருமையாய் வளர்ந்துவந்த நாலு மாதத்துக் காளைக் கன்று. 'வெடிவால் வெண் குளம்பு, முத லிய அங்கங்கள் பொருந்தி அழகாயிருந் தது. பொழுது விடியுமுன் சீனுவை யெதிர்பார்த்துக்கொண்டு வாசலில் தயாரா யிருக்கும். அவன் வெளிப்படும்போதே பொட்டுக் கூடையில் கையால் களைந் தெடுக்கப்பட்ட பருத்திக் கொட்டையும், சில்லுச் சில்லாய் உடைக்கப்பட்ட எள்ளுப் புண்ணாக்கும் எடுத்துக் கொண்டு வருவான். கன்றும் குழந்தை தாவுவதுபோல் அவன்மேலே உராய்ந்து அவன் கையிலிருந்து பிடிப்பிடியாய்த் தீனியைத் திருப்தியுடன் தின்று, அவன் கொணர்ந்துவைக்கும் குளிர் நீரைக் குடித் துக் குதித்துக் குதித்து விளையாடும். அன்றைக்கு மாட்டுடன் மேயப்போ யிருந்த அது தெருக்கோடியில் வரும் போது கொட்டில் பக்கம் சீனு செல்லுவ தைக் கண்டதும் ஓட்டோட்டமாய் ஓடி வந்தது; ஆசைதான், மறுபடி ஏதாவது தின்ன அகப்படுமோ என்று. அவன்

கையிலும் ஒன்றுமில்லை. அவன் முகத்திலும் சந்தோஷமில்லை. இதைக் கண்டு தானோ என்னவோ, வழக்கம்போல் அவன்மேல் உராயாமல் வீராச்சாமி கொட்டாங்கச்சியில் ஏதோ வைத்திருப்பதைக் கண்டு அவன் பின் மெல்லப்போய் அதை ருசி பார்க்க எண்ணினாப்போல் நெருங்கிற்று. குனிந்து நிற்கும் அவன் அதைப் பார்க்காததால், தீனி ஞாபகம் மறந்து விளையாட்டில் ஈடுபட்டுச் சுவாதீனமாய் அவன் பின்னண்டையில் முட்டிற்று. அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கவே ஓட்டம் பிடித்தது. "ஓகோ, அப்படியா சேதி! இரு, இரு, காயடித்துப்படறேன், ஐயிரு இருக்காருன்னா இவ்வளவு திமிரு ஒனக்கு. ஐயிரு பள்ளிக்கூடம் போராரு, இம்மே இந்த ஒய்யாரமெல்லாம் ஆரு கிட்டே! அடுத்த வருசம் ஒழவுலே போடவேண்டியதுதான்," என்று ஆத்திரப்பட்டவன்போல் சொன்னான். சீனுவுக்கு அந்த விளையாட்டு வார்த்தையைக் கேட்டதும் அழுகை வந்துவிட்டது. தான் அருமையாய் வளர்த்துக் கொம்பு தேய்த்து கழுத்துக்குக் கிட்டி கட்டி ரேக்ளாவில் பழக்கி அயனான அமிர்தமஹால் மாடுபோல் அந்தக் கன்றைத் தயார்ப் பண்ணவேணுமென்றெல்லாம் மனோராஜ்யம் பண்ணினவனல்லவா? இதோ பள்ளிக்கூடம் வந்துவிட்டது, யமபட்டணம்போல். கன்றுக்குட்டியும் தான் அடுத்த விடுமுறைக்கு வரும்போது என்ன கதியாயிருக்குமோ? வீராச்சாமியின் வார்த்தைகளால் அவனுக்குப் பள்ளக்காத்தான் உழுதுவிட்டு உருமத்துக்கு மாடுகளை தெருக்கோடியில் ஓட்டிக்கொண்டு வந்துவிட்டுச் சத்தம் போட்டுப் போகும் நினைவு வந்தது. அந்த மாடுகள், பாவம், வயிறு முதுகு எல்லாம் ஒரே சேறாய், காலை யிழுத்திழுத்துக்கொண்டு, மேலே வந்துட்கார்ந்து பிடுங்கும் யானை ஈக்களை ஓட்டக் காதையாட்டக் கூடச் சக்தியில்லாமல் தூக்கத்தில் நடப்பவைபோல் அசைவதைக் கண்டு அவன் எவ்வளவோ தரம் வருந்தினதுண்டு. இந்தக் கதிதான் தன் கன்றுக்குட்டிக்குமென்று நினைக்க, அவனுக்கு அளவில்லாத துக்க மேற்பட்டது. அது வீராச்சாமி மேல் ஆத்திரமாய் மாறவே, "போடா, தடிப்பயலே, உனக்குப் புத்தியில்லை" என்று அவன் மேல் விழுந்து குளர வாரம்பித்தான். அதற்குள் வீட்டிற்குள்ளிருந்து, "சீனு, சுருக்கக் குளிச்சுட்டு வா, சாப்பிட நாழியாயிடுத்து, ராகுகாலத்துக்குள்ளே கிளம்பபணுமே," என்று அவன் தாயார் சொன்ன வார்த்தைகள் காதில் விழவே, மறுபடித் துக்கம் மூண்டது. ஒன்றும் சொல்லாமல் தன் கன்றுக் குட்டியை ஓட்டிக்கொண்டு எதிரே பத்துத் தப்படிக் கன்னண்டையில் ஓடும் வாய்க்காலை நோக்கிச் சென்றான்.

வழக்கம்போல் தண்ணீருக்கருகே வந்ததும், அதில் இறங்க மனமில்லாமல் கன்றுக் குட்டி வெருண்டு ஓட முயன்றது. சீனு தன் மேல்சவுக்கத்தை முறுக்கி அதன் கழுத்தில் தும்புபோல் போட்டு அதை இழுத்துத் தண்ணீரில் அழுத்தினான். அவன் கையை யெடுத்ததுதான் தாமதம், அது தலையை வெகு வேகமாய் ஆட்டித் தண்ணீரை நாலாபுரமும் வாரியெறிந்து, ஒரே யிழுப்பா யிழுத்துக் கொண்டு கரையில் பாய்ந்து ஓட வாரம்பித்தது. சீனுவின் சவுக்கம் கையோடு வந்து விட்டது. ஒவ்வொருநாளும் இப்படித்தான் நடக்கும். உடனே சீனுவும் அவன் தோழன் நடுவீட்டு ராமச்சந்திரனும் அதன் பின்னேயே பாய்ந்து இருபக்கமாயும் ஓடி வளைத்துப் பிடித்து மறுபடியும் இழுத்துவந்து தண்ணீரில் அமுக்கி ஆனந்திப்பார்கள். இன்றைக்கப்படிச் செய்யாமல், "சனியனே, தொலைஞ்சுபோ" என்று சலிப்புடன் கூறி சும்மா நின்றுவிட்டான் சீனு. தன்னோடு கூட ஓடி வளைப்பதற்கு ராமச்சந்திரன் இல்லையல்லவா?

அது நினைவுக்கு வந்ததும் அவன் மனதில் குடிகொண்ட வேதனை அதிகரித்தது. தன் இணைபிரியாத நண்பனுடன் பேசி மூன்று நாளாயிற்றே! அந்த மனஸ்தாபத்திற்குக் கன்றுக் குட்டிதான் காரணம். சீனு தகப்பனார் நாகப்பட்டணம் போயிருந்தார். திரும்பி வரும்போது கண்ணைப்

பறிக்கும் காந்தியோடு கூடின கண்ணாடி மணிச்சரடு ஒன்று சீனுவின் கன்றுக்குட்டிக் கென்று வாங்கிக் கொண்டு வந்தார். அழுத்தமாயும் பட்டுப் போல் வழவழப்பாயுமுள்ள நூல் கயிறில் சிறிய கடுக்காயளவு பருமனும் அது போன்ற வடிவமுள்ள ஏழு நீலக் கண்ணாடி மணிகள் கோர்க்கப் பட்டிருந்தன. அதைக் கண்டதும் சீனுவின் ஆனந்தத்திற்கு அளவில்லை. உடனே கன்றுக் குட்டியின் கழுத்தில்கட்டி, அதற்கு நெத்தியில் சந்தனமும், குங்குமமும் வைத்து, சூடம் சாம்பிராணி காட்டி கன்றுப் பொங்கலன்று விரட்டுவது போல் அக்ரகாரத்து வாசல் வழியே நடத்தினான். அந்தச் சின்ன ஊரிலுள்ள சுமார் பத்துக் குழந்தைகளும் ஆஜர். ராமச்சந்திரன், கேட்க் வேணுமா, சீனுவுக்கு முக்கிய மந்திரியாய் விளங்கினான். ஊர்வலம் அவன் வீட்டு வாசலில் வந்து நின்றது. அவன் சின்னத் தங்கை, ஐந்து வயதாகாத குழந்தை, வாசலில் ஓடி வந்து கன்றுக்குட்டியையும் அதன் புது மணிச்சர்டையும் பார்த்ததும் கை கொட்டிக் கொண்டு, 'ராமு, நம்பாத்து சேப்புக் கன்னுக் குட்டிக்கி அந்த மணியெ சித்தெக் கட்டுடா' என்று கெஞ்சினாள். ராமுவுக்கு அவள் ஒரே அருமை தங்கை. அவள் கேட்டதை—கோலியோ, பந்தோ, பம்பரமோ எதாயிருந்தாலும் சரி—அவன் தரமாட்டேனென்று சொன்னதே யில்லை. ஆகவே, சீனுவைப் பார்த்து, "சரட்டை அவிழ்த்துக்கொடு.சித்தெ நாழி எங்காத்து கன்னுக்குட்டி கழுத்தில் கட்டி வைக்கிறேன். சாவித்திரி தூங்கிப் போன வொட்டனே அவுத்துண்டு வந்து தரேன்" என்று நயமாய்க் கேட்டாள். சீனுவுக்கு வந்து விட்டது கோபம். "ஒங்காத்து அழுகுண்ணிக் கன்னுக் குட்டிக்கிக்கட்டத்தான் எங்கப்பா நாகபட்டணத்திலேருந்து 10 ரூபா கொடுத்து நீலமணி வாங்கிண்டு வந்தாளோ? போடா கடக்கு!" என்று சொல்லிக் கொண்டே கன்றுக் குட்டி ஊர்வலத்தை நகர்த்தினான். ராமச்சந்திரனுக்கு துக்கம் ஒருபுரம் ஆத்திரம் ஒருபுறம் கண்ணில் பொறி பறந்தது. சட்டென்று அழும் தன் தங்கையைப் பிடித்துப் பர பர வென்று இழுத்துக் கொண்டு தன் வீட்டுக்குள் சென்று விட்டான். அதைக் கண்ட சீனு, "அவ்வளவு ரோஷமானாப் போயேன்! டுவுன்னு டு" என்ற பள்ளிக்கூடச் சங்கேதத்தில் அவன் காதில் விழும்படி கோஷித்துவிட்டு ஊர்வலத்தைச் சட்டென்று முடித்து விட்டு வீடு போய்ச் சேர்ந்தான். அன்று முதல் இருவரும் பேசவுமில்லை, சந்திக்கவு மில்லை. மணி வந்த வேளை இப்படி விபரீதமாக முடியவே, சீனுவுக்கு அதிலிருந்த சந்தோஷம் போய் விட்டது. அன்று சாயந்திரம் பிறருக்குத்தெரியாமல் மணியை யவிழ்த்து உள்ளே வைத்து விட்டான். அதைப் பார்த்தபோதெல்லாம் தான் இழந்த சினேகம் அவன் கண்முன் வந்து நின்று அவனை நிந்திப்பது போல் தோன்றிற்று

ஆயினும் வாய்க்கால் வாயில்லாமல் தன்னை வாவென்று கூவியழைப்பதையுணர்ந்து அவன் ஒருவாறு தன் துன்பங்களை மறந்தான். மழை காலத்தில் தன் வீட்டு எதிரேயுள்ள மாட்டுக் கொட்டிலுக்குப் பின்புறமுள்ள சாணிக்குழி வரையில் பெருக்கால் கரை புரண்டு வந்தாலும், பாக்கிக் காலங்களில் அது வெகு சிறிய வாய்க்காலே. ஆகையால் வெளியூர் ஆறுகளைக் கண்டு பயப்படும் சீனுவுக்கு அதனிடம் கொஞ்சமும் பயமில்லை. தினம் ஒரு மணி நேரமாவது அதில் துளைந்தால்தான் அவனுக்குப் பாந்தமாயிருக்கும். அவனுக்கு நீந்தத்தெரியாது. நீந்த அவன் ஆவல் படுவதுமில்லை. உட்கார்ந்தால் கழுத்துக்கு மேற்படாத ஆழமுள்ளதாயும், சேறில்லாமல் நல்ல மணலாயுமுள்ள ஒரு இடம் அவனுக்குண்டு. அங்கேயுட்கார்ந்து அழகாய்க் காலை நீட்டி, மூக்கும் காதுகளும் தண்ணீரில் அமுங்காவண்ணம் தலையை வைத்துக்கொண்டு தூங்குவதுபோன்ற அசைவற்ற நிலையில் அமர்ந்துவிட்டால் அவனுக்கு நேரம் போவதே தெரியாது. அசைப்பில் பார்த்தால் அந்த வாய்க்காலில் தண்ணீ ரோடுவதாகவே கண்ணிற்குப் புலப்படாது. சீனு தாயார் அது தூங்கும் நேரமுண்டென்றும், தான் அனேகம்

தடவை இரவில் நிலா வெளிச்சத்தால் பொழுது விடியும் சமயமென்றெண்ணிக் குடத்தையெடுத்துக்கொண்டு தலை முழுகப்போய், தண்ணீர் ஓடாமல் தூங்குவதைக் கண்டு, அந் நிலைமையில் ஸ்நானம் செய்தால் காவேரியம்மனுக்கு அபசாரமாகையால் முழுகாமல் திரும்பி வீடு வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறாள். சீனுவும் அதை முற்றிலும் நம்பினான். ஏன், பட்டப்பகலில் தான் கண் கொட்டாமல் தண்ணீருக்கருகே மூஞ்சியை வைத்துக்கொண்டு கவனிக்கும்போதே தண்ணீர் ஓடுவதைச் சிரமப்பட்டல்லவா நிதானிக்க வேண்டியிருக்கிறது. அவன் தாத்தாவைக் கேட்டிருந்தால், பகவான் ஒருவன் இருக்கிறான் என்பதை உலக வியாபாரத்திலிருந்து ஊகிக்கவேண்டியிருப்பதுபோல் வாய்க்கால் நீர் ஓடுவதை அதில் விழும் வஸ்துக்களின் நடவடிக்கையிலிருந்து தான் நிர்ணயிக்கவேணுமென்று வேதாந்தம் சொல்லியிருப்பார். சீனுவுக்கு வேதாந்தம் பேசத்தெரியாமற்போனாலும் வேதாந்தியாகவே வழங்கினான். சற்று நேரத்திற் கொருதரம் தனக்கு நாலா பக்கத்திலும் கரையிலுள்ள அரச மரத்திலிருந்து அரைகுறையாய்ப் பழுத்த பழங்கள் காக்கைகளால் கோதப்பட்டு விண்டு 'சொத்' தென்று தண்ணீரில் விழுந்தன. விழுந்த வேகத்தில் தண்ணீரில் மறைந்து உடனே வெளிக் கிளம்பி, ஒரு சிலுப்பல் சிலுப்பிக்கொண்டு ஏதோ வைத்ததை எடுப்பதுபோல அவை கம்பீரமாய் மிதந்துபோவதைப் பார்த்தால், திடீரென்று துக்கத்தால் தாக்கப்பட்ட மனது சில காலம் சோகத்திலமுழ்ந்தியும், பிறகு கவலையையுதறி, யதேச்சையாய்த் தன் வாழ்நாளை நடத்துவதாக மறுபடியும் பிரமைகொண்டு கால வெள்ளத்தில் வேகமாய் மிதந்து செல்லுவதுபோல் சீனுவுக்கு ஒவ்வொரு சமயங்களில் தோன்றிக் கொஞ்சம் வியாகுலத்தையுண்டாக்கும். ஆனால் அந்தச் சோர்வை காற்றில் உலர்ந்து உதிர்ந்த அரச இலைகள் தங்கள் விசித்திர கதிகளால் அவன் உள்ளத்திலிருந்து ஓட்டிவிடும். இந்த இலைகள் நேரும் சீருமாய்த் தண்ணீரில் மிதப்பதில்லை. அடிக்கொருதரம் கண்ணுக்குத் தெரியாத ஒரு சுழலில் அகப்பட்டு, கிஞ்சினுடும் பெண் தன் ஆடைத் தலைப்பை நுனி விரலால் உல்லாஸமாய்த் தூக்கிக்கொண்டு கிர்ரென்று ஒரு சுத்துச் சுத்துவதுபோல் சுழன்று, நுனியும் அடியும் மாறி மாறி சலாம் போடுவதுபோல் தூக்கிக்கொண்டு கொம்மாளமிட்டுச் செல்லும் காக்ஷி ஒரு தனிப்பட்ட சந்தோஷத்தை அவன் உள்ளத்தில் எழுப்பும். அதுவும், அந்த இலையில் ஒரு கட்டுவாயெறும்பு ஓடமேறினாற்போல் நடுவிலுட்கார்ந்து மிதந்துவந்ததோ அவன் திருப்திக்களவில்லை. ஓடக்காரன் தன் கவனம் முழுவதையும் செலுத்தி ஓடம் கவிழாமலும், கோணமாணுவாய்ப் போகாமலும் அடக்கித் தள்ளுவதில் ஊக்கமாயிருப்பதுபோல் அசைவற்று நிற்கும் அந்த எறும்பின் அமர்த்தல் அவனுக்குச் சிரிப்பூட்டும்.

இவ்வித யோக ஸமாதியில் அவன் அதிக நாழி தரித்திருக்க முடிகிறதில்லை. தண்ணீருக்குள் அமுங்கி இருக்கிற அவயவங்களில் எதிர்பாராமல் சுரீரென்று ஒரு குத்தல் விழும். அவசரமாய்க் கையை அங்கே கொண்டுபோகுமுன் அழுக்கைச் சுரண்டவந்த மீன் மாயமாய்ப் பறந்துவிடும். வலியைக்கூட அவன் பாராட்டுவதில்லை. அது தன்னை திடுக்கிடச்செய்வதைத்தான் சீனு பொறுப்பதில்லை. ஆனாலும், அக்கரையில் ஆகாயத்தை யளாவி நிற்கும் நொச்சிமரத்திலிருந்து தண்ணீருக்குமேல் நீட்டிக்கொண்டிருக்கும் கிளையில் வர்ணப்பதுமைபோல் உட்கார்ந்திருக்கும் மீன்குத்திக்குருவி சமயத்தை யெதிர்பார்த்திருப்பதைக் கண்ணுற்ற சீனுவுக்கு மீன்களிடம் கோபம்மாறிக் கருணை உடனே ஜனிக்கும். அதனாலேயே அவனுக்கு காமாச்சி பேரன் சோமுவிடத்தில் அளவுகடந்த வெறுப்பு. அந்தப்பயல் (அவனுக்கு 60 சொச்சம் வயதானாலும் சீனுவுக்கு அவன் 'பயல்' தான்) நாலுதப்படிக் கப்பால் வாய்க்கால் திருப்பத்தில், நாணல், அடர்ந்தோங்கியிருக்கும் மறைவில் பரண் போட்டுக் கொண்டு தூண்டில் வைத்து மீன் பிடிப்

பது வழக்கம். அப்படிச் செய்வது ஊரி லுள்ள பெரியோருக்குத் தெரிந்தால் அப ராதம் விழும். இருந்தாலும் சோமு தன் திருட்டுத்தொழிலை நிறுத்துவதில்லை. பெரி யோர் உலாவாத வெயில் வேளையில் பர ணில் உட்கார்ந்து தன் வேலையை ஆரம் பித்துவிடுவான். ஊர்க்குழந்தைகளெல் லாம் இதைக் கண்கொட்டாமலும் வாய் மூடாமலும் நின்றுபார்த்துப் பொழுது போக்குவார்கள். சீனு ஊருக்கு வந்து விட்டால் சோமுவுக்கு ஆபத்து வந்தது. மாதம் நாலு தடவையாவது பஞ்சாயத் துக்கு அபராதம் செலுத்தியாகவேண்டும். "மீன்குத்திக் குருவிக்குத்தான் வேறு சாப் பாட்டுக்கு வழியில்லை, இந்தத் தடிப்பய லுக்குநிலம் நீச்சுமாடுகன்னு இருக்கிறதே, இவன் எதற்கு மீனைப் பிடித்துக் கொலை பண்ணுகிறான்" என்று ஆத்திரப் படு வான்.

கருணை அவ்விதம் செய்யச் சொல் விற்று, அல்லது அவனுக்கு சாந்தத்தி லிருந்த அவா அந்தக் கோபத்திற்குக் கார ணமா என்ற சந்தேகம் அவனைக் கவனித் தோருக்குத் தோன்றும். அந்த வாய்க்கா லிடத்திலும், அதையண்டிப் பிழைத்த ஜந்துக்களிடத்திலும் அவையடக்கமே அவனுக்கு முக்கிய குணமாகத் தென்பட் டது. கரையோரத்தில் தண்ணீரால் அல சப்பட்ட தென்னைவேர்க்கடியில் பேய்ச் சேப்பமட்டை வளர்ந்து மறைத்துக் கொண்டிருக்கும் வங்குக்குள் சந்தடிசெய் யாமல் நுழைந்து தன் குஞ்சுகளுக்கு உணவுப் பொருள் சமர்ப்பிக்கும் நீரெலி, கரையோரமாய் நிழல்போல் ஒட்டி விர் ரென்று வரும் தண்ணீர்ப்பாம்பைக் கண்டு புல்லோடு புல்லாய் ஒட்டிக்கொண்டு மூச் சைக் கூட அடக்கிக்கொள்கிறது. பாம்பு எலியைப் பார்த்த பின்பும் தான் வெகு யோக்கியனாய் வேறு யெங்கேயோ அவசர மாய்ச்செல்லுவதுபோல் நடிக்கிறது. மேக வர்ணம்போல் வெயிலில் மின்னும் ஈக்கள் சத்தமில்லாமல் மொட்டுகளைச்சுற்றி வட்ட மிடுகின்றன. தண்ணீர் குடிக்க வந்த எருமை கூட ஒருவாய் நீருந்தித் தலையை நிமிர்ந்து நாலாபக்கத்திலும் பிரதி பலிக்கும் அழகிலும் அமைதியிலும் ஈடு பட்டாப்போல் வாயைப்பிளந்து மூக்கைச் சுழித்து மேல் உதடை மடித்துப் பல்லுத் தெரியும்படி நிற்கிறது.

அந்த மாட்டைக் கண்டதும் சீனு ஆவ லுடன் கரையை நோக்கினன். வெங்குட் டுவின் எருமை வந்தால் வெங்குட்டுவும் பின்னேடு வரவேணுமே, அவர்கள் இணை பிரியாத் தோழர்களல்லவா? அவன் எதிர் பார்த்தபடியே வெங்குட்டு ஒருகையில் புளிய மளாரும், இன்னொரு கையில் ஒரு பிடி வைக்கோலும், இடுப்புத் துணியில் தூக்கிச் சொருகிய கச்சத்தில் கனமாய்த் தொங்கும் மூட்டையுமாகக் காணப்பட் டான். "என்னடா, சீனு, இன்னும் தொளையரே! அண்ணு சாப்பிடாத்துக் குக் காத்திண்டிருக்கார்ரா. வண்டி கட்ட ரத்துக்கு நாழி யாச்சாம். எங்கேயோ போய்ட்டான்னு ஒன்னே வெய்ய ரார்ரா!" என்று சொல்லிக் கொண்டே கச் சச்சொருக்கை அவிழ்த்து பெரியவிளாம் பழங்கள் பத்தை எடுத்து கரையில் வைத்து, "ஒனக்காகக்கொண்டு வந்தேன். வெல்லம்மாதிரி யிருக்கும். எல்லாம் அது வாக் கீழே விழுந்தபழம்" என்று சிரித் துக்கொண்டே சொன்னுன். மேலும், "தினம் ஒரு பழம் காலம் பர எழுந்த வொடனே வெரும் வயத்திலே கொஞ்சம் சக்கரையைப் போட்டுண்டு கலந்து சாப் பிடு, ஒடம்பு எப்படி ஆரது பாரு," என்று பரிவுடன் வார்த்தையை முடித்தான். இது தான் வெங்குட்டுவின் ஏக மூலிகாப்ரயோ கம். எந்த வியாதிக்கும் அவன் கொல்லை விளாம்பழம்தான் மருந்து. அதுவும் சீனு வுக்கு அவன் ஊருக்கு வந்து போகும் ஒவ்வொரு தடவையும் பத்துப்பழமாவது கப்பம் கட்டாவிட்டால் வெங்குட்டு இரு தார்த்தனக மாட்டான். சீனுவை விடப் பத்து வயது பெரியவன். உறவில்லாமற் போனுலும் சீனு தகப்பனுரை அண்ணு வென்று மரியாதையாய் அழைப்பான். அவனுக்கு அந்தவூரில் சொற்பக் குடித் தனம், ஜாஸ்தி தோப்புத் துரவு. ரொம்ப உழைப்பாளி. தாராள மனது. அதற்கேற் றாற்போல் அவன் கையால் தொட்டதெல்

லாம் அக்ஷயமாய் வளரும்விவசாயத்தில் அந்தவூருக்கே சீனு தகப்பர்தான் சூரன் என்று எல்லோரும் ஒப்புகாள்வார்கள். அவரிடம் தயாராகி அவ் கடுத்தபடிச் சொல்லலாம் வெங்கிட்டுவ மாடு கன்று களை ஸம்ரக்ஷணை பண்ணுவதில், முக்கிய மாக, அவரிருவர்களும் ஏர ஜோடி. இந்த அன்னியோன்னியத்தில் சீனுவின் வீட் டில் எல்லோ ரிடத்திலும் வெங்குட்டுவுக்கு அன்பு அதிகப் . சீனு தாயாரிடம் தேவதா விசுவாஸம் . அந்தம்மாள் கையால் தயிரும் பழைய ...தும் சாப்பிட்டுத்தான் தான் ஆளா னத ...ர்கச் சொல்லும்போலே அவனுக்குக் க... உ...ணிலிருந்து ஜலம் கலகலவென்று ...திரும்.

சீனுவிடம் தனக்கிளைய ஸஹோதரன் இருந்திருந்தால் வெங்குட்டு ஒரு பிள்ளை, (தாய் தகப்பனை அதி பாலியத்தில் இழந்த வன்) எவ்வளவு வாஞ்சை யிருந்திருக்கு மோ அதைவிட பதின் மடங்கு அதிகப் பிரியம். சீனு ஊருக்கு வந்தால் ஊர்க் கோடியில் எதிர்கொண்டு அழைப்பது அவன் தான். ஊரில் எல்லோரும், வார்த் தைக்கு, "ஏண்டாப்பா உடம்பு இவ்வளவு இளைப்பு?" என்று உபசாரம் கேட் பார்களே யொழிய, ஒருவரும் வாஸ்த வத்தில் சீனு இளைத்ததாக எண்ணு வதில்லை. அப்படி இளைத்திருந்தா லும் அதற்காக அவர்கள் வருந்தவும் போவதில்லை. வெங்குட்டு மட்டும் வாய் திறந்து ஒன்றும் சொல்லாமற்போனாலும் சீனு ரொம்பத் துரும்பாய்ப் போய்விட்ட தாக வெண்ணி, கிலேசப் பட்டு அவன் ஊரிலிருக்கும் அளவும் தன் தோட்டத்தி லிருந்து காயோ கரியோ பழமோ அன் றன்றைக்கு அருவடையானதில் பொறுக் காயுள்ள பதார்த்தங்களைக் கொண்டுவந்து சீனு வீட்டில் கொடுத்து "பச்சப் பசே லுன்னு நன்னயிருக்கு, மன்னி, சீனுவுக் குப் பண்ணிப்போடுங்கோ" என்று சொல் வான். "ஆமாம், வாரி வளைச்சுச் சாப்புட் டுடறுனே சீனு!" என்று அவன் தாயார் குறைப்படுவாள். உடனே வாயோடு வாயாய், "வெங்குட்டு, நாழி ரொம்ப ஆச்சு; இனிமேல் ஆத்துக்குப் போய் பொங் கித் திங்க வேண்டாம், இங்கேயே சாப்பிடு" என்பாள். வெங்குட்டுவுக்கு சிறு பிராயத் தில் கலியாணமாகி இரண்டொரு வருஷத் திற் கெல்லாம் அவன் ஸம்ஸாரம் இறந்து விட்டாள். சீனு தகப்பனர் முதலியவர் என்ன சொல்லியும், அவன் மறுபடியும் கலியாணம் செய்து கொள்ள மறுத்து விட்டான்.

இதுவே சீனுவுக்கு அவனிடமுள்ள மதிப்புக்கு முக்கிய காரணம். கலியாணம் பண்ணிக்கொண்டு ஒருவரும் சுகத்தை யடைந்ததாக அந்த பாரி பெரிய மனுஷ னுக்குப்படவில்லை. தவிர, கிராமாந்திர விளையாட்டுகள் ஜாடாவிலும் சீனுவுக்கு வெங்குட்டுதான் குரு. பிள்ளையார் பந்து, கிட்டிப்புள், சடுகுடு இதுகளில் அவனைப் பழக்கினதோடுகூட கார்த்திகைக்குப் பத்துநாளைக்குமுன்னேயே, கொட்டாங் கச்சி, உமிக்கரி, கலியாண முருங்கைக் கட்டை முதலிய சாமக்கிரியைகள் சேக ரித்து ஊதுவாணம் தயாரித்து கார்த்திகை யன்று சாயங்தரம் வீட்டுவாசல்களில் பெண்மணிகள் அகல்களை எற்றிவைத்துக் கொண்டிருக்கும் தருணத்தில் தெருவில் மேற்கே யிருந்து கிழக்கே ஓடச் சீனுவி டம் கொடுத்துத் தானும் அவனோடி ஓடி, அவனுக்கு அதைச் சரியாய் ஊதவராத விஷயத்தை அவன் கண்டு வருத்தமுறாம லும் ஊரார் கண்டு நகைக்காமலும் தானே ஊதி, அதிலிருந்து சரம் சரமாய் பொரி கிளம்புவதைக்கண்டு கைகொட்டி "பேஷ் சீனு" என்று ஆரவாரிக்கும் அமர்க் களத்தில் சீனுவும் அந்த அபார வேலை யைத் தான் செய்ததாகவே எண்ணி மனமகிழ்வான். அதுபோல் பதினெட் டாம் பெருக்குக்குச் சப்பரம் கட்டி காப்பரிசி தயாரித்து ஊர்வலம் விடுவது முதலிய வேடிக்கைகளுக்கு ஊர்க் குழந் தைகளுக்கே வெங்கிட்டுதான் தலைவன். ஆகிலும் சீனுவிடம் அவனுக்குத் தனிப் பட்ட பிரியம்.

இதை நன்குணர்ந்த சீனுவுக்கு வெங் குட்டு மனங்கோணச் சகிப்பதில்லை. அது காரணம்பற்றியே, வேஷ்டியைப் பிழிந்து கட்டிக்கொண்டு, "அடே, எவ்வளவு பெரிய காயிடா, வெங்குட்டு!" என்று சொல்லி அந்தக் காய்களை அந்த க்ஷணமே தின்று

விடுவான்போல் பார்த்தான் [illegible]
தில் விளாம்பழமென்றால் சீனுவுக்கு வாய
லெடுக்க வரும். ஒருகாலத்தில் அவனுக்கு
அதில் ரொம்பப் பிரியமிருந்தது வாஸ்த
வந்தான். ஆனால் அவன் இரண்டு வரு
ஷத்திற்குமுன் ஆறுமாதம் ஜுரத்திலடி
பட்டுக் கிடந்தபொழுது, விளாம்பழமும்,
அரிசிவடமும் ரஸம் சோறும் தவிர வேறு
ஒன்றும் கொடுக்கப்படாது என்று டாக்டர்
சொல்ல, அவ்விதமே அவனைப் போட்டு
வாட்டினார்கள். அதுமுதல் விளாம்பழ
மென்றால் விஷமாகி விட்டது. இருந்தா
லும் இந்த அதிருப்தியை வெங்குட்டு
விடம் அவன் காட்டினதே யில்லை.
வெங்குட்டு கையில் அகப்பட்டதுக்குள்
விளாம்பழம்தான் சிரேஷ்டமான வஸ்து.
(அந்த ஊருக்கே, ஏன், சுற்றிப் பத்து
மைலுக்கே அவன் பழம் பேர்போனது).
அதையும் அவன் எவ்வளவு ஆவலுடன்
கொடுக்கிறான். "அது வேண்டாம்,
எனக்குப் பிடிக்காது" என்றால் அவன்
மனம் எவ்வளவு நோவும், என்று எண்ணி
சீனுவுக்கு துக்கம் வந்துவிடும். விளாம்
பழங்கூட தனக்குப் பிடிக்கும்போல்
தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வான்.

வெங்குட்டுவுக்கு அன்றைக்கும் சீனு
வீட்டில் சாப்பாடு. ஆகையால் ஒரு
முழுக்குப் போட்டுவிட்டு எருமையைக்
கூடச் சரியாய்த் தேய்த்துக் குளிப்பாட்
டாமல் தண்ணீரில் கிடக்கட்டுமென்று
விட்டுவிட்டு சீனுவுடன் கிளம்பினான்.
ஆனால் நேரே வீடுசேர வில்லை. பாதையை
யொட்டியிருக்கும் வேலியிலுள்ள படலைத்
திறந்துகொண்டு வெங்கிட்டுவின் அடைப்
புக்கொல்லைக்குள் இருவரும் நுழைந்தார்
கள். அதற்குக் காரணம் இருவருக்கும்
ஒரே எண்ணம், ஒரே சமயத்தில் ஜனித்
ததுதான். அந்த வூரில் சிறியவர் பெரிய
வர் எல்லோரும் சீனு பெரிய பட்டணத்
தில் வசிப்பதற்கு ரொம்ப பாக்கியம்
பண்ணி யிருக்கவேணுமென்று எண்ணின
தோடில்லாமல், வாய்க்கு வாய் அவனிடம்
அதைச் சொல்லத் தவறுவதில்லை. 'அவ
னுக் கென்னடி, தினம் போதுவிடிஞ்சாத்
தேரும் திருவிழாவும், அத்தனை பெரியவூரி
லே பொழுதுபோரதே தெரியாது' என்று
[illegible]து கோத நாணிப்பாட்டி அன்றைக்
[illegible]வன் தாயாரிடம் மோர் வாங்க
[illegible] அவன் ஊருக்குப் போவ
[illegible]க் கேட்டுக் கொஞ்சம் பொரு
மை தொனிக்கச் சொன்ன வார்த்தை
கூடத்திலிரு[illegible] சீனுவுக்கு அந்தவூர் மகா
ஜனங்களின் [illegible]பிப்ராயமும் அதுவே
என்று நன்றாய [illegible]ற்று. ஆனால் வெங்
குட்டு ஒருவன்தான் அவன் மனதை
அறிந்தவன். அவனுக்குத[illegible]ான் சீனுவுக்
குத் தன் ஊரிலுள்ள எல்லைக[illegible]ந்த அபி
மானமும், பட்டணவாஸம், பள்ளிக்[illegible]டம்
இதுகளில் உள்ள அளவற்ற வெறுப்[illegible]ம்
நன்றாய்த் தெரியும். ஒவ்வொரு [illegible]
காலையிலும் மாலையிலும் அவன் வெங்
குட்டு அடைப்புக் கொல்லையில் அவ
னுடன் சேர்ந்து, அவன் ஏத்தம் பிடித்
துத் தண்ணீரிறைக்கத் தான் மடை கோலு
வதும், அவன் பில்லறுக்கும்போது தான்
கிளைக்கொட்டால் பாத்திகளைக் கிளறுவ
தும், அவன் மட்டை முடையும்போது
தான் பாளை கிழிப்பதுமாக ஒவ்வொரு
வேலையிலும் தன் சக்திக்குத் தகுந்தபடி
முழு மனதையும் செலுத்திச் சந்தோஷ
மாய்ச் செய்வதைக் கண்ட வெங்குட்டு
வுக்கு கிராமவாழ்க்கையில் சீனுவுக்கிருந்த
ஆர்வம் சாணகலக் கொல்லைகூட இல்லாத
சாக்கடைப் பட்டணத்தில் எவ்விதம் பல
னடையும் என்றெண்ணும்போதெல்லாம்
ஏமாற்றம் ஏற்படும். இருந்தாலும்
படிப்பு அவசியமென்றும், அதை முடித்
துக்கொண்டு பிறகு சீனு ஊருக்கே வந்து
விடவேண்டுமென்றும் அவன் மனதுக்
குள்ளே தீர்மானித்து ஒருவித ஆறுத
லடைவான். சீனு ஊருக்குப் போவதால்
கடைசித் தடவையாய் இன்று கொல்லை
யைப் பார்த்துப்போக ஆவல்படுவா
னென்றே அவன்படலைத் திறந்தது. சீனு
வுக்கும் தன் எண்ணத்தை வெங்குட்டு
சொல்லாமலே யறிந்தானென்று நினைக்க
அவனிடத்திலுள்ள அபிமானம் இரெட்
டித்தது.

ஆனால் கொல்லைக்குள் தாமதிக்கமுடிய
வில்லை. சீனு தகப்பனார் வீட்டு ஆளோடி
யில் நின்றபடி உரக்கக் கூவியழைத்தார்.
இருவரும் அவசரமாய் வீடு சேர்ந்தார்

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: (கல்கத்தா) 1048. (2 லைன்கள்)

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—3 & 4, ஹேர் தெரு, கல்கத்தா.



சௌரங்கி ஸ்கோயரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எங்கள் சொந்த கட்டிடங்கள். இக் கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை 1941ளு ஜனவரி 31உயன்று ஆச்சார்யா ஸர் பி. ஸி. ராய் அவர்கள் நாட்டினர்.

கிளை ஸ்தாபனங்கள்:
ஜம்ஷெட்பூர், பெனரிஸ், பகல்பூர், பாட்னு, கோமில்லா, கர்ஸியாங், திப்ருகார், டினஜாபூர், பாங்கூற & மதறஸ்.

அதிகாரம் பெற்ற மூலதனம்
ரூ. 25 லக்ஷம்

சேகரித்த மூலதனம்
ரூ. 8,90,000

வசூலிக்கப்பெற்ற மூலதனம்
ரூ. 2,95,000

கம்பெனி வேலை செய்யத் தொடங்கிய முதல் வருஷத்திலேயே 10% வீதம் டிவிடண்ட் (வருமானவரி இன்றி) வழங்கப்பெற்றது. 1941ளு செப்டம்பரில் முடிவு இரண்டாவது வருஷத்தின் முற்பாதிக்கு ஓர் இடைக்கால டிவிடண்ட் வழங்கவுத்தேசித்திருக்கிறது.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்கு 5% வட்டி வீதம் நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறோம்.

**நாங்கள் எல்லாவிதமான பங்கு விற்பனைகளிலும், கவர்ன்மெண்ட் ஸெக்யூரிட்டிகளிலும் லேவாதேவி செய்கிறோம்.**

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிப்போர்ட்"டுக்கு எழுதவும். வருஷ சந்தா ரூ. 3.
மாதிரி பிரதிக்கு எழுதுங்கள்.

**இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.**

எங்கள் சென்னை கிளை ஆபீஸ் ஆகஸ்ட் 1உ முதல், மாஜி ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ஸுப்பிரண்டண்ட்டாயிருந்த ராவ் சாஹேப் நடேச அய்யர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் 12, தம்பு செட்டித் தெருவில் நடத்தப்படுகிறது.

கள். "ஏண்டா, வெங்குட்டு, அந்தக் கழுதைக்குத்தான் போது போரது தெரியல்லேன்னு ஒனக்கும் புத்தியில்லையே! நிழல் சாஞ்சுபோச்சு, 18 மைல் போயாகணும், முன்னிருட்டு நாள். அழகாயிருக்கு! சரி, சட்டுன்னு காலையலம்பிவிட்டு சாப்பிடவாருங்கள்" என்று அவர் அதட்டினர். வாய் திறவாமல் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். சீனுவுக்கு சோறு இறங்கவேயில்லை. அவன் தாயார், பாவம், அவனுக்குப் பிடிக்குமென்று புத்துருக்கு நெய் அப்பளத்தோடு கொட்டுக்கொள்ளவும், அன்று கடைந்தெடுத்த வெண்ணெ ஒரு குத்தும், பொறித்த கருவடமும், இன்னும் என்னென்னவோ பண்ணியிருந்தாள். அவனுக்குக் குத்திக் குத்திப் பிடுங்கிற்று. "ஐயோ, ஒண்ணுஞ் சாப்படல்லையே! இருபது மைல் கட்ட வண்டிலே போகணமே, பசி வயித்தை அள்ளிப் பிடுங்கிடுமே" என்று கெஞ்சினுள். ஆனல் பூப்போல் மிருதுவாயும் கடுதாசிபோல் மெல்லியதாயும் புளிப்பில்லாததும் வாசனை கமாய்ப்பதுமான ஒரு அடுக்குத் தோசை தயார் செய்து மிளகாய்ப் பொடியும் நேற்று ஆடிவந்த நல்லெண்ணெயும் சொதச் சொதவென்று இருக்கும்படி விட்டு, ஒரு மூட்டை கட்டி வைத்திருக்கிறுளே, வழியில் பாட்டுகுடிப் பிள்ளையார் கோவிலண்டையில் வண்டியை நிறுத்திக்கொண்டு ஆற்றங்கரையில் சீனுவும் அவன் தகப்பனும் பலகாரம் பண்ணவென்று, அதை மறந்தாளோ?

சீனு சாப்பிட்டுக் கையலம்பிக் கூடத்திற்கு வரவே, தன்னை வழியனுப்பத் தயாராய் வந்திருந்த தன் தோழர்களைக் கண்டான். ராமச்சந்திரன்மட்டும் வரவில்லை. "சே, அவன் எப்படி வருவான், அவன்தான் என்னேடு 'டு' விட்டுட்டானே" என்று தன் மனதுக்குள் கசந்துகொண்டே தன் பெட்டியைத் திறந்தான். அதை அவன் விடுமுறைக்கு வரும்போதெல்லாம் சுவீகரித்துக்கொள்ளுவது வழக்கம். ஊருக்குப் போகும்போது திறந்து போட்டுவிட்டுப் போய்விடுவான். பழைய காலத்துக் கணக்குப் பெட்டி, அதில் எவ்வளவோ அறைகள் உண்டு. அதற்குள்ளிருந்து விதம் விதமான சாமான்களை சொப்படி வித்தைக்காரன் எடுப்பதுபோல் சீனு எடுத்தான். ஆணி கழன்டு போன பம்பரம் ஒன்று, 'குட்டி போட்ட மயில்' தோகைத்துண்டுகள், வெள்ளிப் பாத்திரம் சுற்றி வந்த ஜவ்வுத்தாள் (அதைப் பிரித்து இழுத்துப் பிடித்து உதட்டோடு சேர்த்துவைத்து ஊதினல் வாய் 'பாண்டு' வாசிக்கிறுப் போலிருக்கும்), 5, 6 வர்ணக் கோலிகள் (அவைகளுக்குள் எப்படி அந்த வேடிக்கையான பூவை நுழைத்தார்கள் என்று சீனு அடிக்கடி ஆச்சரியப் பட்டதுண்டு, கடைசியாக அந்த விபரீத மணிச் சரடு, இதுகள் வெளியே வந்தன. இவைகளையெல்லாம் வெகு ஆவலுடன் சீனு சேர்த்து வைத்திருந்தான். தனக்கு ரொம்ப முக்கியமான சினேகிதர்களுக்குத் தான் இவைகளை இதற்கு முன் காட்டினது. ஆனல் இப்பொழுது அவனுக்கவைகளிடமிருந்த பிரமம் மாறி விட்டது. பள்ளிக்கூட நாகரிகத்திற்கும் இந்த கிராமந்தர சாமான்களுக்கும் வெகு தூரமல்லவா? தன்னைச் சூழ்ந்து கொண்டிருந்த குழந்தைகளுக்கு ஒன்றொன்ருய்க் கொடுத்தான். அவர்களுக் கெல்லை யில்லாச் சந்தோஷம். அவர்களும், அந்த ஊரிலுள்ள பெரியோர்கள் போலவே, சீனு பெரிய பட்டணத்தில் வசிப்பதற்குப் பெருத்த பாக்கியம் பண்ணியிருக்க வேணு மென்றே நினைத்தார்கள். விளையாடும் வேளைகளில் அடிக்கடி விளையாட்டை நிறுத்தி விட்டு அந்த ஆச்சரியப் பட்டணத்தையும் அதிலுள்ள வேடிக்கை விளையாட்டுகளையும் பற்றி அவனை நோண்டி நோண்டிக் கேட்பார்கள். அவனும் பின் வாங்குவதில்லை. தன் கற்பனு சக்திக் கெட்டிய வரையில் சமயோசிதமாய் மூக்குக் காது வைத்து ஒவ்வொரு கேள்விக்கும் அவர்களுக்கு வியப்பை யளிக்கக் கூடிய பதில் சொல்லுவான். அவனுக்குப் பட்டண வாஸம் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லையென்னும் விஷயத்தை அவர்களிடம் காட்டினதே யில்லை. அவர்கள் மதிப்பைப் பெறவேண்டி அவன் பட்டண வாஸ வாழ்வில் ரொம்ப அனுபோகப் பட்டவன் போல் நடித்தானென்று நினைப்பது தவருகும். அவர்கள் கண்டிராத பட்டண வாழ்க்

கையில் அவர்களுக் கவ்வளவு மோஹமும் அதைப்பற்றி நினைக்கும்போதே அவ்வளவு சந்தோஷமும் இருக்கும் போது அதெல்லாம் வீண் பிரமமென்றும் அசட்டுத்தனமென்றும் சொல்லி அந்தப் பரமார்த்திகளின் இன்பத்தைக் கெடுப்பதற்கு அவனுக்கு மனம் வருவதில்லை.

இப்பொழுது அவன் செய்த வினியோகத்தில் ஒரு சாமான் மட்டும் சேரவில்லை. நீல மணிச் சரட்டைச் சுருட்டித் தன் பைக்குள் வைத்துக்கொண்டான் சீனு. (ஆமாம்) பைக்குள்ளே தான். சட்டையைக் கண்டால் சீனுவுக்குச் சொல்ல முடியாத வெறுப்பு. ஊருக்கு வந்த நிமிஷம் முதல் திரும்ப ஊரை விட்டுக் கிளம்பும் நிமிஷம் வரையில் அதை விரலால் கூடத் தொடமாட்டான். அப்படியிருந்தாலும் வண்டியிலேறுவதற்கு முன் அதைப் போட்டுக்கொண்டே தீரவேண்டும். அது அவன் தாயாரால் விதிக்கப்பட்ட மாற்றில்லாச் சட்டம். "ஐயோ, மேலே சட்டை போட்டுக்காமெ இப்படி வெய்யில்லே திரியரதே, ஓடம் பென்னத்துக்காகும், கன்னங்கறேன்னு கறுத்துப் போச்சே" என்றந்தம்மாள் வாய்க்கு வாய் துக்கிப்பாள். 'ஆமாம், சட்டெயாம் சட்டெ, எப்பொ பாத்தாலும் சட்டெ யென்ன? மேலே நல்ல காத்தும் பட வாண்டாமா?" என்று சீனுவுக்காக அவன் தகப்பனார் பரிந்து பேசுவார், அவன் கக்ஷி ஜயித்து விடும். அவருக்குக் கூட வண்டியில் போகும் போது சட்டை போட்டுக் கொள்ள வேண்டாமென்று சொல்ல தைரியமில்லை). இதை கவனமாய் பார்த்திருந்த வெங்குட்டு, அங்கே வந்திருந்த பையன்களைக் கூர்ந்து பார்த்து, "எங்கேடா, ராமச்சந்திரனைக் காணும்?" என்று பொதுவாய்க் கேட்டான், ஒருவரும் பதில் சொல்ல வில்லை. எல்லோர் முகத்திலும் அசடு கூத்தாடிற்று. வெங்குட்டு வெளியே போய் விட்டான்.

அதற்குள் சீனு தகப்பனார் வண்டியைக் கட்டி, மெத்தென்று போட்டிருந்த வைக்கோலின்மேல் சமுக்காளம் விரித்துத் தார்க்குச்சியும், முனிசிபாலிட்டி யெல்லைக்குள் சென்றதும் உபயோகப்படுத்தச் சாட்டைக் கொம்பும் எடுத்துச் சொருகி, சாமான்களை வண்டியில் ஏற்றினார். சீனு வாசலில் வந்து கூடியிருந்தவர்களிடம் மரியாதையாய் விடைபெற்றுக்கொண்டு, பிள்ளையார் கோயிலுக்குப் போய்த் தேங்காயுடைத்துவிட்டு பாட்டுகுடிப் பிள்ளையாருக்கு (ரொம்ப வரதர் என்று பிரசித்தி) தேங்காயையெடுத்து வைத்து வண்டியில் ஏறி உட்கார்ந்தான். வண்டியும் அவன் தகப்பனார் ஓட்ட நகர்ந்தது. (வீராச்சாமி வீட்டுக்குச் சோறு தின்னப் போயிருந்தான்; ரஸ்தாவுக்குப் போனதும் வந்து சேர்ந்துகொள்வான்.) அதிக தூரம் சென்று வழியனுப்புவது ஆகாதென்று சீனு தாயார் உள்பட எல்லோரும் நின்றுவிட்டார்கள். வெங்குட்டு மட்டும் வண்டி வாய்க்காலில் இறங்கியேறும் வரையில் கவனிக்கவேண்டுமென்ற வியாஜமாய்ப் பின் சென்றான். சீனு கிழக்குக் கோடியிலுள்ள விசித்திர வானத்தை நோக்கியபடியே எதையோ யோசித்தவன் போலும் தன்னை வழியனுப்பியவர்களை முற்றிலும் மறந்தவன்போலும் காணப் பட்டான். ஊர் கண்மறையும் வரையில் ஒவ்வொருவரையும் பேரைச் சொல்லியோ உறவைச்சொல்லியோ கூப்பிட்டு "ஊருக்குப் போய்வரே" னென்று சொல்லும் வழக்கமுள்ள அவன் இப்படி வாய் திறவாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட அவன் தாயாருக்கு மனம் சகிக்கவில்லை. சட்டென்று வீட்டுக்குள் சென்றுவிட்டாள். வண்டி பிள்ளையார் கோயில் மதிலுக்குப் பின்புறம் திரும்பிற்று. வாய்க்காலின் கரைக் கருகாமையால் புதை மணல். மாடுகள் சிரமப்படாதபடி வெங்குட்டு பின்னால் நின்று தள்ளிக்கொண்டு வந்தான். திடீரென்று ஒரு சீமைக்காட்டாமணிச் செடியின் நிழலில் மூன்று நாளாய்த் தான் காணாத ராமச்சந்திரன் நிற்பதைக் கண்டான் சீனு. அவனும் சீனுவைப்பார்த்து, ஒரே ஓட்டமாய் ஓடிவந்து, மூஞ்சியில் ஆவல் ஒருபக்கமும் வெட்கம் ஒரு பக்கமும் மாறாட, "ஊருக்குப் போயிட்டு வரையா, சீனு? நாளன்னிக்கி நானும் நாகப்பட்டணம் போகப்போறேன், எங்க பெரியம்மா வாத்திலிருந்து வாசிக்கிறதுக்கு,"

என்று வண்டியைப் பிடித்துக்கொண்டு மெதுவாய்ச் சொன்னான். "அண்ணா, சித்தெ வண்டியெ நெறுத்துங்கோ, இந்த இடதுபக்கத்துக் கடையாணி கிளம்பியிருக்கு, அதைத் தட்டரேன்" என்று வெங்குட்டு சீனுதகப்பனாரைக் கூப்பிட்டுச் சொன்னான். வண்டி உடனே நிற்க, வெங்குட்டு ஒரு கல்லை யெடுத்துக்கொண்டு (அனாவசியமாக) கடையாணியைத் தட்டினான். இது கண்ட சீனு ஒருவருக்கும் தெரியாமல் நீலமணிச் சராட்டை பையிலிருந்தெடுத்து, "போய்ட்டு வரேன். இந்தா, இதைக் கொண்டுபோய் சாவித்திரிகிட்டக்குடு," என்று சொல்லி, அதை அவன் கையில் அழுத்தி, ஒரு வேளை வேண்டாமென்று சொல்லிவிட்டால் என்ன பண்ணுகிறதென்று பயந்து, "நான், அன்னிக்குத் தரமாட்டேன்னு சொல்லல்லேடா, ஆத்துக்குப் போய் அவுத்துத்தரேன்னுதான் சொன்னே'னென்று ஏதோ சொல்ல ஆரம்பித்து, அது முழுவதும் சொல்ல வாயெழாமல் வெட்கத்தால் தடுமாறிப் பேச்சை மாற்றவெண்ணி, "சரி, நீயும் ஊருக்கு லீவுக்கு வருவேயோல்லியோ?" என்று முடித்தான். அந்த வார்த்தையின் பொருள் அவன் மனதிற்கெட்டவே, ராமச்சந்திரனும் பள்ளிக்கூடம் போய்விட்டால் இனி தன் ஊர் ஒருநாளும் பழைய ஊராயிராது என்ற எண்ணம் அவனைத் தாக்கித் தொண்டையை அடைத்தது. ராமச்சந்திரன் ஒன்றும் பதில் சொல்லவேயில்லை. இருவருக்கும் கண்ணீர் கொப்புளித்தது. இதுகண்ட வெங்குட்டு கடையாணி மராமத்தை நிறுத்தி "வண்டியை யோட்டுங்கோ, அண்ணா," என்று உரக்கச் சொல்ல, வண்டியும் வெகு வேகமாய்க் கிளம்பித் தண்ணீரில் இறங்கிற்று. வெங்குட்டு மாடுகளுக்கு குஷியுண்டாகும்படி, "ஏய்ய, டேய், ஏல்ர கொத்தா, ஏர்ரா ராஜா, சிங்கக் குட்டி!" என்றெல்லாம் ஆரவாரிக்க, மாடுகளும் ஒரே பாய்ச்சலாய் மோடிட்ட எதிர்க்கரையில் முன்னங்கால்களை அழுத்தி முழங்கால்களில் பாரத்தைத் தாங்கி, முதுகை வில் வளைப்பதுபோல் வளைத்து திமிள் கழுத்துப்பக்கம் சாய்ந்து விறைக்க, முழு பலத்தையும் செலுத்தி வண்டியை அலக்ஷியமாய் இழுத்துக்கொண்டு ரஸ்தாவை யடைந்தன. வெங்குட்டு ஆறு தாண்டி வரப்படாது என்ற நியாயப்படி அக்கரையிலேயே நின்றுவிட்டான். வண்டி மேற்கே நகர்ந்தது. வெங்குட்டு ராமச்சந்திரன் தோளில் கையைப் போட்டுக்கொண்டு குனிந்து அவனுடன் காதோடு ஏதோ சொல்லிக்கொண்டு இருவரும் தெருவை நோக்கிச் சென்றார்கள். இதைக் கண்ட சீனுவுக்கு துக்கம் இன்னும் ஜாஸ்தியாயிற்று. தன் தகப்பனார் ஒருவேளை பார்த்துவிடுவாரோ என்று பயந்து அவஸரமாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டான். அவர் பார்த்தாலும் பார்க்காதவர்போல் மாட்டை விரட்டுவதில் மும்முரமாயிருந்தார். "ஏதோ குழந்தை அம்மாவைப் பிரிந்துபோவதால் வருந்துகிறான். நாளைக்குச் சரியாய்ப் போய்விடுகிறது" என்றெண்ணினார். அந்த ஒரு நாள் கலவரத்தில் சீனு குழந்தைப் பருவம் நீங்கினான் என்பதை அவர் கண்டாரா?

# உபோத்காதம்

(ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ.,
பி.எல்., அண்ணாமலை நகர்.)

## மஹா மஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் இயற்றிய ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள்.

1903 மார்ச்சு மாத முதலில், 89-வதுவயதில், "பேரியவாள்' காலமானார்கள். உடனே அவர்கள் ஞாபகார்த்தமாக ஒரு பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. அதில் சுமார் பத்து பையன்களுக்குச் சாப்பாடு போட்டு ஸம்ஸ்க்ருதம் கற்பிக்க ஏற்பாடாயிற்று. என் பிதா அவர்களின் பிரதம சிஷ்யரான தேவங்குடி சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் என்பவர், உபாத்யாயராக இருந்தார். இப்படி கொஞ்ச காலம் நடந்தது. அந்த ஸமயம் சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் தேவங்குடியிலிருந்து சுமார் பத்து வயதுள்ள ஒரு பையனை அழைத்து வந்தார். பையனுக்குத் தாய் இல்லை. தந்தையார் சிரம தசையால் எங்கேயோ இருந்தார். பையன் பாடசாலையில் சேர்ந்தான். அவன் பெயர் கோவிந்தன். பாடசாலை நீடித்து நடக்கவில்லை. பணவசூலுக்காகப் பல யோசனைகள் செய்து, எல்லாம் பேச்சோடு நின்றுவிட்டது. லௌகிக முறையில் பிரசாரம் செய்து பல விடங்களுக்குத் துணிந்து சென்றல்லவா, பணம் சேர்க்க வேண்டும். அதற்குத் தக்க மனிதர்கள் இல்லை. பாடசாலையில் சாப்பாடு எடுக்கப் பட்டது. கோவிந்தன் எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வந்த முகூர்த்தம், சுமார் பத்து வருஷம், வீட்டில் பிறந்த பிள்ளை போல் வளர்ந்து வந்தான் அவன் நிர்கதியான சிறுவனனபடியாலும், இட்ட வேலைகளைச் சிரத்தையுடன் செய்து வந்ததாலும், நல்ல ஊக்கத்துடன் படித்து வந்ததாலும், ஸத்யம், வினயம், சீலம் முதலியன பொருந்தியவனனதாலும், என் பிதாவுக்கு அவனிடம் நாளுக்கு நாள் பிரேமை அதிகரித்து வந்தது. சுலோகம் வாசிக்கும் போது அவனுடைய கண்டம் இனிமையாய் இருப்பது கண்டு கொஞ்சம் ஸங்கீதமும், லக்ஷ்ய முறையில் அவனுக்குப் போதித்து வந்தார்.

என் தந்தையார் சுமார் 30, 32 வயதில் ஸம்ஸ்க்ருதத்தில் கீர்த்தனைகள் இயற்றத் தொடங்கினர். அன்றன்று இயற்றிய கீர்த்தனைகளை உடனே கோவிந்தனுக்குப் பாடம் பண்ணி வைப்பார். அவர் முதன் முதல் இயற்றிய கீர்த்தனம் சகன ராகத்தில்தான். பின்பு இயற்றிய கீர்த்தனம் ஆனந்த பைரவியில். 'ஆனந்த பைரவியை நாடகக்காரர்கள் அதிகம் கையாளுவதால், அதில் தியாகய்யர் கீர்த்தனம் செய்யவில்லை. என்று ஒரு வதந்தி உண்டு. என் தந்தையார் ஆனந்த பைரவியில் மூன்று கீர்த்தனைகள் செய்தார். அவர் கீர்த்தனை இயற்றுவதும், ஸங்கீத ரஸிகர்களிடம் பாடிக் காண்பிப்பதும், கோவிந்தனுக்குச் சிக்ஷை சொல்வதும், என்னுடைய இளம் பருவத்திற் கண்ட அனுபவங்கள். அப்பொழுது எனக்கு வயது 7, 8 இருக்கலாம். கோவிந்தன், என்னை விட மூன்று நான்கு வயது பெரியவன்.

புதுக் கீர்த்தனங்கள் அதிகமாக ஆக, பழைய கீர்த்தனங்களைத் திரும்பிப் பாடும் வழக்கம் ஏற்பட்டது. விடியற்காலத்தில் கோவிந்தனைத் தட்டி எழுப்பி உட்கார வைத்துப் பழைய கீர்த்தனங்களின் ஆவர்த்தியை ஆரம்பிப்பார். நான் ஸங்கீத த்வனியினால் தூக்கத்தை விட்டெழுந்து கானம்ருதத்தைப் பருகிக்கொண்டு, மயங்கியிருப்பேன். கோவிந்தனுடைய சாரீரம் புல்லாங்குழலின் த்வனியைப்போன்றது. என் தந்தையாரின் சாரீரம் பிடிலின் எஃகு தந்தியின் நாதத்தை அனுகரிப்பது. இரண்டும் சேர்ந்தால் திராக்ஷையைத் தேனில் ஊறப்போட்டதுபோல் இருக்கும். சிட்டையாகப் பாடுவார்கள். நினைத்தபடி ஸங்கதி போடக் கீர்த்தனைக் கர்த்தா ஸம்மதிக்கமாட்டார். ஸங்கதிகளைக் கணக்குப் பண்ணிச் சொல்லி வைப்பார். இவ்விதம் தயாரானபடியால் கோவிந்தன் இரு சாரீரமும் ஒரு குரலும்போல் அவ்வளவு ஒற்றுமையாய்ப் பாடுவான். தட்டுத் தடங்கலில்லாமல் ஒரே அமிர்தவருஷமாய் கீர்த்தனத்திற்குமேல் கீர்த்தனம் நடக்கும்.

விடியுமுன் சுமார் பதினைந்து இருபது கீர்த்தனைகள் பாடுவார்கள். இன்றைக்கும் அந்த கானம் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

என் தந்தையாருக்குப் பகலில் கீர்த்தனம் இயற்றவோ, ஜண்டையாய்ப் பாடவோ, அதிகம் அவகாசம் இராது. "பெரியவாளுக்"குப் பிறகு அவர் பல சிஷ்யர்களுக்குச் சாஸ்திர பாடங்கள் சொல்லிவந்தார். மேலும் அநேகம் கிரந்தங்களைப் பரிசீலனைகள் செய்வதிலும், பார்க்க வரும் வித்வான்களிடமும், பிரமுகர்களிடமும் ஸல்லாபம் செய்வதிலும், பொழுது போய்விடும். ஆகையால் முன் இரவு பின் இரவுகளில் தான், ஸங்கீத சிந்தனை. அவர் இரவில் விளக்கு வெளிச்சத்தில் புஸ்தகம் படித்துப் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை. ஆனால் பகலில் ஸங்கீத நண்பர்கள் வந்தால் தன் கிருதிகளைப் பாடிக் காண்பிப்பார். அவரிடம் வந்துகொண்டிருந்த வெளியூர் ஸங்கீதஞ்ஞர்களில் போலகம் நடேசய்யர், சிமிழி ஸுந்தரம் என்ற இருவர்களை எனக்கு ஞாபகமிருக்கிறது. விசேஷமாகச் சிமிழி சுந்தரம் என்பவரிடம், தன் கீர்த்தனைகளைப் பாடிக் காண்பித்து அந்த அந்த ராகத்தில் தியாகையரவர்கள் போட்டிருக்கும் கீர்த்தனைகளுடன் ஒத்துப் பார்த்து,பேசிக்கொண்டிருப்பார். அப்போது சிறு பிள்ளைகளாய் ஸங்கீதம் அப்யஸித்தவர்களில் கிருஷ்ணன் என்பவரும், கத்தி (மாதிரிமங்கலம்) நடேசன் என்பவரும், முடிகொண்டான் ஸபாபதி என்பவரும் வருவதுண்டு. ஸபாபதி அய்யர் சில வருஷங்களுக்குப் பிறகு என் தந்தையாரிடம் சிற்சில கீர்த்தனைகளைப் பாடம் செய்துகொண்டார். ஸங்கீத வித்வான்கள் அல்லாமல் கேவலம் ரஸிகர்கள் சிலர் வருவார்கள். இருந்தாலும் பெரும்பாலும் பகலில் கீர்த்தனைகள் பாடவோ இயற்றவோ நேராது.

அஸ்தமன வேளைகளில் ஏகாந்தமாய் ராகம் பாடிக்கொண்டிருப்பார். பைரவி, காம்போதி, ஸகனா, ஆனந்த பைரவி, நாட்டக் குறிஞ்சி, பியாகடை, பிலஹரி முதலிய ராகங்களை வெகு விஸ்தாரமாய்ப் பாடுவார். அதிலும் காம்போதியில் அவருக்கு அதிகம் பிரியம். அநேகமாய் நான்தான் ச்ரோதா. சில நாள் பாடிக்கொண்டிருக்கும்போது ஓடும் ஜலம் உறைவதுபோல் ஸாகித்யம் உருவெடுக்கும். அது சில ஸமயம் பல்லவி அனுபல்லவியுடன் நின்றுவிடும். சில நாள் கீர்த்தனமே முழுதும் உருவாகிவிடும்.

என் தந்தையாருக்கு லக்ஷ்ய ஞானமே யொழிய லக்ஷண ஞானமென்று சொல்ல முடியாது. எந்தக் காலத்திலும் தியாகய்யர் முதலியவர்களின் கிருதிகளை அவர் பாடி, நான் கேட்டதில்லை. கேள்வியில் எல்லாம் தெரியும். ஆனால் ஒன்றும் தான் பாடும்படி தயார் செய்துகொள்ளவில்லை. ஸ்வரம் பாடவோ, தன் கீர்த்தனங்களை ஸ்வரப்படுத்தவோ, அவர் பிரயத்தனப்பட்டதில்லை. சாஸ்திரத்தைத்தான் அவர் ஊக்கம் எடுத்துக்கொண்டு படித்தார். ஸங்கீதம் ஏதோ ஒரு பக்கத்தில் தானாக உண்டாகியிருந்தது. அதை அவர் அதிகம் கொண்டாடவில்லை. ஏதோ இருந்தமட்டில் லாபமென்று அதோடு விட்டுவிட்டார். கோவிந்தனுக்குச் சொல்லி வைத்தது, ஸ்வரப்படுத்தாமல் சிட்டையாக அமைக்கப்பெற்ற ஸாஹித்யம்தான். தியாகய்யர் பெரிய ஸ்வர ஞானியாயிருந்தும் இவ்விதமேதான் அத்யயனம் செய்வதுபோல் சொல்லிவைப்பதென்றும், அதிகக் கற்பனைகள் செய்யும் ஸ்வரக்ஞானியான சிஷ்யனிருந்தால் அவனை நிராகரித்துவிடுவாரென்றும் கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? கோவிந்தனுக்குச் சாரீர வஸதியிருந்தால் எந்தப் பிடிகளையும் எப்படிப்பட்ட ஸஞ்சாரங்களையும் லக்ஷ்யத்தில் பிடித்துவிடுவான்.

கிட்டத்தட்ட அதேசமயத்தில் என் தந்தையார், தமதுபந்து ஒருவர் ஒரு மண்டலம் நடத்திய ஒருவைதிக மஹோத்ஸவத்திற்குப் போயிருந்தார். அங்கு இரண்டு கதகர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் மாத்வர். மற்றொருவர் தஞ்சாவூர்—பாகவதர்; ஸ்மார்த்தர். இருவரும் மாற்றி மாற்றி கதாகால க்ஷேபங்கள் செய்ய ஏற்பாடா

யிருந்தது. அந்த 45 நாளும் வாரத்திற்கு இரண்டு மூன்று கதைகள் வீதம் நடந்தன. தஞ்சாவூர் பாகவதருக்கும் என் தந்தையாருக்கும் சிநேக பாவம் ஏற்பட்டது. பாகவர்கதைகள் அவ்வளவு சுகப்படவில்லை. ராயர் அவர்கள் "ஜமாய்த்து"க்கொண்டிருந்தார். தஞ்சாவூர் பாகவதர் என் தந்தையாரைச் சரண மடைந்தார். இவர் அவருக்காக கதைகள் தயாரிக்க ஆரம்பித்தார். கதாபாகத்தைச் செப்பனிட்டுக் கொடுத்தும், இதிஹாஸபுராண ஸ்ம்ருதிகளிலிருந்தும் காவிய நாடகங்களிலிருந்தும் ஸந்தர்ப்பங்களையும் ச்லோகங்களையும் எடுத்து இணைத்துக்கொடுத்தும், விவரித்துச் சொல்லுங்கால் சொல் வன்மையைப் புகட்டியும், ஸம்ஸ்க்ருத ஸாஹித்யமாகவே முழுவதும் கதா மெட்டுக்களில் பாட்டுக்கள் அமைத்துக் கொடுத்தும், ஆங்காங்குப் பொருந்தும்படி புதிதாகவே சில கீர்த்தனைகளை இயற்றிக் கொடுத்தும் பாகவதரை வெகுசீக்கிரத்தில் புது பாகவதராகச் செய்துவிட்டார். தஞ்சாவூர் பாகவதர் வெற்றியையும் புகழையும் அடைந்தார். என் தந்தையார் எழுதிய சரித்திரங்களில் முக்கியமானது ருக்மாங்கத சரித்திரம். அதில் சில ஸாஹித்யங்கள் இருக்கின்றன.

இவ்விதமே மன்னார்குடி ராமய்யா பாகவதருக்கும் சில சரித்திரங்கள் • தயார் செய்து கொடுத்திருக்கிறார். காலஞ்சென்ற ஸௌந்தரராஜ பாகவதர், சரித்திரங்கள் ஜோடிப்பதின் பொருட்டு என் தந்தையாரிடம் சிலகாலம் வந்து கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவை பிற்காலத்தில் நிகழ்ந்தவை.

என் தந்தையார் அவர்கள் சுமார் 35-வது வயதில் பாகவதப் பிரஸங்கம் செய்யத் தொடங்கினார். அதற்குப் பிறகு கீர்த்தனைகள் இயற்றுவதில் மனம் செலுத்தவில்லை. சுமார் பதினைந்து வருஷங்களுக்கு மேல் இடைவிடாமல் பாகவதம் ராமாயணம் நடந்து கொண்டே இருந்தது. மஹா சாஸ்திர பண்டிதரும், ஸஹ்ருதய சிகாமணியும், ஸங்கீத நிபுணரும், இணையற்ற சொல் வன்மையுள்ளவருமான ஒருவர், அதுவரையில் புராணம் சொன்னதில்லை. பின்னும் இல்லை. "பக்ந: க்ருஷ்ண பாகவதா பவந்தி" என்று அநேகமாய் அரைகுறைகள் ஆச்ரயித்து வந்த புராணப்ரவசனத்திற்கு அவர் ஒரு பெருமையைக் கொடுத்தார். அவ்விதப் பிரவசனங்களில் சுலோகங்களை ராகத்தில் சொல்வார். சில சமயம் ஆலாபனம் விரிவாகும். வெகுநாள் வரையில் மூலம்மட்டும் படிப்பவராயிருந்த மன்னார்குடி வேம்பு கனபாடிகள், ஸமயோசிதமாய் ராகங்களை மாற்றிக் கொடுத்துத் தானும் ரஸித்து ஸபாஜனங்களையும் ரஸிக்கும்படி செய்வார். இவருடைய மூலபடனத்தினால் பிரவசனங்களில் ஸங்கீதநயம் நிரந்தரமாக ஏற்பட்டது. அச்சமயங்களில் அடிக்கடி வந்து பிரசித்தி பெற்ற நாயனக்காரரான மன்னார்குடி சின்னப்பக்கிரி கேட்டு ஆனந்திப்பார்.

துக்காராம் ஸ்வாமி என்று ஒரு நைஷ்டிகப் பிரம்மசாரி இருந்தார். அக்காலத்தில் அவருக்கு வயது 60 வரை இருக்கலாம். அவர் ராம பக்தர். ஸங்கீதரஸிகர். சுத்தமான ஆத்மா. அவர் அடிக்கடி மன்னார்குடிவந்து இருந்து கதைகேட்பார். நடுவே ஸங்கீதத்தில் ஸபாஜனங்கள் மெய்மறந்திருக்கும் தருணம் அவர் ஸிம்மகர்ஜனம் போல் ஹாஹாகாரம் செய்வார். திடீரென்று எல்லோரும் அவர்பக்கம் திரும்பிவிடுவார்கள். ஆனால் அவரை யாருக்கும் இன்னார் என்று தெரியாது. அவரும் ஒரு மூலையில்தான் பதுங்கி இருப்பார். மறுநாள் காலை "ஹரி:" என்று கூப்பிட்டுக் கொண்டு அவர் வீட்டில் நுழையும் போது ஆனந்த பரவசம் உருவெடுத்து வந்ததைக் கண்ணால் காணலாம்.

இவ்விதம் பிரவசனப் பிரவிருத்தி ஏற்பட்ட பிறகு கீர்த்தனைகள் இயற்றுவது போய்விட்டது. ஆதலால் அவர் இயற்றியது சுமார் 60, 70 கீர்த்தனைகள்தான். அவை முழுவதும் ஸ்ரீ கோவிந்தசாஸ்திரிகளுக்குத்தான் பாடம். ஸ்ரீ கோவிந்த சாஸ்திரிகள் 33 வயதுக்குள் ராமாயண கதா காலக்ஷேபத்தில் திக்விஜயம் செய்து மஹாக்யாதிமானாக விளங்கிக் கடைசியில் சென்னையில் கதை நடக்கும்போது பக்தர்களின் துரதிருஷ்டவசத்தால் திடீரென்று

காலமானார். என் தந்தையாருக்கும் எழுதியதை ஜாக்கிரதையாய் வைக்கும் வழக்கமில்லாததாலும், நாள் ஆனபிறகு மறதியாலும், தன்னுடையதுதானே என்ற அபிமானக் குறைவினாலும், ஷை கீர்த்தனைகள் மறைந்துபோகக் காரணமாயிற்று. ஆனாலும் ஒரு அனுகூல ஸம்பவத்தால் சில மிஞ்சி யிருக்கின்றன. முன் கூறப்பட்ட முடிகொண்டான் ஸபாபதி அய்யருடைய சிஷ்யர் தேவங்குடி ஸாமிநாதய்யர், சுமார் 1915 ல் நேரில் பாடக் கேட்டு ஷை கீர்த்தனைகளில் சிலவற்றை ஸ்வரப்படுத்தி எழுதினார். அந்த நோட்டுப் புஸ்தகத்தை இவ்வளவு நாள் காப்பாற்றி வைத்து இப்போது என் வேண்டுகோளுக் கிணங்கி என்னிடம் கொடுத்திருக்கிறார். அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு அக்கீர்த்தனங்களை பாரதமணியில் ஸ்வரஸாஹித்ய தாத்பர்யங்களுடன் பிரசுரிக்க எண்ணி யிருக்கிறேன். ஸங்கீத வித்வான்கள் அன்புகூர்ந்து அவைகளைப் பொறுக்கிஎடுத்து கௌரவத்துடன் கையாண்டு பிரசாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸம்ஸ்க்ருதத்தில் தியாகய்யர் சில கிருதிகளை இயற்றி இருக்கிறார். தீக்ஷிதர் கீர்த்தனங்கள் முழுவதுமே ஸம்ஸ்க்ருதத்தில்தான். தியாகய்யர் காலத்திற்கு முன்பு, ஸதாசிவப் பிரும்மேந்த்ராள் முதலியவர்கள் ஸம்ஸ்க்ருதத்திலேயே எளிய கீர்த்தனைகளை அமைத்திருக்கிறார்கள். பிராசீனமான ஸங்கீத கிரந்தங்களில் உதாஹரணமாய் கொடுக்கப்பட்ட கீதங்கள் எல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலேயேஇருக்கின்றன. இருந்தாலும் ஸ்ரீ த்யாகய்யரின் தெலுங்கு கீர்த்தனைகள் பிரசாரத்திற்கு வந்த பிறகு தெலுங்கைப் போல் எந்தப் பாஷையும் ஸங்கீதத்திற்கு உவந்ததல்ல என்று ஒரு பிரக்யாதி ஏற்பட்டது. ஸம்ஸ்க்ருதத்தில் விஸர்க்கமும், கடினமான சில அக்ஷரங்களும், ஸங்கீத இணைப்புக்கு இடையூறு தருகின்றன. தியாகய்யர் முழு ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகளில் ஸம்ஸ்க்ருதத்தை வெகு ஜாக்கிரதையாயும் தந்திரமாயும் கையாளுகிறார். அவருடைய ஸம்ஸ்க்ருத கிருதிகள் அவருடைய தெலுங்குக் கிருதிகளைப் போலல்லாமல் ஸம்போதனங்கள் நிறைந்தவையாயும், அந்தரங்கம் பொங்கும் பாவபுஷ்டி அற்றவைகளாயும் இருக்கின்றன. தீக்ஷிதரவர்கள், க்ருதிகள் ஸம்ஸ்கிருத பதத்திறம் பொருந்தியனவானாலும், புராண கிருகாஸ க்ஷேத்ர மஹாத்ம்ய மந்த்ர சாஸ்திராதிகளின் மர்மங்களடங்கியவைகளாகவும் மிக்க உயர்வான பத ஸந்தர்ப்பங்கள் உடையனவாயும் இருக்கின்றன. தியாகய்யரின் தெலுங்குக் கீர்த்தனங்களின் அந்தரங்கப் பெருக்கையும் (lyrical quality) தீக்ஷிதர்வாளின் ஸம்ஸ்க்ருதச் சொற்றொடர்களின் வன்மையையும், இருவர்களுடைய ராகபாவத்தையும் ஸம்ஸ்க்ருதக் கீர்த்தனத்தில் பார்க்க வேண்டுமானால் நாம் பிரசாரம் செய்ய எடுத்துக் கொண்டிருக்கும் இந்தக் கீர்த்தனங்களில் தான் பார்க்கலாம். மற்றும் ஓர் குணம் மறக்கத்தக்கதல்ல; தீக்ஷிதர்வாளின் ஸம்ஸ்க்ருதம் பெரும்பாலும் "கௌட" ரீதியை அனுசரித்ததாய் "நாரிகேள" பாகமாய் இருக்கும். பிரகிருதக் கீர்த்தனைகளில் ஸம்ஸ்க்ருத பாஷை "வைதர்ப்பீ" ரீதியையும் திராக்ஷா பாகத்தையும் ஆச்ரயித்திருப்பது விளங்கும். இக் கீர்த்தனைகளில் சிலவற்றில் நடுவே மத்யமகால நடையில் அடர்ந்த பதவிந்யாஸங்கள், தீக்ஷிதர் கீர்த்தனைகளை ஞாபகப்படுத்தினாலும் அவைகளைப்போல் விளம்ப நடையிலில்லாமல், பொதுவாய்ப் பல்லவி அநுபல்லவி எடுப்புகள் தியாகய்யர் கீர்த்தனைகள் மாதிரி, சுறுசுறுப்பாய் அமையப் பெற்று இருக்கின்றன. மேலும் தியாகய்யர் தீக்ஷிதர் முதலிய கீர்த்தனைக் கர்த்தாக்களின் ஸம்பிரதாயத்தில் வழங்கும் "எதுகை" என்ற அனுப்பிராசத்தை நம் கர்த்தா எடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் "எதுகை"யை விட வேறு அனுப்பிராசங்கள்தான் ஸம்ஸ்க்ருத காவ்யப் பிரபந்தங்களில் பழகி வருவன என்று இவர் ஏனைய அனுப்பிராசங்களையே வெகுவாய்ப் பிரயோகித்திருக்கிறார். ஒரு சமயம் (சுமார் 1909ல்) திருக்கோடிக்காவல் பிடில் கிருஷ்ணய்யர், இவரிடம் தன்யாசிக் கீர்த்தனத்தையும் மற்றும் ஒன்றையும் எழுதிக் கொண்டார், என்பதி

விருந்து இவற்றில் உன்னத ஸங்கீத ஸாஹித்ய அம்சங்கள் பொருந்தி யிருப்பதற்கு வேறு அத்தாக்ஷி நாம் தேட வேண்டியதில்லை. காளிதாஸாதி மஹா கவிகள் பல விஸ்தாரமான காவ்யங்களால் பூமியில் கீர்த்தியை ஸ்தாபித்தார்கள். அமருகன் ஒரு சதகத்தால் உலகத்தை வசப்படுத்தினன். அதுபோல் கீர்த்தனைக் கர்த்தாக்களின் நடுவே சிறிது கீர்த்தனைகளையே இயற்றிய பிரம்ம ஸ்ரீ மஹா மஹோபாத்யாய சாஸ்திர ரத்னகர யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுக்கும் ஸங்கீத உலகில் பிரகாசித்த ஒரு கௌரவமான ஸ்தானம் ஸரஸ்வதீ தேவியால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பது எனது துணிபு.

அடுத்த ஸஞ்சிகையில் முதலாவதாக ஸரஸ்வதி தேவியின் பேரில் இயற்றிய கல்யாணி கீர்த்தனம் பிரசுரிக்கப்படும்.


நோட்டீஸ்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

O. S. No. 20/1939

திருவேங்கிட பல்லவறயன்—மனுதார்,
மே. வாதி.

1. கோவிந்தம்மாள்
2. மருதாயி அம்மாள்
3. அ. ரே. அருணஜல வாண்டையார்.
} பிரதிவாதிகள்

ஷை நம்பர்மனுதார் மேடோவர் வாதி வக்கீல் K. சின்னஸாமிய்யர் தெரிவிப்பதாவது. இந்த நம்பரில் ஏற்பட்டிருக்கும்பெந்தக டிக்கிரியின் கிஸ்தியார் சொத்துக்களின் மதிப்பு நிஷ்கரிசை செய்யவும் ஏலம் போட வேணுமாயும், ஷை ஏலத்தில் மனுதாராராவது மனுதார்வக்கீல் அவர்களாவது ஏலம் கேழ்க்கவும் ஏலத்துகையை டிக்கிரி துகையில் உளவடைத்துக் கொள்ளவும் பர்மிஷனுக்கு மனுதாரரால் மனுக்கள் கொடுக்கப்பட்டும், ஷை 3-ம் பிரதிவாதிக்கு ஷை ஏல நோட்டீஸ் அனுமதி நோட்டீஸ்களை அவர்கடைசியாய்குடியிருந்ததும், சொந்த இடமுமாகிய மூவாநல்லூர் கிராமத்திலுள்ள வீட்டிலும் இந்தக் கோர்ட்டு வாசலிலும் ஒட்டிச் சார்வு செய்யவும்பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி, 28-11-1941ல் ஈரங்கிபோட்டிருப்பதால், அன்று ஷை கோர்ட்டில் பகல், 10 மணிக்கு ஆஜராகி ஆக்ஷேபணைகளை தெரிவித்துக்கொள்ளலாம் என்பதை இதன் மூலமாய் அறிவிக்கலானேன்.

மன்னார்குடி,
18-10-41

K. Chinnaswamy.
மனுதார் வக்கீல்.



நோட்டீஸ்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1937ஆ O.S. No. 479.

றமலிங்க தேவர்—வாதி

றஜாமணி அம்மாள்—பவர் ஏஜண்டு

மன்னார்குடி தாலுக்கா கடப்பாச்சி கோட்டையிலிருக்கும் ரெங்கப்ப தேவர் மகன் S. R. நடேச தேவர்—பிரதிவாதி.

இந்த நம்பரில் ஏலத்துக்கு வரும் சொத்துக்கு கோர்ட்டு மதிப்பை குறைத்து ஏலம் போடும் விஷமாய் நோட்டீசுகள் பிரதிவாதிக்கு சர்வாகாததால், கடப்பாச்சி கோட்டையில் ஒட்டி சர்வு செய்ய மனுக்கொடுத்து உத்திரவாகி 1-12-41ல் ஈறங்கி போடப்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி மேல்படி கோர்ட்டில் ஆஜராகத் தவறினல் வாதி மனுப்படி உத்திரவு செய்யப்படும்.

மன்னார்குடி,
20-11-41.
(Sd.) S. நாறயணய்யர்,
வாதி வக்கீல்.

# குப்பியின் புதுச் சொக்காய்

ஸ்ரீமதி சகுந்தலா ஸ்ரீனிவாஸன்.

சீனு ஆபீசிற்குப் போவதற்குக் கோட்டை மாட்டிக்கொண்டு வெளியே கிளம்பும் சமயம், அவனை வழி ம்றைத்து "இங்கே பாருங்கள்! குழந்தை பிறந்து அவளுக்கு மூன்று வயது கூட ரொம்பி விட்டது; பாவம், இதற்கு முன் அதற்கு ஒரு வருஷம் கூட நாளும் கிழமையுமாய் ஒரு புதுசுன்னு ஒரு சொக்காய் வாங்கி உடுத்தினதே கிடையாது. என்னவோ இந்த வருஷம் பகவான் தயவுபண்ணி நமக்கு ஒரு கஷ்டத்தையும் கொடுக்காமல் தீபாவளியை கொண்டாட விட்டிருக்கிறார். ஏதாவது நம்மால் ஆனதை அதற்குச் செய்ய வேண்டாமா? நமக்கு வேண்டுமானால் ஒன்று வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டாள்.

"அதற்கு என்னடி என் 'சக்கு ராணி' உன்னிஷ்டம் போல் கொண்டாடலாம். நான் என்னால் கூடுமான உதவியை கண்டிப்பாய்ச் செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவளது கன்னத்தில் மெதுவாய்த் தட்டிவிட்டு ஆபீசிற்கு அவசரமாய்ப் போய் விட்டான் சீனு.

அன்று அவனுக்கு ஆபீசில் ஒரு வேலையும் ஓடவில்லை. வீட்டை விட்டுக் கிளம்பும்போது அவன் மனைவி அவனைக் கெஞ்சிக்கேட்ட வார்த்தைகள் அவன் காதுகளில் அப்படியே ஒலித்துக்கொண்டிருந்தன. அவள் சொன்னது போலவே அக்குழந்தை பிறந்த பிறகு சென்ற மூன்று வருஷங்களாகவே வருஷா வருஷம் குடும்பத்தில் ஏதேனும் துன்பங்களும் இடையூறுகளும் வந்து கொண்டேயிருந்ததில் ஒரு தரமாவது தீபாவளியைச் சரியாகக் கொண்டாடவில்லை. இவ்வருஷம் எப்படியும் தடபுடலாக நடத்திவிட வேண்டும் என்ற ஒரே தீர்மானத்தில் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்தான்.

ஆபீஸ் வேலையில் கவன மில்லாமல் போகவே இந்த யோசனைகள் பழைய ஞாபகங்களைக் கிளறி விட்ட தல்லாமல் அவைகள் சலனப் படலத்தைப் போல அவன் கண்முன் ஒவ்வொன்றாக அப்படியே தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

சக்கு பணக்காரவீட்டுப் பெண். இதை நினைத்ததும் அவனுக்கு மிகவும் வருத்தமாய்த் தானிருந்தது. "என்னைப் போல் ஏழையைக் கலியாணம் செய்து கொண்டால்பாவம் இப்படித் தானே கஷ்டப்பட வேண்டியிருக்கிறது" என்று தன்னுடைய எழ்மைத் தனத்தை மிகவும் நிந்தித்துக் கொண்டான்.

கலியாணமான புதிசில் ஆடி, ஆறுமாதம் • இவைகளுக்குச் சேர்ந்தாற்போல் முதல் தரம் அவள் வீட்டிற்குப் போயிருந்த பொழுது அவளுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தவுடனே அவன் கேட்ட முதல் கேள்வி இது தான். "ஏண்டி நான் என்ன, உன்னை விட அழகு என்றா என்னைக் கலியாணம் செய்து கொண்டாய். உன் அழகில் ஒரு தூசி கூட பொறமாட்டேனே நான்—ஏழையாகிய என்னை ஏன்? மணக்கத் துணிந்தாய்" என்று கேட்டான். அதற்கு அவள் "ஏன் என்னை இப்படிப் பரிகசிக்கிறீர்கள்" என்று சொல்லிவிட்டுக் கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதிலளிக்காமல் முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு விட்டாள். அந்தச் சம்பவம் இப்பொழுது அவன் கண் முன் நின்றது. அப்பொழுது இன்னமொரு வேடிக்கை ஒன்று நடந்தது. அதை நினைத்தால் அவனுக்குச் சிரிப்புக் கூட வந்து விட்டது. தன்னுடைய சிறிய மைத்துனிக்குச் சென்னையிலிருந்து பூநூலினால் செய்யப்பட்ட ஆண் பொம்மை ஒன்றும் பெண் பொம்மை ஒன்றும் வாங்கிப்

போயிருந்தான். அதை மறைத்து வைத்து அக்குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் சமயம் சக்கு அங்கே வந்தாள். "அது என்ன" என்று அவனைக் கேட்டாள். அதற்கு அவன் அப் பொம்மைகளை அவளிடம் காட்டிக் கொண்டே "உன் குழந்தைகள்" என்றான். "சரி சரி" அப்படியே யிருக்கட்டும் என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு வெட்கத்தினால் ஓட முயன்றாள், தாவி கையை இறுகப் பிடித்துக்கொண்டு அவளை விடாமல் "நமக்குக் குழந்தை பிறந்தால் என்ன பெயர் வைப்பது' 'என்று கேட்டான். "சுப்பன் சுப்பி அல்லது குப்பன் குப்பி என்று பெயர் வைத்தால் நன்றாயிருக்கும்" என்று சொல்லிக் கொண்டு சிரித்துக்கொண்டே கைப் பிடியிலிருந்து நழுவி ஓடி விட்டாள் சக்கு.

இன்னும் அவளுடைய இந்த குறும்புத் தனத்தின் ஞாபகம் மறவாம லிருப்பதற்காகவே தன் சீமந்த புத்திரியை அவளுடைய அம்மா வாய் குளிரப் 'பங்கஜம்' என்று கூப்பிடுவதைப் போல் கூப்பிடாமல் 'குப்பி! சுப்பி!!' என்றே கூப்பிடுவான். அந்தப் பழைய ஞாபகங்களை இவை நினைவுக்குக் கொண்டு வருமல்லவா. அப்பொழுது இருவரும் இடி இடியென்று சிரிப்பார்கள்.

"டேய் சீனு மானேஜர் கூப்பிடுகிறார்" என்று அவனுடைய சகபாடி ஒருவன், சொன்னவுடன் சுவப்ன உலகில் இருந்து, இந்த வாழ்க்கை உலகின் ஞாபகம் பெற்று விழிப்படைந்தான்.

கண்ணைக்கசக்கிக்கொண்டு மானேஜரின் முன் நின்றான். மெதுவாகக், "கூப்பிட்டீர்களாமே" என்றான்.

"ஆமாம். நான் நாளை பட்டணம் போகிறேன், நீயும் கூட வரவேண்டியிருக்கும்" என்றார்.

"என்ன ஸார் கண்டிப்பாக வரவேண்டுமா ஸார்?" என்று கிலேசத்தோடு வாயில் எதையோ விழுங்குவதுபோல் சொன்னான்.

"ஆமாம். ஏன் தீபாவளிக்காகப் பயப்படுகிறாயா? எனக்கில்லையோடா அந்தப் பண்டிகை? கண்டிப்பாய் அதற்கு முதல் நாளே ஊருக்கு வந்துவிடலாம்" என்றார்.

"சரி ஸார், வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே முகத்தில் ஆனந்தம் தாண்டவமாட வீட்டை நோக்கிக் கிளம்பினான்.

மறு நாள் ரயில் ஏறும்வரையில் வெகு கஷ்டப்பட்டுக் கொண்டு சென்னைக்குப் போவதாகவே எவரிடமும் சொல்லாமல் இருந்தான். போகும் சமயத்தில்தான் "தீபாவளிக்கு எல்லோருக்கும் எல்லாம் பட்டணத்தில் போய் வாங்கிவருகிறேன்" என்று பிரமாதமாக சொல்லிக்கொண்டு கிளம்பினான். ரயிலில் இரவு பூராவாக அவன் தூங்கவே இல்லை. பையில் இருந்த சில காகிதத்துண்டுகளில் வாங்கவேண்டிய சாமான்களின் ஜாப்தாவை பலமுறை வித விதமாக எழுதி ஒன்றும் தீர்மானத்திற்கு வராமல் அவைகளைக் கிழித்து எறிந்து கொண்டேவந்தான். சென்னை போய்ச் சேரும்வரையில் 'இந்த நாசமாய்ப்போன எஸ். ஐ. ஆர்; வண்டி எவ்வளவு மெதுவாகப் போகிறது' என்று திட்டிக் கொண்டே போனான்.

விடியற்காலையில், சென்னைக்கு ஒருவாறாக வந்து சேர்ந்தான். அன்று பகல் மூன்று மணிக்குள் எல்லா வேலையையும் முடித்துக்கொண்டு இரவு மெயில் வண்டியிலேயே ஊர் திரும்ப ஏற்பாடு செய்திருந்தார் மானேஜர். வேலையும் அப்படியே முடிந்துவிட்டது. தலையைச் சொறிந்து கொண்டே மானேஜர் முன்பு வந்து நின்றான் சீனு. "என்னடா? என்னவேண்டும்?" என்றார் மானேஜர்.

"—— ஜாஸ்தியில்லை ஸார்! 50 ரூபாய் வேண்டும் தயவு செய்து........."

"என்ன! 50 ரூபாயா!! ஊரிலேயே கேட்கக்கூடாதாடா?" என்றார். இவன் கேட்பது அவருக்கு முதலில் மிகவும் ஆச்சர்யமாகவேயிருந்தது. இவ்வளவு காலமாக அவரிடம் வேலை செய்யும் இவன் காலணாக்கூடக் கடனாகக் கேட்டது கிடையாது. "எல்லோரும் இருக்கிறார்களே குமாஸ்தாக்கள்; சீனுவைப் பார்; காலணாக் கூடக் கடன் என்று பேர் உண்டா" என்று புகழ்ச்சியாய்ச் சொல்லிக் கொள்வார். 'என்னவோ தீபாவளி சமயம் அதுவும் மெட்ராஸ் வந்திருக்கிறான்' என்று இவை

களை உத்தேசித்து இல்லையென்று சொல்லாமல் உடனே கொடுத்துவிட்டார்.

பணத்தைப் பெற்றுக்கொண்டதும் சந்தோஷத்தினால் தலைகால் தெரியாமல் சைனா பஜாரை நோக்கி விழுந்தடித்து ஓடினான். ஏதேதோ வாங்கவேண்டும் என்று நினைத்தது அவ்வளவும் மறந்துபோய்விட்டது. தன் கண்களில் தென்பட்ட கடைகளுக்கெல்லாம் புகுந்துவிடுவது என்று தீர்மானித்து முதலில் காதி வஸ்திராலயத்தில் நுழைந்தான். பண்டிகை நாள் நெருக்கமாகையால் ஒரே கூட்டம். அங்கு என்ன வாங்குவது என்று தெரியாமல், சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருக்கையில் யாரோ ஒருவர் அவருடைய மனைவியுடன் நின்றுகொண்டு, ஒரு மிகவும் அழகான புடைவையொன்றை விலை பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான்; 'அவர்கள் நம் ஜாதிக்காரர்கள்தான்; அந்த அம்மாள் எடுக்கும் புடைவை என் மனைவிக்கும் பிடித்ததாய்த்தானிருக்கும், என்ற தீர்மானத்தில் அதே புடைவையைத் தனக்கு எடுக்கும்படி கேட்டான். விலையும் அதன் அழகிற்கு மிகவும் குறைந்ததாய்த் தென்பட்டதால் "நம் அம்மாவிற்கும் ஒன்று வாங்கலாமே. பழுத்த சுமங்கலி அவள். அவளும்தான் இந்தத் தீபாவளியை நன்றாகக் கொண்டாடட்டுமே" என்று இரண்டாக வாங்கி அவைகளுடைய கிரயத்தைக் கொடுத்துவிட்டான்.

கடையை விட்டு வெளியே வரும்போதுதான் தன் கையில் உள்ள மீதிச் சில்லரையைக் கவனித்தான். 23 ரூபாய்விதம் 46 ரூபாய்க்குப் புடைவை வாங்கி விட்டோமே என்று அப்புறம்தான் தோன்றிற்று. "பரவாய்இல்லை. சக்கு பணக்கார வீட்டுப் பெண்; 23 ரூபாய்ப் புடைவைகூட அவளுக்கு நான் வாங்கிக் கொடுக்காவிட்டால் நான் என்ன ஆண்பிள்ளை. எனக்கு எதற்கு உத்தியோகம் என்று கிதாப்பு அடித்துக் கொண்டு பிறகு அப்பாவிற்கும் தனக்கும் சாதாரண வேஷ்டிகள் இரண்டு வாங்கிக் கொண்டான்.

பட்டாஸ்கட்டுகள் விற்பதைப் பார்த்தவுடன்தான் அவனுக்கு 'குப்பி' ஞாபகம் வந்தது. "என்ன முட்டாள்தனம் பண்ணினேன். இப்படியும் குப்பியை மறப்பேனா நான். அவளை உத்தேசித்துத்தானே தீபாவளி கொண்டாடுகிறோம். 50 ரூபாய்க்கு துணி வாங்கினேனே. அவளுக்குக் கடைசியில் ஒன்றும் வாங்கவில்லையே" என்று தன் முட்டாள்தனத்தை கடிந்துகொண்டான். கையில் ஒரே ஒரு ரூபாய்தான் மிச்சம். "ஏதாவது நல்லதாகச் சீட்டிச் சொக்காயாவது வாங்கித்தான் போகவேண்டும். இல்லாவிட்டால் சக்கு சொல்வாள்— 'எனக்குப்போய் 25 ரூபாய்க்குத் சில்க் புடைவை வாங்கி வந்தீர்களே. குழந்தைக்கு முதல் தீபாவளி; அதற்கு வாங்கப்படாதோ' என்பாள். அம்மாவும் அப்படியே, "நான் கிழவி; எனக்கெல்லாம் எதற்குடா? குழந்தைக்கு இல்லாமே" என்பாள். சே, சே, என்ன பைத்தியக்காரத்தனம்"—என்று இவ்வாறு திரும்பத்திரும்ப யோசித்துக் கொண்டே ஒரு 'ரெடிமேட்' (தயார் செய்யப்பட்டுவிற்கும்) குழந்தைகள் சொக்காய் கடைக்கு முன் போய் நின்றான். அது ஒரு பெரிய கடை. அங்கு வருபவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைக்குச் சில்கிலேயேதான் வாங்கிக்கொண் டிருந்தனர். அவைகள் 5 ரூபாயிலிருந்து 8 ரூபாய் வரையில் பல விலைகளிலிருந்தன. இவனும் தன் கண்களுக்கு எட்டியமட்டும் ஒரு ரூபாய்க்கு ஏதாவது அகப்படாதாவென்று தேடினான். கடைசியாக ஒரு ரூபாயில் ஒரு சீட்டிச்சொக்காய் ஒன்று தென்பட்டது. அது ரூபாய்க்குத்தகுந்தாற்போல் தானே யிருக்கும்? நன்றாகத்தான் இல்லை. ஒன்றுமில்லாமல் போவதற்கு அது போதும் என்று அதன் விலையை மறுமுறையும் நிர்ணயித்துக்கொண்டு அதைக் கட்டிக் கொடுக்கச் சொன்னான். கும்பலோடு கும்பலாக நின்ற இவனைக் கவனிக்க ஒருவரும் இல்லை. யாரோ ஒரு வேலைக்காரச் சிறு பையன் இவனிடம் ரூபாயை வாங்கிக் கொண்டு ஒரு மிகச் சிறிய அழகிய பாக்கெட் ஒன்றைக் கொடுத்தான்.

இரவு ரயிலில் மானேஜரும் சீனுவும், ஒரே வண்டியில்தான் வந்தார்கள். அவரிடம் மூட்டையைப் பிரித்துக் காண்பித்

தான். அந்தக் கதர் சில்க் புடைவைகளைப் பற்றி ரொம்ப உயர்தரமாகப் புகழ்ந்தான். தான் மட்டுமே இது விஷயங்களில் மிகவும் கெட்டிக்காரன் என்று சொல்லிக் கொண்டான். அவரும் "நிஜமாகவே புடைவை நன்றாய்த்தானிருக்கிறது" என்றார். "அது என்னடா அங்கே, ஒரு சிறு மூட்டை—கார்சிப்பில் கட்டிவைத்திருக்கிறாய்" என்றார். அதை அவரிடம் காட்டக் கூடாது என்றுதான் மறைவாய் வைத்திருந்தான். அதையும் அவர் பார்த்துவிட்டார். இவ்வளவு விலையுயர்ந்த புடைவைகளைத் தன் மனைவிக்கும் அம்மாவிற்கும் வாங்கிவிட்டு அந்தச் சிட்டிச்சொக்காயைத் தன் பெண்ணிற்கு வாங்கியிருப்பதை அவரிடம் எப்படி வெட்கமில்லாமல் காண்பிப்பது என்று யோசித்துக்கொண்டே, "அது ஒன்றுமில்லை ஸார்—காப்பிப்பொடி" என்றான்.

அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. அப்பொழுதுதான் அவருக்கு அவருடைய மனைவி சொன்ன 'நர்ஸஸ்' காப்பிப் பொடி ஞாபகம் வந்தது. "சீனு, இதை என்னிடம் கொடுத்துவிடு; அம்மாமி அப்பொழுதே சொன்னாள்; மறந்தே போயிட்டேன்." 'நர்ஸ—ஸ்,காப்பி,'நர்ஸஸ் காப்பி' மறந்து போகாதீர்கள்" என்று நூறுதரம் சொன்னாள். இந்த வேலை உபத்திரவத்தில் இதெல்லாம் எங்கே ஞாபகம் இருக்கிறது. அதை என்னிடம் கொடுத்துவிடுகிறாயா?" என்றார்.

அந்தப் பொய்யையும் மறைக்கச் சாமர்த்தியமாய் "இதெல்லாம் நம்ம ஆத்துக்கு எங்கே ஸார், ஒரு நாளைக்குக்கூடக் காணாது. நான் நாளைக்குத் திருச்சினாப்பள்ளிக்குப் போய் வாங்கிவந்து கொடுக்கிறேன்." என்று சொல்லிவிட்டு அந்தச் சிறு மூட்டையை இன்னும் பத்திரப் படுத்தினான்.

ஊர் வந்து சேருகிற மட்டும் அவன் மனத்தில் பெரும் போராட்டமும், திகிலுமே குடிகொண்டிருந்தது. 'அம்மாவும் சக்குவும் தன்னை எவ்விதமெல்லாமோ ஏசிக் காட்டுவார்களே, என்று பயந்து கொண்டே ஊர் வந்து சேர்ந்தான். அம்மா தான் முதலில் அவனை வரவேற்றாள். அப்பா வயதின் களைப்பால் தூங்கிக் கொண்டு இருந்தார். துணி மணிகள் வாங்கியதை யெல்லாம் அம்மாவின் முன் பரப்பி வைத்துக் காண்பித்தான். அந்தப் புடைவைகள் இரண்டையும் அவ் வேஷ்டிகளையும், சில பட்டால் கட்டுகளையும் அவள் பார்த்து விட்டுத் தன் பிள்ளை, அப்படியே பட்டணத்தை வாங்கி வந்து விட்டான் என்று நினைத்துக் கொண்டு சந்தோஷப்பட்டாள். அவனும் "அங்கே போனேன், இங்கே போனேன். அதைப் பார்த்தேன், இதைப் பார்த்தேன்" என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே போனான். அவனுடைய மனைவி சக்குவோ மாமியாருக்குப் பயந்து அடக்கமாகச் சுவர் ஓரமாக நின்றாலும் மிகவும் கஷ்டப்பட்டு அப் புடைவைகளை இப்படியும் அப்படியுமாக எட்டி எட்டிப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

திடீரென்று 'அப்பா' என்று ஒரு பெரிய கூச்சல் போட்டுக் கொண்டு பொத்தென்று அவன் மேல் விழுந்தாள் அவனுடைய பெண்.

"அடி என் கண்ணு குப்பி" என்றான்.

"என்னடா அது 'குப்பி' 'குப்பி' ன்னுண்டு. கடைசியிலே அதே பேராய் போய்விடப் போறது; அசிங்கம், பங்கஜம்னு கூப்பிடேன்" என்று பேத்திக்குப் பரிந்து பேசினாள் அவன் அம்மா.

"நேக்கு என்னப்பா வாங்கிண்டு வந்தே" என்று தன் மழலைச் சொற்களால் கொஞ்சிக் கேட்டாள் அச்சிறு குழந்தை.

பதில் சொல்ல வெட்கப் பட்டவனாய்த் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அச்சிறிய பாக்கெட்டைத் தேட முயலும் பொழுது "இதோ நேக்குச் சொக்காய்" என்று அவளாகவே அதைப், பருந்து தன் இறைமீது கவ்வுவது போல் அலாக்காகத் தூக்கிக் கொண்டு தன் அம்மாவிடம் ஓடிப்போய் விட்டாள்.

"போக்கிரி 'குப்பி'! யாரடி சொன்னாள் அதிலே உன் சொக்காய் இருக்குன்னு?" என்று சொல்லிக் கொண்டே மிகவும் ஏமாந்த பார்வையைத் தன் குழந்தை

யின் மேலும், ஆவலுடன் அந்தப் பாக்கெட்டைப் பிரித்துக் கொண்டிருக்கும் அவன் மனைவி சக்கு ராணியின் பேரிலும் செலுத்தினன்.

"மனத்தில் ஏன் இப்படி வீண் கலவரம் அடைகிறேன். நான் என்ன தப்பு செய்து விட்டேன்" என்று சமாதானம் செய்து கொள்ள முயன்றும் அவன் மனது சஞ்சலமடைந்து கொண்டுதான் இருந்தது. "அவளும் அதற்கேற்றாற் போல் அக்கட்டைச் சீக்கிரம் அவிழ்க்க மாட்டேன் என்கிறாளே! எழுந்திருந்து வெளியில் போய் விடலாமா" என்று யோசனை செய்து கொண்டு திரும்பும் சமயம், என்ன ஆச்சரியம்! இவன் கண்களையே நம்ப முடியவில்லை. சீட்டிச் சொக்காய்க்குப் பதிலாக பள பள வென்று ஒரு சிகப்பு வெல்வெட் சொக்காய் மார்பு நிறையத் தங்கச் சரிகைகளாலும் காசிமாலை போன்ற சரிகைப் பொட்டுகளாலும் வெகு அழகாய் அலங்கரிக்கப்பட்டு அப் பாக்கெட்டுக்குள் வைக்கப்பட் டிருந்தது.

ஒரே தாவாய்த்தாவி அதன் கிரயச் சீட்டைத் தேடினன் சீனு. அதில் விலை ரூபாய் 7-8-0 என்று போட்டிருந்தது. ஒரு பெரு மூச்சு விட்டுக் கொண்டு தன் மனத்தில் சற்று முன் ஏற்பட்ட பெரும் புயலை அந்தப் பகவான் தான் போக்கடித்துத் தன்னை, அவமானத்தினின்று காப்பாற்றினர் என்று அவரை வாயார வாழ்த்தினன். ஆனலும் கர்வமாக "என் கண்ணு 'குப்பி' உன்னை மறப்பேனடி! உனக்கு என்று தாண்டி அதை வாங்கிக்கொண்டு வந்தேன்" என்று சொல்லித் தீபாவளிக்கென்று வாங்கிய அச்சட்டையை ஆவலுடன் அதற்குமுன்ன மேயே உடுத்திக் கொண்ட தன்பெண்ணை அணைத்து அன்புடன் முத்தமிட்டான் சீனு.


# முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்

## தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— "வான்கார்ட்"

# சித்த சாஸ்திரங்கள்

[கே. ஆர். ஆர். சாஸ்திரி. எம். ஏ., எம். எல். அலகாபாத்]

பதினெண் சித்தர்களுண்டு என்பதை தமிழ் மக்களறிவார்கள். இவர்களுள் நந்தீசருக்கும், தன்வந்திரிக்கும் வட மொழியும் தெரியும். சித்த சாஸ்திரங்களைக் கற்று, முறை தெரியாது மயங்கி, நொந்து கெட்டவர்கள் கோடானு கோடி.

இச் சித்த நூல்கள் பரிபாஷையில் பாடப்பட்டிருக்கின்றன. கவுபாலர் 'ஆணிக்கோவை'யிற் கூறியது.—

''மறைத்திருக்கும் சாக்கினுடை மர்மங்காணர்
மயங்கியே திரிந்தவர்கள் கணக்கேயில்லை''

வேதாகம சாஸ்திரங்களில் மறைத்த பொருளைச் சித்தர்கள் நமக்காக ஆயிரமிடங்களில் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

''ஆகமத்தி லொளித்துவைத்த
பொருள்தானுண்டோ
அகத்தியரால் யானறிந்து
அருள்பெற்றேனே''

(திருவள்ளுவர், ஞானவெட்டியான் 1256).

இச் சித்த நூல்களை சில ஆண்டுகளாகப் படித்ததில் சில குறிப்புகளை இங்கு எழுதவேண்டிய அவசியமாகிறது.

இப் பாடல்களைப் படித்தால் அவை வைத்தியம், வாசிவித்தை, (யோகாப்யாஸம்) மந்திர மார்க்கம் ஆகிய மூன்று முறைகளுக்கும் ஏக காலத்தில் பொருத்தமாயிருக்கும் என்பது விளங்கும்.

அகத்தியர் முப்பு வழலைச் சூத்திரத்தில் ஒரு பாடலை ஆராய்வோம்.

''தானென்ற அண்டபிண்டக் குருவைச்
[செய்ய
தவம்வேணுஞ் செபம்வேணுந் தயவுவே
[ணும்,
மானென்ற அக்கினியா முறையைக்காண
மதிவேணும், விதிவேணும், வாசம்வேணும்
நானென்ற ஆணவத்தை யடக்கவேணும்
நல்லறிவாற் சாத்திரத்தை யுணரவேணும்
தேனென்ற சற்குருவைக் காக்கவேணுஞ்
சித்தியாம் பன்னிரண்டுஞ் சிறக்கமுற்றே''
(12)

இப் பாடலில் மந்திர சாஸ்திர முறை, வாசி வித்தையின் மர்மம், முப்புவிற்கு யோகாப்யாஸம் அவசியமென்ற உண்மை, முதலிய பொலிந்திருக்கின்றன.

சில அறிவீனர்கள் 'அண்டம்' 'பிண்டம்' என்ற வார்த்தைகளால் மிரண்டு கருவித்தை செய்து மகா பாதகங்களைச் செய்திருக்கிறார்கள்.

முக்கியமாய்ச் சில மர்மங்களை இங்கு கவனிப்போம்.—

(1) சித்த நூல்கள் பரிபாஷையிலெழுதப்பட்டதால் அவை ஞானம் யோகாப்பியாசம், முப்புவித்தை, வைத்தியப்பண்பு இவை எல்லாவற்றிற்கும் ஏக காலத்திலிடங்கொடுக்கின்றன.

(2) ஆசைகொண்டு ஆயுளை விருத்தி செய்து, சரீரத்தை "பொன்னினமேனி" யாக்க எண்ணி, மனது சுத்தியில்லாமல் மலை காடுகள் சென்று மேகத்திலுள்ள சுத்தநீரைப் புடம்வைக்க எண்ணுவது ஆபத்தில் நேரிடும்.

(3) "தொண்டு செய்து பெரியோரையடுத்து" குருவின் ஆணையால்தான் மர்மந் தெரியும்-பக்குவமானவுடன்தான் காரண குரு தோன்றுவான்.

(4) சித்தருடன் எப்பொழுது சேர முடியும்?"

போகர் பதிலுரைக்கிறார்:— .

திறமாகச் சித்தரிடஞ் சேரவென்றால் செப்புகிறேன் மூர்க்கி மூர்க்கி பொய்யை, உறமாகச் சத்தியமே பேசு பேசு, ஒரு பாவமும் செய்யாதே கோபம் போக்கு, நிறமான உடலறிந்து கற்பமுண்ணு நினைவாக லட்சியத்தைத் தொட்டு மூட்டு, குற

மான வாசியெல்லாம் விட்டிடாதே குரு பூசை சிவபூசை சத்திதானே.”

(ஞானசாராம்சம், 88)

என் அருமைத் தந்தை நாற்பதாண்டுகளுக்குமேல் சித்த நூற்களைப் படித்து, காசியிலேயே யிருமென்ற எங்கள் அவாவைத்தட்டி, கடைசியில் மலையாள பூமியில் வாதஞ்செய்து, முடிவுவரையிற் பெருமுயற்சியுடனே விண்ணுலகு சென்றார்.

நண்பர்களறியவேண்டிய தென்னவெனில் முப்புவித்தை “விவகாரமற்ற ஞானிக்கு” வெகு எளிதில் கைகூடுமேயன்றி வீணருக்கு ஆகாது—தெய்வ பக்தியும், நன்னடக்கையுமுற்றி, ஆசைகளை வென்ற பிறகு குருநாதன் தோன்றுவான். வெகு சீக்கிரத்தில் மூன்று சரக்குகள் சேர்த்து முடிகிற வித்தையன்று. திருவள்ளுவருக்கு எப்படிக் கைகூடிற்றென்று பெரியாரைக் கேட்போம்:—

“மண்டல மெல்லாம் புகழு மந்திர
பஞ்சாட்சரத்தை
அண்ட மெல்லாஞ் சோதனைசெய்
தாக்குமே யாரறிவார்,
நின்றறு சுகாநீதமு நிராமயத்தைக்
காணாமல்
கண்டேன் குருமுனியால்
காயகற்பற் கொண்டேனே.—

(ஞானவெட்டியான் - 684)


## இன்ஷ்யூர் செய்து தேசப் பணத்தை பெருக்குங்கள்

ஒரு தேசத்தின் பலத்துக்கு அத்தாட்சி அத்தேசத்திலுள்ள மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் சக்தியுடையவர்களாய் இருப்பதுதான்.

இந்த உலகக் கலவர காலத்தில் ஒவ்வொரு இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி ஹோல்டரும், தான் எவ்வளவு அளவுக்குத் தன்னை வரப்போகும் இக்கட்டுகளிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை உணரவேண்டும்.

அப்படி இன்ஷ்யூர் செய்து தன்னைக் காத்துக்கொள்ளாதவர்கள் காலதாமதமின்றி இன்ஷ்யூர் செய்து தேசத்தின் செல்வப் பெருக்கை அதிகரிக்கவேண்டும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுங்கள் :—

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(தலைமை ஆபீஸ் :—கல்கத்தா) (ஸ்தாபிதம் 1906)

பிராஞ்சு ஆபீஸ்: **நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்**

362, சைனா பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதறாஸ்.

ளைப் ஆபீஸ்கள் : 171, புதுத் தெரு, மதுரை. 5, கெம்பகோடா ரோட், பெங்களூர்.

# பிக்ஷாடனம்

(பேரன்)

எங்கள் தெருவிலே ஒரு பிச்சைக்காரன் வந்தான். அவன் தலைமயிர் சிக்குப்பிடித்துச் சடையாக இருந்தது. உடம்பெல்லாம் புழுதிமயம்; கையிலே பிச்சை வாங்குவதற்கு ஒருமண்டையோடு; தோளிலே ஒரு பாம்பு. 'அம்மா! பிச்சைபோடு' என்று அவன் வீட்டின் முன் நின்ருன்.

உள்ளேயிருந்து வந்தாள் ஒரு சிறு பெண், இரண்டு கை நிறைய அரிசியை வாரிக்கொண்டு. அவள் நேராக ஓடிவந்து, பிச்சையை அந்த மண்டையோட்டிலே போட்டாள். பிச்சைக்காரனே, வளைக்கையும் சதங்கைக் காலும் செய்த இன்னெலியிலும் அவளது தோற்றப் பொலிவிலும் ஈடுபட்டு மெய் மறந்தான். பிச்சை ஓடு நிறைய வில்லை. ஆயினும், மற்ற வீடுகளுக்குச் செல்லாது, திரும்பி விட்டான்.

அவன் திரும்பும்போது அவன் முகத்தைக் கவனித்தேன். சற்று முன்பு இருந்த ஏக்கமும் கவலையும் காணவில்லை. சாந்தமும் இன்பமுமே அவன் முகத்திலே சொலித்தன. விகாரமாகத் தோன்றிய அவன் கண்கள் பேரழகைப்பருகி மலர்ந்த கமலங்கள் போலத் தோன்றின. அதைக் கண்டதும், ஈசன் பிச்சை வாங்கித் திரிந்ததின் கருத்து எனக்கு விளங்கிற்று. பேதைக் குணத்தோடு விளங்கும் பெண்மை யழகினைக் காணவன்ருே ஈசன் தேடித் திரிகிருன்.




கொஞ்சகாலமாகப் பாரதமணியில் 'போகிற போக்கில்' வரவில்லையே யென்று சில நண்பர்கள் குறை கூறுகிறார்கள். 'போகிற போக்கில்' காட்டாறுதானே; ஜீவிய நதி யல்லவே. மழை பெய்தால் தான் வெள்ளம் புரளும்; இல்லாவிட்டால் வெறும் மணல் திட்டு தான்.

ஒரு அடிமை நாட்டில், உயிருள்ள கிரியைகளும், கலைகளும் ஓர் ஜீவிய நதியாகஎப்படி இருக்கமுடியும்! தவிர இப்பொழுது யுத்தகாலமும் சேர்ந்து விட்டது. இன்றைக்கு இருந்தவர்களை நாளைக்குக் காணோம். ஒன்றும் நிச்சயமில்லை; ஸ்திரமில்லை. பிரதமமந்திரி சர்ச்சிலினுடைய, இந்தியா சம்பந்தப்பட்ட வரையிலுள்ள, கொள்கைகளைத் தவிர! ஆகையால் முடவனைப்போலிருக்கும் நமக்கு கொம்புத்தேன் மீது வீணாசை ஏன்?

* * *

பல தடவைகளில் இந்த மேல் நாட்டு யுத்தத்தைக் காட்டுத்தீக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கிறேன்; இந்த உபமானத்தின் பொருத்தம் நாளுக்கு நாள் மிக்க ஸரியானது என்று விளங்குகிறது.

யுத்தம் பரவிக்கொண்டே வருகிறது. அது தொட்ட இடமெல்லாம் கரியாகப் போய்க்கொண்டு வருகிறது—கரிகூட அல்ல; சாம்பலாகப் போய்க்கொண்டு வருகிறது. முன்காலத்தில் அநியாயங்களையும், அகாரியங்களையும், கொடுமைகளையும் அழிப்பதற்காக யுத்தம் செய்வதுண்டு. எப்படி, மறுவருஷம், புல் நன்றாய் முளைப்பதற்காக அதற்கு முதல் வருஷமே மலைச்சாரலில் வளர்ந்து ஓங்கிக் கிடக்கும் பூண்டுகளைத் தீயிடுகிறார்களோ, அது போலத்தான்.

கலிகாலத்தில் இந்த நியாயம் மாறிக் கொடுங்கோல் செழிப்படைவதற்காகவே போர் புரிகிறார்கள் போலும்! ஓர் பெரிய ஆங்கில ஆசிரியர் கொஞ்சகாலத்திற்கு முன் சொல்லியிருக்கிறார், "தற்காலப் போரில் முதல் பலி, சத்தியம்தான்." இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது - மேல் நாட்டில் பத்திரிகைகள் இப்பொழுது புரியும் தினசரிப் போரில்! உள்ளத்தில் ஒன்றும், வெளியில் மற்றொன்றும் தானே!

* * *

கொஞ்ச காலமாகப் 'போகிற போக்கில்' பாரதமணியில் வராததற்கு மற்றொரு காரணமும் உண்டு. மௌனம் சாதித்துக் கொண்டு வந்த பிரதமமந்திரி சர்ச்சில், இந்தியாவைப் பற்றி ஒரு வார்த்தையாவது பேசும் வரையில் நான் போகிற போக்கில் எழுதுவதில்லை

என்று காவேரி தீரத்தில் ஒரு நாள் ஸங்கல்பம் செய்து கொண்டேன். இப்பொழுது பிரதமமந்திரி இந்தியா விஷயமாய்ப் பேசி விட்டார். இரண்டு வருஷத்து மௌனத்தை கலைத்து விட்டார். 'அட்லாண்டிக் சார்ட்டரு'க்கும் இந்தியாவுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.— ஸ்நானப் பிராப்திகூட இல்லை! ஏற்கனவே வைசிராய் மூலமாக ஆகஸ்டுமாதம் எட்டாந்தேதி இந்தியாவுக்குக் கொம்புத்தேன் கொடுப்பதாக வாக்களித்து விட்டோமே. இப்படி யிருக்க, அறியாமையால் கேவலம் பனம் வெல்லத்திற்கு ஆசைப்படுவதும் உண்டா!

பிரதமமந்திரி சர்ச்சில் பேசாமலே யிருந்தால் உலகத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எவ்வளவோ உதவியாயும், க்ஷேமமாயு மிருக்குமென்று நினைக்கும்படித் தைரியமாயும், அழுத்தம் திருத்தமாயும் இப்பொழுது பேசி விட்டார். இதனால் எனக்கும் ஏராளமான நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டு விட்டது; 'போகிற போக்கில்' எழுதும்படியாக நேர்ந்து விட்டது.

* * *

என்ன கஷ்டகாலம், கலிகாலம்! பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு என்ன விபரீதகாலம்! தீர்க்க தரிசிகளாயிருந்து பல துறைகளில் விடா முயற்சியோடும் ராஜீய தந்திரத்தோடும் பாடுபட்டு ஓர் பெரிய சாம்ராஜ்யத்தை நூறு வருஷத்தில் ஏற்படுத்திய ஓர் ஆளும் பிரிட்டிஷ் வகுப்பினருக்கு ஏன் இந்தக் குறுக்கு புத்தி? ஏன் இந்த அல்பபுத்தி? ஏன் இந்த விபரீதபுத்தி?

இந்த விநாசகால நெருக்கடியில் கூட, ஸர் பிரான்ஸிஸ், எங்ஹஸ்பண்ட், மிஸ்டர் லயனல்—பீல்டன், மிஸ்டர் எச். என். பிரெயில்ஸ் போர்ட் போன்றவர்கள் சிறந்த பிரிட்டிஷ் பத்திரிகைகளில் இந்தியாவுக்கு சாதகமாக எழுதுவதைப் பார்க்கக் கொஞ்சம் நம்முடைய கோபம் தணிகிறது. இருந்தாலும் அமுல் செலுத்தும் பிரிட்டிஷ் மந்திரி சபையில் தக்க தீர்க்க ஆலோசனையும், நியாயப் பார்வையும் ஏற்படும் வரையில் நமக்கு நன்மையேது? உலகில் சமாதான வாழ்க்கை எப்படி வெற்றி யடையும்?

* * *

சமீபத்தில், ஓர் பிரபல ஆங்கில எழுத்தாளர் எழுதி யிருக்கிறார், "பிரதமமந்திரி சர்ச்சில் ஓர் பெரிய யுத்த மந்திரி என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் ஓர் பெரிய பிரதம மந்திரி யென்று சொல்வதற்கு வேண்டிய செய்கை இது வரையில் அவரிட மில்லை." உண்மை இது தான். அவர் அரசியலில் தீர்க்க தரிசி அல்ல. ராஜீய வாழ்வின் வருங்காலத்தைத் தெரிந்து கொள்ளும் சாந்தமான நேர் பார்வை அவருக்கு இல்லை. வேற்றுமையில் ஒற்றுமையை யறிந்து பலரை ஒன்றாகத் திரட்டித் திட்டம் போட்டுப் பலம்கட்டி நடத்தும் தன்மையும் சக்தியும் அவரிடம் இல்லை. நாற்பது கோடி ஜனங்களின் கட்டுப்பட்ட கைகால்களை அவிழ்த்துவிட்டு அவர்களின் உத்சாகமான உதவியைப் பெறுதல் பலமா? அல்லது கட்டுப்பட்ட கைகால்களோடு கைதிகள் போல் தொண்டு புரியும்படி செய்வது பலமா? இதை உணர்ந்த நிமிஷமே பிரிட்டிஷ் மந்திரி சபைக்கு அஞ்ஞானம் விலகும்; மோக்ஷம் வரும். அது வரையில், புரட்சியும், யுத்தமும்தான்.

நம்மை ஆளும் வகுப்பினருக்கு இந்தக் கடுமையான நெருக்கடியில் கூட நியாய உணர்ச்சியும், உதார புத்தியும், வணக்கமும், இரக்கமும் வராவிட்டால் யுத்தம் முடிந்து வெற்றி யடைந்த பிறகு, மாலை நிழல் போல் அகம் ஏறி நிற்கும் காலத்திலா, இந்தியாவுக்கு, நாற்பதுகோடி ஜனங்களுக்கு நன்றி பாராட்டிச் சுயராஜ்யம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வரப்போகிறது ? இது வீண் ஏமாற்றம்.

நாலுகோடி ஜனங்கள் நாற்பது கோடி ஜனங்களை இரண்டு நூற்றாண்டுகளாக அடக்கி ஆண்டு அநுபவித்து வருவதேதான் இப்பொழுது நடக்கும் மேல் நாட்டு மகா பாரத யுத்தத்திற்கு உண்மையான முக்கிய காரணம்.

பேதையான தட்டாரப் பூச்சிகளைத் தப்பளை தின்றால் தப்பளையைப் பாம்பு விழுங்கிவிடாதா ?

* * *

இந்த மகா பாரத யுத்தம் நியாய வழியில் வெற்றியடைந்து, மானிட வாழ்வுக்குப் புத்துயி ரளித்து நேர்மை செய்ய ஓர் புதிய பகவத் கீதை பிறக்கவேண்டு மென்றால், அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நீடித்த காலமாய்த் தர்மம் குடிகொண்ட இந்தப்பரதநாடு, உடனே சுயேச்சை யடைந்து கிருஷ்ணபகவான்போல் இந்த யுத்தத்தைத் தானே முன் நின்று நடத்தி, வெற்றிபெற்று ஓர் புதுத்திட்டம் உலக முழுவதற்கும் போடவேண்டும். இந்தியாவின் உண்மையான தலைமையில்லாமல் உண்மையான வெற்றி கிடையாது. உலகில் சாந்தம் உலவாது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கே ஓர் புதிய யுத்த மந்திரிசபை நிர்மாணம் செய்ய வேண்டியது அவசியம். அதை டில்லியில் அமர்த்தி அதன் பிரதம மந்திரியாக ஓர் இந்தியரைத் தேர்ந்தெடுத்து இந்த யுத்தத்தை நடத்தவேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உயிர்நிலை லண்டனிலிருந்து டில்லிக்கு மாறிவிட்டது. இதை அறிந்தவர் அறிவார். ஆகையால்தான் ஓர் இந்தியரின் தலைமை ஜனநாயக வெற்றிக்கு அடிப்படையாகும். இதை ஒளித்துத் தந்திரமாகச் சிங்கப்பூரிலும், ஆஸ்திரேலியாவிலும் சேமித்துவைக்க முடியாது.

புத்துயிரடைந்து மலைச்சாரல் வெள்ளம்போல் புரண்டு வரும் நாற்பது கோடி ஜனங்களின் சக்தியையும், உயர்வையும், முன்னேற்றத்தையும் யாரால் தடுக்க முடியும் ? இந்தியாவை விலக்கி உலகத்திற்குத் தனியாகச் சுகதுக்கம் உண்டா ? யானையில்லாத ஊர்கோலமுண்டா? கண்ணில்லாதவனுக்குப் பார்வை உண்டா ? இந்தியாவிற்குச் சுயராஜ்ய மில்லாமல் உலகத்திற்குச் சுயராஜ்யமுண்டா ?

**மணி.**




# ஒரு குரங்கின் சாகஸம்

[வ. வேணுகோபாலன்.]

ஒரு காட்டில், வயதான குரங்கு ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் குரங்குக்கு, ஒருநாள், சரியான ஆகாரம் ஒன்றும் கிடைக்க வில்லை. அதனால் வருத்தப் பட்டுக்கொண்டு, திரிந்துகொண்டிருக்கையில், ஒரு இலந்தை மரத்தைப் பார்த்தது; அதில் நிரம்பப் பழமிருந்தது. உடனே அதில் மெதுவாக ஏறிக் கொஞ்சம் பழத்தைப் பறித்துச் சாப்பிட்டது. அப்பொழுது, தன் வாலில் ஒரு இலந்தை முள் பலமாகத் தைத்து விட்டது. உடனே குரங்கு வலி பொறுக்க முடியாமல், கீழே இறங்கிப், பக்கத்தில் இருந்த ஒரு அம்பட்டன் குடிசைக்குச் சென்று, அம்பட்டனைப் பார்த்து, தன் வால் முள்ளைக் காட்டி, “இதை நீ எடுத்துத்தந்தால், உனக்கு தக்க சமயத்தில் உபகாரம் செய்வேன்” என்றது. அம்பட்டனும் குரங்குக்காக மனமிரங்கி, வாலிலிருந்து முள்ளை எடுப்பதற்காகத் தன் கத்தியால், முள்ளை வெட்டுகையில் தவறிப் போய் வாலில்பட்டு, பாதிவால் அறுந்து அப்புறம் விழுந்து விட்டது. உடனே குரங்கு, கோபம் கொண்டு வலிபொறுக்க முடியாமல், அவனைப்பார்த்து உறுமிற்று. உடனே அம்பட்டன் பயங்கொண்டு, கத்தியை அங்கேயே போட்டு விட்டு ஓடிவிட்டான். உடனே குரங்கு, கத்தியை எடுத்துக் கொண்டு சந்தோஷத்துடன் காட்டில் சென்று கொண்டிருந்தது. அங்கே, ஒரு கிழவி ஆயுதமில்லாமல், சுள்ளிகளை கையால் ஒடித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது, குரங்கு அப்பாட்டியிடம் சென்று, “பாட்டி! பாட்டி! கைவலிக்க ஏன் சுள்ளிகளை ஒடிக்கிறாய்? இந்தக் கத்தியால் சுள்ளியை வெட்டினால்சீக்கிரம் வெட்டுப்படும்” என்றது. உடனே அக்கிழவி குரங்கின் உபகாரத்தை மெச்சி, கத்தியை வாங்கிச் சுள்ளிகளை வெட்டினாள். சுள்ளியை வெட்டியானபின், குரங்கிடம் கத்தியைக் கொடுத்தாள். குரங்கு அதை வாங்காமல் “என்ன பாட்டீ சாமார்த்தியக் காரியாய் இருக்கிறாயே! இரவல் கொடுத்த கத்தியை வாய் மழுங்கும்படிப் பண்ணிவிட்டாயே? இனிமேல் இந்தக் கத்தி உபயோகப்படாது. மரியாதையாய், வேறு கத்தியைக் கொடு, அல்லது அந்தச் சுள்ளிக்கட்டை என்னிடம் கொடு,” என்றது. கிழவி, குரங்கினுடைய சாகஸத்தைக்கண்டு, இது நம்மைக் கடிக்காமல் விட்டால் ஸரி என்று பயந்து “இந்தா சுள்ளிக்கட்டு” என்று கொடுத்துவிட்டு, பேசாமல் ஓடிவிட்டாள்.

குரங்கு, கிழவியை ஏமாற்றி, அந்தச் சுள்ளிக்கட்டை, தலையில்

வைத்துக் கொண்டு ஒரு ஒற்றையடிப்பாதை வழியே சென்றது. அவ்வழியில் ஒரு கிழவி தோசை வார்த்துக்கொண்டிருந்தாள். 'சொய் சொய்' என்று எண்ணெ ஊற்றித் தோசை வார்க்கும் சத்தம் காதில் விழவே, குரங்குக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று; 'எப்படியாவது தோசையை அந்தக் கூடையோடு கொண்டு போய் விடவேண்டும்' என்று தீர்மானித்தது. உடனே கிழவியின் சமீபம் போய் "பாட்டீ, நீ ரொம்ப தொண்டு கிழவி யாயிற்றே; பாவம், இந்த கட்டுச் சுள்ளியையும் அடுப்புக்குப்போட வைத்துக் கொள், எனக்கும் கொஞ்சம் பசிக்குத் தோசை கொடு" என்றது. அந்தக் கிழவி குரங்கை நம்பி, "அப்படியே ஆகட்டும்" என்று சந்தோஷத்தோடு, கட்டுச் சுள்ளியையும் அடுப்பில் வைத்துச்சுட்டுக் கூடை நிறைய தோசை வார்த்து வைத்தாள்; குரங்கு, தன் கட்டுச் சுள்ளியும் எரிந்துபோகும் வரையில் பேசாமலிருந்தது. எல்லாம் எரிந்து போன பின் அக்கிழவியைப் பார்த்து "பாட்டீ, என்ன எல்லாச் சுள்ளியையும் எரித்து விட்டாயே; இப்பொழுது, நாலணபணம் கொடுக்கிறாயா, அல்லது அந்தக் கூடை தோசையையும் கொடுக்கிறாயா?" என்றது. கிழவி, "ஐயோ ஏமாந்து போனேனே, இவ்வளவு தோசையும் விற்றால்கூட நாலணா கிடைக்காதே! நல்லவேளை இந்தக் குரங்கு, நம்மை விட்டால் ஸரி" என்று குரங்கினிடம், தோசைக் கூடையைக் கொடுத்துவிட்டு ஓடிவிட்டாள். உடனே குரங்கு மகிழ்ந்து அப்படியே உட்கார்ந்து ஆறு தோசை வரையில் வயிறு வெடிக்கத் தின்றது. பிறகு மீதியாயிருந்த தோசையைக் கூடையோடு தலையில் வைத்துக் கொண்டு காட்டில் ஒருபக்கமாகச் சென்று கொண்டிருந்தது; அப்பொழுது ஒரு பறையன் தப்பை கையில் வைத்துக் கொட்டிகொண்டு வந்தான். குரங்கு பறையனிடம் போய் அந்தக் கூடையிலுள்ள தோசையைக் காட்டி, "இதை எடுத்துக்கொண்டு, அந்தத் தப்பை என்னிடம் கொடு" என்றது. பறையன் சந்தோஷத்தோடு, தப்பைக் கொடுத்துவிட்டு தோசையுள்ள கூடையைத்தூக்கிச் சென்றான்.

குரங்கு, சந்தோஷத்தால் ஒன்றும் புரியாமல் தப்பைக் கையில் வைத்து அடித்துக் கொண்டே ஒரு ஆலமரத்தடியில் உட்கார்ந்தது. அந்தத் தப்புச் சத்தத்தைக் கேட்ட, ஒரு கோனாய், குரங்கை நோக்கி ஓடிவந்தது. உடனே, 'பகீர்' என்று குரங்கு பயந்து, தப்புடன், ஒரேதாவலாய் ஆலமரத்தில் தாவி உச்சிக்கிளையில் போய் உட்கார்ந்து கொண்டது. கோனாய் மரத்திலுள்ள குரங்கை அண்ணாந்து பார்த்துக் கொண்டே கீழே உட்கார்ந்திருந்தது. குரங்கு, கையில் தப்பை வைத்துக் கொண்டு கிளையில் எழுந்து நின்று, "வாலு போச்சு, கத்தி வந்தது டம்டம்" "கத்தி போச்சு, சுள்ளி வந்தது டம்டம்" "சுள்ளி போச்சு தோசை வந்தது டம்டம்" "தோசைபோச்சு தப்பு வந்தது டம்டம்" என்று கூறிக்கொண்டே நான்கு திசைகளிலும் ஒவ்வொரு முறை நின்று கொட்டிக் கூத்தாடி, கடைசியில் இதைப் பார்த்துக் கொண்டே கீழே நின்றிருந்த கோனாய் தலையின் மீது 'படீர்' என்று தப்பைப் போட்டது. ஓநாய் உடனே தலைகால் தெரியாமல் ஓட்டம் பிடித்தது.

# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் II

[கா. சி. வேங்கடரமணி]

## பாடம் 12

பூக்கும் மரங்கள்

| | | |
|---|---|---|
| பாரிஜாதம் | மகிழமரம் | மந்தாரை |
| பன்னீர்மரம் | நாகலிங்கம் | கொன்றை |
| சண்பகம் | மரமல்லிகை | |
| பின்னை | நுணா | |

சென்ற பாடங்களில், மணி நாம், பழத்தையும் கிழங்கையும் கொடுக்கும் மரங்களைப்பற்றிப் படித்தோம். இந்தப் பாடத்தில் பூக்களைக் கொடுக்கும் மரங்களைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

"நீ, பாரிஜாத புஷ்பத்தைப் பார்த்திருக்கிறாயா?"

காலையிலேயே பூமியில் நக்ஷத்திரங்களைப் போல் உதிர்ந்து எவ்வளவு அழகாய்க் கிடைக்கின்றன! இந்தப் பாரிஜாதப் பூவைப்பற்றி ஓர் புராணக் கதைகூட இருக்கிறது. அது உனக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் அந்தக் கதை என்னவென்று உன் உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்து கொள்.

மேற்கண்ட பூக்களின் நிறத்தையும் வாசனையையும் பற்றி ஒரு சிறிய கட்டுரை நாளையதினம் எழுதிக்கொண்டு வா. அதன் வடிவத்தையும் ஒரு சித்திரமாக எழுதிக்கொண்டு வா.

மேற்கண்ட பூக்களில் எந்தப் பூவை உன்கையால் நீ பறித்திருக்கிறாய். இந்தப் பூக்கும் மரங்களில் நீ பார்த்திராதவைகளைப் பார்க்க வேண்டாமா? ஒரு விடுமுறை நாளன்று உன் அண்ணவை அழைத்துக் கொண்டு எந்தத் தோட்டத்தில் இருக்கிற தென்று தெரிந்துகொண்டு பார்த்து வா. இதுதான் உண்மையான விடுமுறைக்கு அழகு. மேற்கண்ட பூக்களைத் தவிர, மரத்தில் மலரும் பூக்கள் வேறு ஏதாவது இருக்கிறதா என்றும் பார்த்து வா.

மணி, தெய்வத்திற்குப் பிரீதியானது பூக்கள்தான்; ஆகையால் நாம் பூக்களை எந்த வழியில் பயன்படுத்த வேண்டுமோ அந்த வழியில் தான் பயன்படுத்த வேண்டும். மரத்திலேறிப் பூவைப்பறிக்கக் கூடாது; கிளைகளையும் ஆட்டி உதிர்க்கக் கூடாது.

பூக்கள் மரத்திலேயே இருப்பது ஓர் அருமையான இயற்கையழகு. பூமியில் நக்ஷத்திரங்களைப்போல் உதிர்ந்துகிடப்பது இன்னும் அழகு; இது ஈசனுக்கு அளவில்லாத பிரீதியல்லவா?

# புஸ்தக விமர்சனம்

## அரிசி [ஆங்கிலம்]

அகில இந்தியத் தொழில் சங்கம் வர்தா.
விலை அணா, 12.

ஏழு வருஷங்களுக்கு முன்பு மஹாத்மா காந்தி அகில இந்தியக் கிராமத் தொழில் சங்கத்தை ஸ்தாபித்தார். அதன் முக்கிய நோக்கங்களில் கைக்குத்தல் அரிசியை உபயோகப்படுத்துவதும் ஒன்று. கையால் அரிசி குத்துவது, மாவரைப்பது போன்ற புராதன வழக்கங்களைப் புனருத்தாரணம் செய்வதைப் போன்ற முட்டாள்தனம் வேறொன்றுமில்லையென்று கைகொட்டிப் பரிகசித்தனர் பலர். ஆனால், விஞ்ஞான மேதாவிகள் ஸ்பிரிட் விளக்கையும், பரிசோதனைக் குழாய்களையும் வைத்துக் கொண்டு மெஷினால் அரைத்த அரிசியில் சத்து இல்லை என்று கூறிய பிறகுதான், காந்திஜீயின் கூற்றில் அவர்கள் நம்பிக்கை வைத்தனர்.

அரிசியை, ஜீவ உணவாகப் பெற்றிருக்கும் ஜப்பான், பிலிப்பைன் முதலிய நாடுகளில், சட்டங்களை இயற்றி இயந்திரத்தினால் அரிசிகுத்துவதை அரசாங்கத்தார் தடுத்துவிட்டனர். இந்தியாவில் அரிசியை ஜீவ உணவாகக் கொண்டுள்ள மாகாணங்களில் குடிகள் மிகவும் மோசமான நிலைமையில் வாழ்கின்றனர். ஆதலால் அவர்களுக்குக் கிடைக்கும் சிறிதளவு உணவிலாவது, தேக வளர்ச்சிக்கு வேண்டும் சத்துக்கள் இருக்க வேண்டியது அவசியம்.

இந்த அவசியத்தைப் பொது ஜனங்களுக்கும், அரசாங்கத்துக்கும் உணர்த்தவேதான், அகில இந்தியக் கிராமத்தொழிற் சங்கத்தார் "அரிசி" (Rice) என்ற ஓர் சிறிய புஸ்தகத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இப் புத்தகம் எளிய நடையில், அழகாக எழுதப்பட்டிருக்கிறது. இப் புஸ்தகத்தில் கூனூர் ஆராய்ச்சிச்சாலையில் கண்டுபிடிக்கப்பட்ட பல உண்மைகளும், சத்துப் போகாமல் குத்துவதற்கும், அரைப்பதற்கும், வேண்டிய கருவிகளும், சில சித்திரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இயந்திரத்தில் குத்தப்படும் அரிசி பிதுக்கிவிடப்பட்ட மாங்கொட்டையைப் போலத்தான் இருக்கிறது. மாங்கொட்டையில் சத்து இருக்குமா? நாக்குதான் எரிப்பு எடுக்க ஆரம்பிக்கும். அரிசியைப் பாலிஷ் அல்லது மெருகு கொடுப்பதனால் அரிசியின் மேலுள்ள மெல்லிய சாம்பல்போன்ற தோலும், மெல்லிய கருவும் நீக்கிவிடுகிறது. இவ்விரண்டும் சேர்ந்து அரிசியின் பரிமாணத்தில் ஆறில் ஒரு பங்கு இருக்கும். ஆனால் இவைகளில் உலோக சம்பந்தமானபொருள்கள், அரிசியில் பாதியும், ப்ரோடீன் கால் பங்கும், எல்லா வைடமினும் இருக்கின்றன. ஆதலால் நாம் இப்பொழுது சாப்பிடும் அரிசியில் தேக வளர்ச்சிக்குக் காரணமான எப்பொருளும் இல்லை யென்று தெரிகிறதல்லவா?

"உங்கள் பணத்தைக் காப்பாற்றவும் உங்கள் தேக ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும் உங்களுக்கு விருப்பமிருந்தால், பாலிஷ் போட்ட அரிசியை உண்ணுதீர்கள். அதே போல நாட்டில் வேலையின்மை நீங்கவும், ஏழைகளுக்கு உதவியாக இருக்கவும், உங்களுக்குவிருப்பமிருந்தால் பாலிஷ் போட்ட அரிசியை உண்ணுதீர்கள்.

இச்சிறிய புஸ்தகத்தின் விலை, 12 அணா. ஆனால் இது விலை மதிப்பிட முடியாத புஸ்தகந்தான். நம்நாட்டாரும், அன்று அரிசியில் ஜீவிக்கும் பிறநாட்டாரும் இதை வாசிக்க வேண்டியதவசியம். அப்படியிருக்க நம் நாட்டார் அதை ஏன் வாசிக்கக் கூடாது?

ஆ. வே. ஜெ.

## சினிமா விமர்சனம்

# சாவித்திரி

தயாரித்தவர்கள் : மதுரை ராயல் டாக்கிஸார். ஸ்டூடியோ : நியூதியேட்டர்ஸ், கல்கத்தா. டைரக்ஷன் : ஒய். வி. ராவ். நடிகர்கள் : சாந்தா ஆப்தே, எம். எஸ். சுப்புலக்ஷ்மி, ஒய். வி. ராவ், வி. ஏ. செல்லப்பா, கே. சாரங்கபாணி.

ஸத்யாக்ரஹம் என்பதைப்பற்றி இப்பொழுது தினசரி கேட்கிறோம். இந்த ஸத்யாக்ரஹம் என்பது பாரதநாட்டிற்குப் புதிதல்ல. முன்னொருகாலத்தில் ஒரு பாரத ஸ்திரீரத்னம் அதன் மகத்துவத்தை நிரூபித்திருக்கிறாள். நம்மைப் போல் கொஞ்சமாவது ஆசாபாசங்களையுடைய மனிதர்களுடன் நாம் இன்று ஸத்யாக்ரஹம் செய்கிறோம். அதன் மஹத்துவத்தில் சிலருக்குச் சந்தேகம் கூடத் தோன்றுகிறது! ஆனால், அந்த மகாதிலகம் யமனுடன் ஸத்யாக்ரஹம் செய்து அவனிடமிருந்து தன் பதியின் உயிரை மீட்டு, எப்பேர்ப்பட்ட சர்வ வல்லமை பொருந்திய எதிரியாயிருந்தாலும் ஸத்யாக்ரஹத்தினால் வென்று விடலாம் என்பதைக் காட்டியிருக்கிறாள். ஸத்யாக்ரஹத்தில் நம்பிக்கை யிழந்தவர்கள் இந்தச் சாவித்திரி படத்தைப் பார்த்து ஆதர்சம் பெறலாம்.

இப்பேர்ப்பட்ட பதிவிரதா சிரோன்மணியின் கதையில் விரஸம் தட்டும்படியான ஒரு புருஷன்—மனைவிச் சண்டையைப் புகுத்தியிருப்பது அபசாரமே யாகும்.

சாந்தா ஆப்தே, தமது நடிப்பின் மூலம் எல்லோரையும் லகுவில் கவர்ந்து விடுகிறாள். அவள் சாக்ஷாத் சாவித்திரிபோலவே காட்சியளிக்கிறாள் என்று சொன்னாலும் மிகையாகாது. உள்ளத்திலெழும் துல்லியமான மனோ உணர்ச்சிகளை யெல்லாம் அவளுடைய முகம் கண்ணாடிபோல் பிரதிபலித்துக் காட்டுகிறது.

பேச்செல்லாம் கொச்சைதான். ஒரு மகாராஷ்டிரப் பெண்ணைத் தமிழ் கற்றுக்கொள்ளச்சொல்லி பேச வைத்தால் பிறகு எப்படியிருக்கும்?

சாந்தாவின் பாட்டுக்கள் நன்றாயிருந்தாலும் அவ்வளவாகச் சோபிக்க வில்லை. இதைப் பெரும்பாலும் அவருக்குக் கர்நாடக மெட்டுக்களில் பரிச்சய மில்லாத தோஷம் என்றே சொல்ல வேண்டும்.

எம். எஸ். சுப்புலக்ஷ்மி அரைடஜன் பாட்டுக்கள் அமோகமாகப் பாடியிருக்கிறாள். அவைகளை நாரதகானம் என்றே சொல்லவேண்டும்! எல்லாவற்றையும் விட பாதிவ்ரத்யத்தின் சக்தியை விளக்கி அவர் பாடும் "அக்னியென் றறியாயோ" என்ற ராகமாலிகை அபாரமாயிருக்கிறது.

நாரதராகத் தோன்றி தமது விஷமச் சிரிப்பினாலும், பேச்சினாலும் நம்மை எளிதில் வசிகரித்து விடுகிறார். சகுந்தலையில் துஷ்யந்தன் தர்பாரில் ஆவேசத்துடன் பேசியதைப்போல், இதில் அவர் யமனுடன் தர்க்கம் செய்வது படத்திற்கே ஒரு முத்தாய்ப்பு வைத்து விடுகிறது.

வி. ஏ. செல்லப்பா யமன் பாகத்தை அழகாக நடித்துக் காண்பித்திருக்கிறார். சாரங்கபாணி விரஸமில்லாமல் நல்ல ஹாஸ்ய விருந்தளிக்கிறார். அவர், திடீரென்று இழந்த கண்களைத் திரும்பப் பெற்ற த்யுமத்ஸேன ராஜனைக் கண்டு சந்தோஷம் பொங்கக் குதித்துக்கொண்டு "அப்பா, இது எவ்வளவு?" என்று, கண் வைத்தியர்போல், விரல்களைக் காட்டிக் கேட்கும்போது நம்மையும் ஆனந்த பாஷ்பத்திலாழ்த்தி விடுகிறார்.

டைரக்டர் ஒய். வி. ராவ், பெரும் புகழ் அடையக்கூடிய ஒரு அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஸ்டூடியோவைப் பொறுத்த அம்சங்கள், நியூதியேட்டர்ஸ் என்பதற்காக 'ஓஹோ' வென்று புகழும்படியா யில்லாவிட்டாலும், திருப்திகரமா யிருக்கின்றன.

மொத்தத்தில், சாந்தா ஆப்தே நடிப்பு, எம். எஸ். எஸ். பாட்டு இரண்டிற்காகவும் சாவித்திரியை எத்தனை தடவை வேண்டுமானாலும் பார்க்கலாம்.

# அசோக் குமார்

தயாரித்தவர்கள் : மதுரை முருகன் டாக்கி பிலிம் கம்பெனியார். ஸ்டூடியோ : நியூடோன். டைரக்ஷன் : ராஜா சந்திரசேகர். நடிகர்கள் : எம். கே. தியாக

ராஜ பாகவதர், டி. வி. குமுதினி, வி. நாகையா, பி. கண்ணாம்பா, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம்.

சாரங்கதரா நாடகம் பார்த்திருக்கிறீர்களல்லவா, அதே மாதிரி கதைதான் அசோக்குமார்.

மன்னன் அசோகனுக்கு, ஏக புத்திரன் குணாளன். பெயருக்கேற்ற குணவந்தன். அசோகனின் அந்திய காலத்தில் மணந்த ராணி திஷ்யரக்ஷிதா அவன்மீது மோகம் கொண்டாள். சிற்றன்னையின் காம இச்சைக்கு இசைய மறுத்ததன் விளைவாக குணாளன் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு கண்களையும் இழக்கிறான். குணாளனின் காதலி காஞ்சனா, நாதனைத் தேடியடைந்து, பிச்சை யெடுத்து வருகையில், அகஸ்மாத்தாய் தந்தையும் தனயனும் சந்திக்கின்றனர். உண்மை வெளிப்பட்டது. 'தன்வினை தன்னையே சுடும்' என்றபடி ராணி விஷமருந்தி தற்கொலை புரிந்து கொண்டாள். குணாளன் புத்தர் பிரானருளால், இழந்த கண்களைத் திரும்பப் பெற்று அசோகசாம்ராஜ்யாதிபதியாகிறான்.

கதையமைப்பு ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. வசனங்கள் கொஞ்சம் மேடைப் பாணியிலிருந்தாலும், நன்றாயிருக்கின்றன. குணாளனும், திஷ்யாவும் வாதாடும் கட்டத்தில் இளங்கோவனின் வசனங்கள் அபாரமாயிருக்கின்றன.

நடிப்பில் முதல் 'பிரைஸ்' ஆந்திர நக்ஷத்திரம் கண்ணாம்பாவுக்குத்தான். ஏயப்பா! என்ன சாகஸம்! கண்ணாம்பாள் இவ்வளவு பெரிய சாகஸக் காரியென்று யாரும் இத்தனைநாள் நினைத்திருக்கமாட்டார்கள்! பாகவதர் "உனைக்கண்டு மயங்காத பேருமுண்டோ" என்று பாடுவதற்கு அவர் ஒரு அபிநயம் பிடித்திருக்கிறார் பாருங்கள்! அதை எத்தனை தடவை பார்த்தாலும் அலுக்காது. நாகையாவும், தம் பாகத்தை ராஜ தோரணைக் கேற்பக் கச்சிதமாகச் செய்திருக்கிறார். பாகவதர் நடிப்பில் சோடைபோனாலும், பாடி ஜமாய்த்திருக்கிறார். குமுதினி, மாத்ருபூமியில் அடைந்த புகழை இதில் இழந்துவிட்டார். கிருஷ்ணன், மதுரம் ஹாஸ்யத்தை நன்றாய் ரஸிக்கலாம்.

பாபநாசம் சிவனின் ஸாஹித்யங்கள் அர்த்த புஷ்டியுடன் அருமையாய் அமைந்திருக்கின்றன. மற்றபடி ஸீன் ஜோடனைகள், ஒலி ஒளிப்பதிவுகளும் திருப்திகரமாகவே இருக்கின்றன. டைரக்ஷனைப் பற்றிச் சிலாகித்து எடுத்துச் சொல்லும்படியான சிரமத்தைச் சேகர் கொடுக்கவில்லை.

மொத்தத்தில் நடிகர் ஜாபிதாவிலுள்ள பெயர்களின் நக்ஷத்திர மதிப்பு, கண்ணாம்பா நடிப்பு, பாகவதர் பாட்டு இவைகளுக்காக, அசோக் குமார் எந்த நகரிலும் வெள்ளி விழாவுக்குக் குறையாமல் ஓடும்.

## ஸிக்கந்தர்

தயாரித்தவர்கள், ஸ்டுடியோ: மினர்வா மூவிடோன். டைரக்டர்: ஸொராப் மோடி. முக்கிய நடிகர்கள்: பிருதிவிராஜ், ஸொராப் மோடி, வனமாலா, மீனா, ஷீலா.

சினிமா, வெறும் பொழுது போக்குக்காக மட்டுமல்ல. அதைச் சாதனமாகக் கொண்டு எந்த லக்ஷிய சித்தியும் பெறலாம். தேச விடுதலைப்போரிலும் அது பெருந் தொண்டாற்றலாம். தேசபக்தி ஊட்டும் படங்களை யெடுத்துக்காட்டி மக்களைத் தட்டி யெழுப்புலாம்; அன்னிய ஆதிக்கத்தின் விளைவாய் ஆண்மையை இழந்திருக்கும் நமக்கு வீர உணர்ச்சியை உண்டாகச் செய்யலாம். இவ்வருந்தொண்டாற்றி யிருக்கிறது ஸிக்கந்தர்.

இன்றைய தேச நிலைமைக்கு அது ஒரு சிறந்த படிப்பினையா யிருக்கிறது. ஹிட்லர் காகஸஸுக்கு அடுத்தாற்போல் இரான் மீது குறி வைத்திருக்கிறார். இரானுக்குப் பிறகு இந்தியாதான். ஆகையால் நாம் எதிரியை விரட்டத் தயாராகித் திரண்டு எழவேண்டுமென்று சொல்கிறார்கள்.

இதே மாதிரி இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி அலெக்ஸாண்டர் என்ற கிரேக்க அரசன் இரானிலிருந்து இந்தியா மீது படை யெடுத்த கதையைத்தான் ஸிக்கந்தர்படம் சொல்லுகிறது. ஜீலம் நதிக் கரையில் புருஷோத்தமன் என்ற பாரத

வீரன் அலெக்ஸாண்டரைத்திரமாகஎதிர்த்தான். அலெக்ஸாண்டர் புருஷோத்தமனுடைய தீரத்தை மெச்சி ,மேற்கொண்டு படையெடுத்துச் செல்ல முடியாமல் திரும்பினான்.

இன்று நமக்கு அப்படிப்பட்டதொரு புருஷோத்தமன் வேண்டாமா? இதைத்தான் வற்புறுத்துகிறது ஸிக்கந்தர்.

கர்ணனுடைய பலத்தை யறிந்து, கிருஷ்ணன் குந்தியை விட்டு அவனுடைய கவச குண்டலங்களைப் பிடுங்கச் சொல்லி, சர்வ சக்தி வாய்ந்த நாகாஸ்திரத்தை ஒரு முறைக்கு மேல் அர்ஜுனன் மீது எய்வதில்லை என்று வரம் வாங்கியது போல, அலெக்ஸாண்டரைக் காதலித்த ஏகடினு என்ற இரானியப்பெண், "அலெக்ஸாண்டரைத் தன் கையால் கொல்வதில்லை" என்று புருஷோத்தமனிடம் வரம் பெறுகிறாள். யுத்தகளத்தில் அலெக்ஸாண்டரும், புருஷோத்தமனும் சந்தித்தபோது, ஒரு பாணம் எய்திருந்தால் போதும், அலெக்ஸாண்டர் சாய்ந்திருப்பான். ஆனால் புருஷோத்தமன் தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற தன் உயிரையும், நாட்டையுமே தியாகம் செய்யத் துணிந்தான்! அப்பேர்ப்பட்ட ஸத்யவந்தர்கள் ஆண்ட நாடு நம் பாரத பூமி என்பதை ஸிக்கந்தர் நிரூபிக்கிறது.

எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் தேசத்துரோகிகள் இருந்திருக்கிறார்கள். அதைப்போல் தேசத்தைக் காட்டிக் காட்டிக் கொடுத்து அலெக்ஸாண்டருடன் சேர்ந்துகொண்ட அம்பி ராஜனின் சகோதரி, பிரார்த்தனை என்ற வீர பாரதபுத்திரி உடன் பிறந்த பாசத்தையும் வென்று சகோதரனை விட்டுப் புருஷோத்தமனுடன் சேர்ந்து நாட்டைக் காக்க உழைத்தாள். இந்த பிரார்த்தனையைப் பார்த்து எத்தனை தேசபக்தைகள் தோன்றக்கூடும்?

இப்பேர்ப்பட்ட சுதந்திர ஆர்வம் அளிக்க வல்ல படத்தைச் சிருஷ்டித்த டைரக்டர் ஸொராப்மோடியைப் பாராட்டுவோம்.

யுத்தத்தில் புருஷோத்தமன் கண்களை யிழந்தான் என்று சரித்திரம் கூறும்; படத்தில் அப்படிக்காட்டவில்லை. இது ஒன்றைத் தவிர சரித்திரம் கூறுகிறபடி படம் சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர காலத்தில் நடை யுடை பாவனைகளும் அமைந்திருக்கின்றன. ஜீலம் நதிக் கரையில் ரத கஜ துரகபதாதிகளுடன் நடக்கும் யுத்தம் கண்கொள்ளாக் காட்சி! பிரபல ஹாலிவுட் டைரக்டர் ஸெஸில் டி மில்லியைப்போல் இந்தக் காட்சிகளை சிரமப்பட்டு வெற்றிகரமாக எடுத்திருக்கிறார் டைரக்டர் மோடி. இது மாதிரியுத்தகளக் காட்சிகள் இதுவரை இந்தியாவில் படம்பிடிக்கப்பட்டதே யில்லை. பிரம்மாண்டமான தர்பார் காட்சிகளைப் பார்த்து நாம் பிரமித்துவிடுவோம்.

பிருதிவிராஜுக்குத்தான் என்ன வேஷப் பொருத்தம் போங்கள்! இவர் தான் அலெக்ஸாண்டர் என்று சத்யம் செய்யலாம் போலிருக்கிறது. மேரி வஹால்கா என்ற ஆங்கிலப்படத்தில் நெப்போலியனாக நடித்த சார்லஸ் போயர் ஒருவரைத் தான் நான் இதற்கு முன் இப்படி நினைத்திருக்கிறேன். கடைசியில் கலகம் செய்த படைகளைப்பார்த்து சதுர்வித உபாயங்களையும் கையாண்டு அவர் பேசிய கட்டமுண்டே, அதையாராலும் மறக்கவே முடியாது. நான் அந்தப் படையிலிருந்திருந்தால் அவர் பக்கமே சேர்ந்திருப்பேன்!

தேசபக்தன் புருஷோத்தமனாக ஸொராப்மோடி, ஒரு மன்னனுக்குரிய திடசித்தம், வைராக்கியம், விவேகம் இவைகளுடன் மெச்சும்படி பேசி நடித்திருக்கிறார்.

அலெக்ஸாண்டரிடம் காதல் கொள்ளும் போதும் சரி, புருஷோத்தமனிடம் வந்து உறவுகொண்டாடி ராக்ஷாபந்தனம் செய்யும் போதும் சரி, ஆண் உடை தரித்திருந்து படைகளுக்குத் தூபம் போடும்போதும் சரி, கடைசியில் தன் ஆசை பூர்த்தியாகாமல் சோர்ந்து விழும்போது அலெக்ஸாண்டரை அடைந்து அவனை உத்ஸாகப்படுத்தும் போதும் சரி, ரக்ஷணாவாகத் தோன்றும் வனமாலா நம்மைக் கவர்ந்துவிடுகிறார். போற்றத்தகுரிய பிரார்த்தனையின் பாகத்தைப் போற்றும்படி யாகவே செய்திருக்கிறார் மீனா. ஷீலாவின் பாட்டுக்கள், கோலாட்டம், கும்மி, எல்லாவற்றையும் நன்றாய் அனுபவிக்கலாம்.



(267-ம் பக்கம் பார்க்க)

# உதிர்ந்த மணிகள்

## தனிமை :

முற் காலத்து ரிஷிகளெல்லோரும் காட்டிலும், மலை யுச்சியிலும் தவங்கிடந்து பிறரால் போற்றப்படும் மஹாபுருஷர்களானுர்கள். போதி விருட்சத்தின் கீழ் புத்தர் பிரானும் தனிமையாகத்தான் சிந்தனை செய்தார். மோஸஸும், கிறிஸ்துவும், மகம்மதும் மலையுச்சிகளில் வசித்துக் கொண்டு தான் கடவுளைத் தியானம் பண்ணினுர்கள். அரவிந்த கோஷ் என்ற யோகியும் தனிமையில் தான் வசிக்கிருர். காந்தியும் பட்டணங்களுக்கு வெகு அப்பாலிருக்கும் ஓர் கிராமத்தில் தான் தனிமையைச் சிருஷ்டி செய்து கொண்டு வசிக்கிருர். ஹிட்லர் கூடக் கிராமத்திற்குத் தன் மலைக் கோட்டையைத் தனிமையாய் நாடிச் செல்கிருர்.

கே. எம். முன்ஷி.

## தற்காலப் பத்திரிகைகள் :

தற்காலப் பத்திரிகைகள் ஜனங்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத்தான், தூண்டி விடுகின்றன. ஒரு காலத்தில் முதலாளிகளும், ஆசிரியர்களும் உபயோகமற்றகீழ்த்தரமான கதைகளையும் கட்டுரைகளையும் பிரசுரிப்பதற்குத் தயங்கினுர்கள். ஆனுல் இப்பொழுதோ பத்திரிகைகள் அதிகமாக விற்பதற்கு அவ்விதம் செய்ததனுல் குற்றமில்லையென நினைத்து,சிற்றின்ப உணர்ச்சி மிகுந்த கட்டுரைகளையும், ஒன்று அல்லது இரண்டு பக்கம் ஜோதிஷத்தையும், மற்றும் பல பேத்தல்களையுங்கொண்டு பக்கத்தை நிரப்பி விடுகிருர்கள். பத்திரிகைகளிலுள்ள விஷயங்களை வாசிக்க-குடிகாரனுக்குக் கஞ்சா உருண்டைபோல—பெரிய பெரிய போட்டிப் பரிசுகளையும், மற்றும் புஸ்தகப் பரிசு, துணிப் பரிசு, சமையற் பாத்திரப் பரிசுகளையும் வைத்து வாசகர்களைத் தங்கள் தூண்டில்களில் இழுத்து விடுகிருர்கள். வர வர போட்டிப் பரிசுகளுக்குப் பிரதான ஸ்தானம் கொடுத்து, அதன் பரிசுகளை உலகத்தாருக்குப் பறைசாற்றுகிருர்கள். இதனுல் பொது ஜனங்களுக்கு ரஸிக்கும் தன்மை குறைகிறது. ஆசிரியர்கள் அவர்களை முட்டாள்களாக்கி விடுகிருர்கள்.

ஹாமில்டன் பைப்.

## ரைஸ் மில் :

ரைஸ் மில் நம் தேசத்துக்குச் சிறிதேனும் சாதகமாயில்லை. இதனுல் சிலர்தான் லாபமடைகிருர்கள். இது பல ஏழைகளின் இடைவேளைத் தொழிலாகிய கைக்குத்தலை அடியோடு அழித்து விட்டது. லட்சக் கணக்கானவர்களுக்கு ஜீவ உணவாக இருக்கும் அரிசியின் சத்தை அழித்து விடுகிறது. மில் அரிசி உண்பவர்கள் சாரத்தைத் தள்ளிச் சக்கையை உண்கிருர்கள்.

" அரிசி "

## வேற்றுமை சில, ஒற்றுமை பல :

இந்தியாவிலிருக்கும் நாம், ஒரே பழக்கத்தையுடையவர்களாயிருக்கிறேம். உயர்ந்தோ, அல்லது தாழ்ந்தோ, இருக்கிறேம். நாம் பேசுவது ஏதாவதொரு இந்திய பாஷைதான். நம் சங்கீதம் இந்திய சங்கீதமே. இவ்வளவு ஒற்றுமைகள் இருக்கும் பொழுது நாம் எல்லோரும் சிறிய வேற்றுமைகளைக் களைந்து சுகமாக இருக்க முடியாதா ? சிறிய வேற்றுமைகளையெல்லாம் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் பெரிதாக விஸ்தரித்துக் காட்டுவது வருந்தத் தக்கதே.

அமர்நாத் ஜா

## சாமான்களின் விலை :

சென்ற யுத்தத்தில் உற்பத்தியாளர்கள் அதிக நஷ்டமடையவில்லை யென்றே கூற வேண்டும். ஏனென்ருல் அதிக விலை கொடுத்து அவர்கள் கோதுமை வாங்கினுல், அவர்கள் உற்பத்தி செய்யும் அரிசியை அதற்குத் தகுந்தாற் போல விலையேற்றி விட்டார்கள். ஆனுல் உற்பத்தியாளர்கள் அல்லாதவர்கள் அவ்வித

மல்ல. அதே போலத்தான் தற்காலத்திலும். விலை யேற்றத்தைத் தவிர பொருளாதாரத்திலும் நெருக்கடி ஏற்படும் போலிருக்கிறது. உணவு பதார்த்தங்களை நாம் எடுத்துக்கொள்வோம். அரிசியின் விலை யேற்றம் பர்மாவிலிருந்து நம் நாட்டுக்கு இறக்குமதி ஆகாததுதான். பஞ்சை எடுத்துக் கொண்டால் அதிலும் பல காரணங்கள் இருக்கின்றன. முதலில் பஞ்சு இறக்குமதி யில்லை, இரண்டாவது யுத்தத்திற்கு அதிகம் செலவாகிறது, மூன்றாவது ஏற்றுமதி அதிகமாகிறது. இதனால் பஞ்சின் விலையேற்றம் தடை செய்ய இயலாததாக இருக்கிறது. ஆனால் அதே சமயம் மக்கள் வாங்கும் அளவு குறைந்து விட்டால், விலை யேற்றம் தகராய் விடும். உதாரணமாகக் கடலைக் கொட்டை வாங்குவது நின்றுவிட்டால் உற்பத்தியாளர் விலையை யேற்றி என்ன பிரயோஜனம்.

இந்தியன் பினான்ஸ்.

## சக்தி :

சக்தி பலபேர்களிடம் ஓர் முக்கியமதிப்பைப் பெற்றிருக்கிறது. ரோம் நகரம் தன் சக்தியை மற்றெல்லாவற்றையும் காட்டிலும்உயர்ந்ததாக எண்ணிற்று. தற்காலத்து ஐரோப்பியத் தலைவர்களும் சக்தியிலேயே அதிக நம்பிக்கை வைத்துள்ளார்கள். அச்சக்தி மற்ற சிறுதேசங்களின்மீது பிரயோகிக்கப்பட்டு, அவைகளின் அழிவுக்குக் காரணமாக இருக்கின்றது. சக்தியில் எதற்காக அவர்கள் அதிக ஆசைவைத்திருக்கிறார்களென்றால், அதனால் அவர்கள் அதிக இன்பத்தை அடைகிறார்கள். ஆனால் அவ்வின்பமோ அழிந்து போகக் கூடியது. பல நூற்றாண்டுகளாகச் செய்த கொலையினாலும், கொள்ளையினாலும் கிடைத்த இன்பம் அழிந்து போகாமல் என்ன செய்யும்?

இந்தியா சக்தியுடையதாக இருக்கவில்லையா? உலக நாகரிகத்துக்கு இது கண்ணாடிபோல இல்லையா? இந்தியாவைப் பார்த்துப் பல நாடுகள் முன்னேற்றமடையவில்லையா? இதுவும் ஓர் சக்தி யில்லை? இந்த சக்தி, புத்தமதத்தின் வழியாக சைனாவிலும், ஜப்பானிலும், உலகத்தின் பல பாகங்களிலும் பரவியது. அன்பும், மரியாதையும், சக்திதான் என்றால், அந்த சக்தி இந்தியாவுக்கு இருக்கிறது.

மேல் நாட்டுக்கல்வி நம்முடைய அறிவைத் தூர்த்து விட்டது வாஸ்தவமே. சென்ற ஐயாயிரம் வருஷங்களாக பிராமணர்கள், மதத்தையும், வேதாந்தத்தையும், அரசியல் சாஸ்திரத்தையும், கலை, சங்கீதம், நாகரிகம் முதலியவைகளையும் படைத்துக் காத்தனர்.

தான் சிருஷ்டித்ததைப் பிறர் ஏற்றுக் கொள்ளக் கட்டாயப் படுத்த அவர்களிடம் துப்பாக்கி கிடையாது. இருந்தாலும் அவர்கள் தங்களுடைய நற்குணங்களினால் நாட்டில் எல்லோராலும் போற்றப்பட்டு வந்தனர். ஆனால் இப்பொழுதோ நாம் அவர்களைக் கீழ்த்தரமாக மதிப்பிடுகிறோம்.

இந்தியா, சந்தேக மில்லாமல் சக்திக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறது. ஆனால் அச்சக்தி நம்நாட்டில் எல்லோரிடமும் அன்பையும் பாசத்தையும் வளர்க்கும்படியாக இருக்க வேண்டும்.

கே. எம். முன்ஷி

(265-ம் பக்கத் தொடர்ச்சி)

“ஜீதே ஜேஷ் ஹமா” என்று போர் வீரர்கள் முழங்கும் சுதந்திர கீதத்தை உருப்போட்டுப் பாராயணம் செய்யலாம் போலிருக்கிறது.

படத்தில் சம்பாஷணைகள் அதிகம். ஆகையால் பாஷை தெரிந்திருந்தால்தான் படத்தைப் பூரணமாக ரஸிக்க முடியும். அதற்காகப் பாஷை தெரியா விட்டாலும் படத்தை ஒரு முறைக்கு இருமுறை பார்க்காமலிருக்கக் கூடாது.







## BOOKS FOR ALL

| | |
|---|---|
| **Naked Shingles** By Manjeri S. Isvaran | 1 8 |
| **Two Plays of Bhasa** By A. S. P. Ayyar, M.A., I.C.S. | 1 8 |
| **Songs from the Soul** By Anilbaran Roy | 1 4 |
| **Kandan, the Patriot** By K. S. Venkataramani | 2 0 |
| **Men in the Limelight** By Khasa Subba Rao | 1 0 |
| **Jatadharan & other Stories** By K. S. Venkataramani | 1 8 |
| **Paper Boats** By K. S. Venkataramani | 1 0 |

**SVETARANYA ASHRAMA,**
5, Venkatesa Agraharam,
Mylapore, Madras.

சந்தாதாருக்கு அறிக்கை.

சந்தாத் தொகையைச் செலுத்தாமல் பாக்கி வைத்திருப்பவர்கள், பாரத மணி ஆபீஸிலிருந்து 'ரிமைண்டர்' கடிதத்தை எதிர்பாராமல் வருஷசந்தாத் தொகை ரூ. 3—0—0யும் தாமதிக்காமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜர்.